ஓம் பரப்பிரம்மணேநம:

அமிர்தகுணபோதினி

(முந்திய "ஆநந்த குணபோதினி" யே இப்பொழுது "அமிர்த குணபோதினி" என்ற புதுப்பெயருடனும் வெளிவருகின்றது.)

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கி, ஆநந்தத்தைத் தரவல்லதான அநுபவ விநோத ஞான கலா விலாஸங்கள் நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் - எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப ; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்." (திருக்குறள்.)

கமலம்-3. Vol. 3. | சென்னை: விபவ ஞு ஆடி மீ 1உ 1929-ம் ஞு ஜூலை மீ 15உ | இதழ்-28. No. 28.

ஆநந்த தரிசனம்

வேத நாயகனெவ னேலி வேதங்களுணராப்
போத நாயகனெவன் பலவுயிர்தோறும் புகுந்தும்
தீதுருவகைமுத்தொழில் ஒழிவறச் செலுத்தும்
ஆதிநாயகனெவன் அவன் அடிமலர் அடைவாம்.

"இறையில்லாத இடமில்லை." இதன் பொருள் ஈசுவரன் இல்லாத இடமில்லை யென்பதாம். ஈசுவரன் எங்கு மிருக்கிறாரென்று சாஸ்திரங்களெல்லாம் கோஷிக்கின்றன. பெரியோர்களெல்லாம் கூறுகின்றனர். ஆயினும் அவரைக் காண்பதரிது. இதற்குக் காரணம் நமக்குக் காணும் சக்தியில்லாததே. சக்தி உண்மையிலிருந்தும் அது பயன்படாமற் போகிறது. அதை மறைத்துக்கொண்டிருக்கும் மாயை நீங்கினால் ஈசுவரன் நமது கண்ணுக்குப் புலப்படுவார். அந்த மாயை ஞானத்தாலேதான் தீரவேணும். ஞானமுண்டாவதற்காகப் பல பெரியோர்களை ஆசிரயிப்பதுடன் பகவானுடைய கிருபையும் அவசியம். ஆதலின் அதை அடைவதற்காக அவரது பாத பத்மங்களைத் தியானிக்கக்கடவோம்.

"மாயை, வித்தை" என்னு மிரண்டு குணங்களில் மாயையால் பகவான் மறைக்கப்படுகிறார். வித்தையால் அதாவது உண்மை யறிவாகிய ஞானத்தால் அவருடைய நிஜஸ்வரூபம் தெரிகிறது. கையிலுள்ள குடை சூரியனை மறைப்பதுபோல் மாயை பரமாத்மாவின் ஸ்வரூபத்தை மறைக்கிறது. குடையை எடுத்துவிட்டால் சூரியனுடைய பிரகாசம் தெரிகிறது போல், மாயை நீங்கினால் அதாவது ஞானமுண்டானால் பரமாத்மாவின் ஸ்வயம் பிரகாசம் நன்றாகத் தெரியும். குடையானது நமது கண்ணை மறைக்கிறதே யன்றி சூரியனை மறைக்கவில்லை. சூரியனது ஒளியும் அதனால் மழுங்கவில்லை. அது போல் பரமாத்மாவின் ஸ்வயம் பிரகாசமானது மாயையால் கெடவில்லை. மாயை நமக்குப் பிரமையை யுண்டாக்குகிறதேயன்றி பரமாத்மாவின் பிரகாசத்தைக் கெடுக்கவில்லை. பரமாத்மா எப்போதும் ஜோதிமயமாகவே விளங்குகிறார். மனதை வெளியேயுள்ள பொருள்களிற் செல்லவிடாமல் பரமாத்மாவினிடமே செலுத்தினால் நாளடைவில் அது அங்குமிங்கும் ஓடாது வசப்பட்டு ஒரே நிலையில் நின்று, வேறு பொருளை நினைப்பதென்னும் தொழிலை விட்டுவிடும். பின்னர் பரமாத்மாவின் ஸ்வரூபம் தானாகவே தோன்றும்.

***

"தன் ஊருக்கு யானை அயலூருக்குப் பூனை" என்பது பழமொழி. பூனையாயிருக்கையில் ஹிம்ஸிப்போர் பூனை யானையாய் விடும்போது அதன் பலனை யறிவார். இடம் மாறினால் நிலைமையும் வேறாகும். எல்லா நலமும் பேதப்படுந்தான். ஒரு காட்டில் வசிக்கும் காளை யொன்று ஸிம்ஹத்தால் துரத்தப்பட்டுத் தப்பித்துக்கொள்ளவேண்டி மலைக்குகை யொன்றில் புகுந்து கொண்டது. அக்குகையில் ஏற்கெனவே ஓர் இடையன் தன் ஆட்டு மந்தைகளுடன் வசித்துக்கொண்டிருந்தான். தன்னை வளர்ப்பவனிருக்கும் தைரியத்தால் அற்ப பிராணியாகிய ஆடு அக்காளையை முட்டத்தொடங்கியது. காளைக்கு இரண்டு பக்கத்திலும் சங்கடம். ஒன்று—வெளியே போனால் ஸிம்ஹம் வாயிற்போட்டுக் கொள்ளுமென்பது, மற்றொன்று—ஆட்டை எதிர்த்து முட்டினால் ஆட்டுக்காரனான இடையன் தடியாலடித்து குகைக்கு வெளியே துரத்திவிடுவானென்பது. ஆதலின் தான் இருக்கும் நிலையை யோர்ந்து அவ்வாட்டைப் பார்த்து "நல்லது! அடே, உன்னாலான மட்டும் முட்டிப்பார்; நான் இப்போது ஸஹித்துக் கொண்டுதா னிருப்பேன்; என் சத்துருவாகிய சிங்கம் தொலையட்டும், அப்போது காண்பிக்கிறேன்—ஆட்டின் பலத்தையும் காளை மாட்டின் பலத்தையும்" என்றது. இதனால் ஒருவனுக்கு ஆபத்து உண்டானபோது அவனை ஏழை எளியவர்கள் கூட ஹிம்ஸிக்கத் தொடங்குவரென் றறிகிறோம், ஆனால் அப்படிச் செய்வது நல்லோருக்கு அழகல்லவென்ப.

***

"கர்ம பலன்" கர்மம் உண்டென்பது ஸர்வ மதஸ்தர்களின் ஸித்தாந்தம். கர்மத்துக்குப் பலனும் கர்மத்தைச் செய்கிறவர்கள் பலனை யனுபவிப்பதும் எப்போதும் நிச்சயம். இந்தக் கர்மமானது ஜீவனுக்கு எப்போது உண்டாயிற்றென்று கேட்பது பிசகு. கர்மம் அநாதியே. ஆயினும் அதற்கு நாசமுண்டு. விதையில் முளைக்கும் சக்தி எக்காலத்தில் ஏற்பட்டதென்று யாரும் சொல்லமுடியாது. விதை யுண்டானபோதே முளைக்கும் சக்தியும்

உண்டாயிருக்கிறது. அதுபோல் ஜீவன் உண்டானபோதே கர்மமும் உண்டாயிருக்கிறது. விதையைச் சட்டியிற் போட்டு வறுத்தால் முளைக்கும் சக்தி போய்விடும். அதுபோல் ஜீவன் ஞானத்தை யடைந்தால் கர்மம் நாசமாகும்.

***

“புத்தியும் ஞானமும்” புத்தி என்பது என்ன? ஞானமாவது யாது? புத்தி யென்பது நிறையும் உருவமுமுள்ள பொருள் அன்று; அதை ஸ்பரிசிக்க முடியாது. நேரில் காணவும் முடியாது. நமது கையிற்றாங்கிப் பிறருக்குக் காட்டவும் முடியாது. ஆகிலும் புத்தியினிருப்பை யறிகிறோம். அதுபோல் ஞானமாகிய தீபம் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கிறது. இது பகவத் கிருபையால் எல்லா வஸ்துக்களையும் காட்டக்கூடும். ஞானமானது மறைந்திருக்கும் பொருள்களைக் காண்பதற்குரிய பிரகாசம். ஞானம் இருப்பதாற்றான் நம்முடைய நிலைமையை நாம் அறிகிறோம். ஒரு பொருளுக்கும் மற்றப் பொருள்களுக்குமுள்ள வித்தியாஸத்தை யறிவது புத்தியின் காரியமேயாம். இப்படி புத்தியின் காரியங்களை மட்டும் அறிகிறோமே யன்றி புத்தியை நாம் கண்ணாற் கண்டதில்லை. இந்தப் புத்தியை நாம் உண்மையாகக் காணாத போது எந்த வஸ்துவைத்தான் உண்மையாகக் காணமுடியும்? இந்த ஸமயத்தில் நீ புத்திசாலியா யிருக்கிறாய், ஸுஷுப்தி அவஸ்தையில் அதாவது சொற்பனமின்றித் தன்னை மறந்து நித்திரை செய்கையில் உன் புத்தி எங்கே போயிற்று? அப்போது உன்னிடம் இல்லாதது எது? சரீரம் இப்போது இருப்பதுபோல் அப்போதும் இருக்கிறது. ஸ்வாசத்துக்கும் குறைவில்லை. இரத்தமும் தேகத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. சரீரம் அழியவில்லை. எல்லாம் முன்போலவே இருக்கின்றன. ஒன்றுமட்டும் இல்லை. அதாவது புத்தியென்னும் பிரகாசமில்லை. ஞானமென்னும் ஒளியில்லை. அதனால்தான் உன் ஞாபகம் உனக்கு இல்லை. புத்தியும் ஞானமும் உதயமானதும் யாவற்றையும் நீ அறியக்கூடியவனாகிறாய்.

***

“ஸ்ரீராமஜெயம், ஸ்ரீ கிருஷ்ண சகாயம்” என்று ஜனங்கள் சொல்லுகிறார்கள். என்? ஸ்ரீராமனை பஜிப்பதால் ஸர்வ ஜெயங்களும் உண்டாகுமாம். ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியை உபாசிப்பதால் சகல உதவிகளும் கிடைக்குமாம். ஸ்ரீ இராமப்பிரபுவானவர் இராவண ஸம்ஹாரம் செய்து அயோத்திக்குத் திரும்பிவருகையில் அவரது வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்த பரதன் எல்லோரும் தன் அண்ணனுக்குத் தொண்டு செய்வதையும், அடுத்த தம்பியாகிய லக்ஷ்மணன் எப்போதும் ஸமீபத்திலேயே இருந்து ஊழியம் செய்வதையும் கண்டு, ஐயோ! நாம் இத்தனை நாளாக ராமமூர்த்திக்கு சிசுருஷை செய்யும் பாக்கியத்தைப் பெறாமற்போனோமே யென்றெண்ணித் துக்க மடைந்தார். ஏதேனும் செய்யவேண்டிய ஊழியம் பாக்கியுண்டோ வென்றாலோசித்தார். எல்லோரும் இராகவப் பெருமானுக்குத் தொண்டு புரிகின்றனர். இவர் செய்யக்கூடிய ஊழியம் ஒன்றுமில்லை. கடைசியாக அவர்

ஒரு மனிதனது யோக்கியதையையும் பெருமையையும் அவன் ஸம்பாதிக்கும் பணத்தைக் கொண்டு தீர்மானிப்பது மடத்தனம்.

நடந்துவரும் வழியில் முளைத்துள்ள புற்பூண்டுகளைப் பிடுங்கி செப்பனிட்டாராம். இப்படிப் பரதனே தம்முடைய திருக்கையால் தொண்டு புரிந்திருக்க, அற்பர்களாகிய நாம் அவரை ஸதா தியானிப்பது அவசியமன்றோ? எவன் ஒருவன் ஸ்ரீராமஸ்மரணை செய்கிறானோ அவன் சகல ஜெயங்களையும் அடைகிறானென்பது நிச்சயம்.

***

"**முக்குணங்கள்**" மனமானது ஸத்வ-ரஜஸ்-தமோ-குணங்களையுடையதாயினும், ஸத்வகுணமே மிகுதியா யுடையது. இது அதன் இயற்கையாயினும், ராஜஸ-தாமஸ குணங்களை மனுஷ்யன் அதிகமாய்க் கொள்வதால் பகவானை அறிய அசக்தனாகிறான். பெரியதாகிய தூண் ஒரு சிறிய பொந்தில் நுழைய முடியாது. அதுபோல் மேன்மை பொருந்திய ஸத்வ குணத்தால் தரிசிக்கக்கூடிய பகவானை இராஜஸ-தாமஸங்களால் காணமுடியாது. கண்ணாடிக்குள்ள பளபளப்பு மண் சட்டிக்கு வராது. ஆகவே, கண்ணாடியில் நமது பிரதிபிம்பம் தோன்றுகிறதேயன்றி மண்சட்டியில் தோன்றுகிறதில்லை. இதைப்போல் மண்சட்டிகளாகிய பாபம் நிறைந்த உள்ளத்தையுடைய மனிதர்களாகிய நமக்கு பகவான் பிரத்யக்ஷமாகிறதில்லை. கண்ணாடிபோன்ற சித்த சுத்தியை வுடையவர்களுக்கு ஈசுவரன் எப்போதும் காணப்படுகிறார். அவரைக் கண்டு அவர்கள் ஸதா ஆநந்தத்தை யடைகிறார்கள். அவர்களுடைய மனம் உலக சுகத்தில் திரும்பாமலிருப்பதால் நாம் சிலவேளைகளில் அத்தகைய ஸாதுக்களைப் பைத்தியக்காரர்களென்கிறோம். பைத்தியமானது நம்மைத்தான் பலமாய்ப் பிடித்துக்கொண்டதேயன்றி அவர்களைப் பிடிக்கவில்லை. அவர்கள் பகவானைத் தரிசிப்பதில் பைத்தியம் கொண்டிருக்கிறார்கள். நாம் உலக சுகத்தை யடைவதில் பைத்தியம் கொண்டிருக்கிறோம். அவர்களின் பைத்தியம் முக்தியையும், நமது பைத்தியம் துக்கத்தையும் தருகின்றன.

***

"**உளவின்றி களவு போகாது**" என்னும் பழமொழி உண்மை. எந்த ஊரிலேனும் களவு போனால் அந்த ஊர்க் காவற்காரனுக்குத் தெரியாமலிராது. அவனுடைய உடந்தையின் பேரில்தான் திருடன் கன்னம் போடுவான். இதுபோல் மனதின் ஸகாயமின்றி எவ்வித பாபமும் நம்மை யணுகாது. ஒரு கெட்ட எண்ணமானது நமது ஹிருதயத்தில் நுழையுமுன் வாசற்படியில் காவற்காரன்போல் நின்றுகொண்டிருக்கும் மனதின் ஸம்மதத்தையடைகிறது. மனுஷ்யன் அவிவேகியா யிருப்பதாற்றான் அவனுடைய மனம் அவனை மெள்ளத் தன் வயத்தனாக்கி ஏமாற்றிப் பாபங்களை வரவழைக்கிறது.

***

"**பாவனையிலும் தாரதம்மியம்**" உலகத்திலுள்ள ஸ்திரீகளை யெல்லாம் பரதேவதையாய் எண்ணவேண்டுமென்பது ஒருவித நியாயம். ஆனால் தனது ஸ்வ ஸ்திரீயையும் அவ்வாறு எண்ணிப் பூஜிப்பது கூடுமோ? ஆகவே, பாவனையிலும் தாரதம்மியம் உண்டு. ஒருவேளை தன்னுடைய ஸ்திரீயைப் பரதேவதையாகப் பாவிக்கும் பக்குவ குணம் ஒருவனுக்கு ஏற்பட்டால் அவன் அன்றுமுதல் அவளைவிட்டு நீங்கி யிருக்கவேண்டியதுதான். ஓர் ஊரில்

எத்தனை படித்தவர்களானாலும் நல்லறிவில்லாதபேர் உறவு வேண்டேன்.

படிப்பாளியான பிரம்மசாரி எந்தக் கன்னிகையைக் கண்டாலும் தான் பரமேசுவரியாகப் பாவிக்கிற வழக்கமுண்டென்றும், ஆனதால் தான் யாரையும் விவாகம் செய்ய முடியாதென்றும் சொல்லிக்கொண்டிருந்தான். அவனுடைய வித்தையையும் யௌவனத்தையும் புத்தி சாதுர்யத்தையும் கண்டு மயங்கிய ஒரு கன்னிகை அவனை நோக்கி, "ஐயா, நீர் எல்லாப் பெண்களையும் பரமேசுவரியாகப் பாவிப்பது எனக்கு மகத்தான ஆநந்தத்தை விளைக்கிறது. என்னையும் பரமேசுவரியாகப் பாவிக்கிறீரன்றோ? அந்த ஒரு காரணந்தானே என்னை நீர் கலியாணம் செய்துகொள்ளாததற்குத் தடை" என்று கேட்டாள். அவன் "ஆம்" என்ற க்ஷணம்—"ஐயா, நீர் என்னைப் பரமேசுவரியாகப் பாவிப்பதுபோல், நானும் உம்மைப் பரமேசுவரனாகப் பாவிக்கிறேன்; ஆகவே என்னை நீர் விவாகம் செய்துகொள்ளத் தடையேயில்லை" யென்றாள். பிரம்மசாரி அவளுடைய யுக்திக்கும் நியாயத்துக்கும் கட்டுப்பட்டு மனஸ்பூர்வமாய் அவளை விவாகம் செய்துக்கொண்டான். ஆகவே கர்மமும் பாவனையும் ஸந்தர்பத்துக் கேற்றபடி இருக்கவேண்டும்.

***

"கௌரவப் பட்டங்கள்" துரைத்தனத்தாரின் மூலம் பட்டம் பெற்றவனுக்குப் பணச்செலவுண்டு. பட்டம் பெறாதவனுக்கு அஃதில்லை. பட்டம் பெற்றவன் ஏதேனும் வழக்கில் சிக்கினால் பலருக்கும் அது நல்ல வேட்டையாகிறது. இத்துடன் எந்த கூட்டத்திற்கும் பட்டக்காரன் வந்து சந்தாவுக்காகக் கையெழுத்திடாவிட்டால் அவனிடம் அதிகாரிகட்கு அப்பிரீதி ஜனிக்கிறது. இந்தப் பட்டங்களைவிட உத்தமன், பக்தன், தயாளு, ஸத்தியவந்தன் என்ற பட்டங்களை உலகத்தாரிடமிருந்தும் பெறுவது எத்தனையோ சிலாக்யம்.

***

"தேகம், புத்தி: ஆத்மா" ஆகிய மூன்றும் மனிதன் கவனிக்கவேண்டிய விஷயங்கள். சரீரத்தைப் போஜனாதிகளால் வளர்த்து புஷ்டி செய்வது புத்தியால் செய்யவேண்டிய கருமங்களுக்கு ஆதாரமா யிருக்கவேயன்றி வேறில்லை. புத்தியால் ஊகித்துப் பற்பல சாஸ்திரார்த்தங்களையும் அறிந்து வித்வானாவது நித்யாநந்தகரமான ஆத்ம ஞானத்தை யடைவதற்கேயன்றி வேறில்லை. ஆகவே, நோயற்ற சரீரத்தால் புத்தி விர்த்தியும், புத்தி விர்த்தியால் ஞான விர்த்தியும் உண்டாகிறது. இவ்வாறு தேகமும் மூளையும் ஆத்மாவும் ஒன்றுக்கொன்று பொருந்தி அமைந்திருப்பதைக் கவனித்து, சாந்த மனத்தினராக ஆத்மார்த்தமான கிரந்தங்களைப் படித்து ஞான சம்பந்தத்தை யடையவேண்டும். கர்மங்களில் ஞானஹேதுவான கர்மமே ஸத்கர்மமென்பதை அறியக்கடவோம்.

விட்டுக்காரன் ஒரு பக்ஷணத்துக்கு ஆசைப்பட்டால், வீடுமுழுதும் புசிப்பதற்கு வேண்டிய பக்ஷணங்களுக்கான செலவு செய்தால்தான் அவனுக்கு இரண்டு பக்ஷணம் கிடைக்கும்.

எப்போது நோக்கினும் கூடவே பத்துபேருடனும் வருகிற விருந்தினர் சிலர் உண்டு. இவர்களின் மூளைக்கு மற்றவரின் கஷ்டம் எப்போது தெரியுமோ?

"ஆநந்த குணபோதினி"யின் பெயர் மாற்றம்.

இறைவனின் திருவருளால் இதுகாறும் "ஆநந்த குணபோதினி" என்ற பெயருடனும் நடைபெற்று வந்துள்ள இப்பத்திரிகையை இந்த ஆடிமாத முதற்கொண்டு "அமிர்த குணபோதினி" என்னும் புதுப்பெயரால் அழைத்து முன்னிலும் மிகு மேன்மையாக நடத்துவதென்று தீர்மானித்திருக்கின்றோம். அதே ஆசிரியர், அதே தலைவரின்கீழ் பத்திரிகையின் கொள்கைகள் எவற்றிலும் மாறுதலின்றிப் பெயர்மட்டும் "ஆநந்தம்" என்பதற்குப் பதிலாக "அமிர்தம்" என்று திருத்தப்பட்டுள்ளது.

அமிர்தம் என்பது மகா சிரேஷ்டமானது. அது ஒரு அழகிய பெயர். தேவருணவு, இனிப்பு, இறவாமை, பாக்கியம், முக்தி—என்று அதற்குப் பல பெயர்கள் உண்டு. அமிர்தன் என்றால் கடவுளுக்கு அது ஒரு திருநாமம். அமிர்தத்திற்கு மேற்பட்டு ஒருபொருளும் இருக்கவில்லை. அமிர்த வசனம் யாவருக்கும் பிரீதிகரம். அமிர்த பானத்தை விரும்பாதவர் எவர்? தேவர்கள் அமிர்தத்தை யாசித்து பகவானின் பரம கருணையால் அதைப் பெற்று எல்லையற்ற ஆநந்தத்தை அநுபவம் செய்தனர். அமிர்தம் தங்கியிருக்குமிடத்தில் அதற்கு அடுத்ததாக ஆநந்தம் என்பதும் தொடர்ந்து நிற்கும். ஆத்ம பரவசத்திற்கு அமிர்தம் முதற்காரணமாயும், அந்த அமிர்தம் கிடைத்தபின் உண்டாகும் ஆநந்தம் அந்த முதற்காரணத்தின் வழித்தோன்றலாயு மிருக்கின்றது. ஆதலின், "ஆநந்தம்" என்ற பதத்தால் "ஆநந்த குணபோதினி" என்பதைவிட, ஆநந்தத்திற்கு ஏதுகரமான "அமிர்தம்" என்ற பதத்தால் "அமிர்த குணபோதினி" என்று இப்பத்திரிகையை அழைக்க விரும்புகின்றோம்.

நமது அன்பிற்கினிய நேயர்கள் "அமிர்த குணபோதினி" என்னும் புதிய பெயர்கொண்டு வெளிவரும் நமது பத்திரிகையை வழக்கம்போல் ஆர்வத்துடனும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம். நமது "அமிர்த குணபோதினி" முன்னிலும் பதின்மடங்கு அதிகமான வியாபகத்துடனும், பிரசித்தமான கீர்த்திப் பிரதாபத்துடனும் தமிழுலகமெல்லாம் சென்றுலாவி, அமிர்த வருஷம் வருஷிக்கச் செய்யுமாறு பகவானைப் பிரார்த்திக்கின்றோம்.

எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு,

பத்திராசிரியர்.

அமிர்தகுணபோதினி

விபவ௵ ஆடி௴ 1௳

ஸஹோதரத்வம், ஸமத்வம், ஸ்வதந்திரம்.

ஆச்சரியகரமான சக்திகள் மூன்று உள்ளன. அவை ஸஹோதரத்வம், ஸமத்வம், ஸ்வதந்திரம் என்பனவாம். ஸஹோதரத்வம் என்பது ஒரே தாய் வயிற்றில் பிறந்த குழந்தைகளுக்குள் இருக்கும்படியான அன்னியோன்னிய சிநேக உணர்ச்சியைக் குறிப்பிடுகிறது. ஒரு தாய் வயிற்றில் பிறந்தவர்கள் இயற்கையிலேயே ஒரே நடத்தையுள்ளவர்களாயும், தமது தாயினால் ஒரேமாதிரியான புத்திமதிகளை ஊட்டப்பெற்றவர்களாயும், அதே தாயினிடத்தில் அன்பு செலுத்தி அவளை ஸந்தோஷிப்பிக்கக் கடமைப்பட்டவர்களாயும் இருப்பதால் அவர்களுக்குள் ஒருவித அன்னியோன்னிய சிநேகம் தானாகவே உண்டாகின்றது. இவ்விதமாக ஒருவருக்கொருவர் பாராட்டும் நட்புதான் ஸகோதரத்வம்.

உலகத்திலே உயிரில்லாத வஸ்துக்கள்கூட ஒரே இயற்கையுள்ளவைகளானால், ஒரு இடத்திலேயே குவிந்து சேருகின்றன. பூமியில் பொன் எடுக்கும் சுரங்கங்களில் இதர லோஹங்கள் விசேஷமாகக்கிடைக்கமாட்டா. இரும்புக்கனியில் இரும்புதான் கிடைக்கும். அசேதன வஸ்துக்களே இம்மாதிரி ஒன்றையொன்று ஒட்டி நிற்கும்போது, மனிதர் கூட்டத்தில் என் இந்த ஸஹோதர உணர்ச்சியைக் காணமுடியாது? இயற்கையிலேயே மானிட வர்க்கத்துக்கு இந்த உணர்ச்சி உண்டு. ஆனால் சில நூற்றாண்டுகளாக நமது பாரததேசத்தில் இவ்வுணர்ச்சி குறைந்துகொண்டே வருகிறது. இதற்குக் காரணங்கள் அநேகம் இருக்கின்றன. அவைகளில் முக்கியமாகத் தென்படுகிறது சுயநல இச்சைதான். இந்த இச்சையின் கொடுமையால்தான் பழய காலங்களைப்போல ஜனங்கள் பெருங்

கப்பல் நிறைய நமது சிறுவர்களை வெளிநாடுகளுக்குப் பயில அனுப்புவதைக் காட்டிலும், நல்ல அஸ்திவாரக்கல்வியும், சலியாத ஊக்கமும், புகழத்தக்க குணமும் செயல்களையு முடைய சிலரைமட்டும் அங்கே அன்ப்புவது நலம்,

குடும்பங்களாய் வாழும் வாழ்க்கை யற்றுப்போய்த் தனித்தனிப் பிரிந்த குடும்பங்களாகிவிட்டன. குடும்பத்திற்கு நேரிட்ட பொல்லாப்பு நாட்டிற்கும் நேரிட்டது. ஒருவன் சுயநலத்தை நாடி அதுவே யோசனையாக இருக்கும்பொழுது அயலாரின் சுகதுக்கங்களுக்காகப் பாடுபடுவதற்கு அவகாசமிராது. ஒரே தாயின் வயிற்றில் பிறந்தபோதிலும் அவனை மறந்துவிட்டு தான்மட்டும் தன் மனைவி மக்களுடன் சுகமடைய வேண்டுமென்றும், சொத்துக்களைத் தேடிக் கொள்ள வேண்டுமென்றும், எண்ணியிருப்பவன் தன் ஸஹோதரர்களின் துயரங்களை நீக்க முயலுவானோ? எனவே சுயநல இச்சைப் பேய் ஸஹோதரத்வத்தைத் துண்டித்துவிடுகின்றது. தூர ஒதுங்கியும் போகின்றது. தர்மத்தையும் மறக்கவைக்கின்றது. இறுதியில் ஸர்வநாச ஹேதுவாகவும் முடிகின்றது. நமக்கு சக்தி இருப்பது உண்மையாகில், நாமும் உலகில் இன்பம்கொள்ள விரும்புவதாகில் இந்த சுயநலப்பேயைத் துரத்தி ஸஹோதரத்வத்தைத் தழுவிச் செல்லவேண்டும்.

ஸ்வதந்திர மடைவதற்கு ஸஹோதரத்வம் ஓர் பெரிய ஸாதனம். நாட்டின் ஸ்வதந்திரத்தை நிலைநிறுத்திக் காத்துவருவதற்கு ஸஹோதரத்வமே சிறந்த வழியாகும். ஸஹோதரத்வமே ஒரு ஜாதியைத் துக்கமடையாம லிருக்கும்படிச் செய்விக்கும். ஸஹோதரத்வமே ஸந்தோஷ ஹேதுவாம். ஜனஸமூகம் இதை ஆதரிக்க வேண்டியது கடமையாகும். ஜனஸமூகம் நலம்பெற இதுவே வழி. ஸஹோதரத்வந்தான் "ஸமத்வ"த்தைப் பூர்த்தி செய்விக்கும் புனிதமுறை. ஸஹோதரத்வமே ஜாதீய ஜன ஸமூகத்தின் அஸ்திவாரக்கல். ஸஹோதரத்வமே ஜன ஐக்கியத்தின் அழியாக்கோட்டை. ஸஹோதரத்வமே அன்பின் அருமையான வடிவம். அக்கா, தம்பி, அண்ணா, தங்கை யென்று கொள்ளும் உறவுதான் ஸர்வோத்தமமானது. உலகத்திலுள்ள ஒவ்வொரு மதமும் ஸஹோதரத்வத்தையே போதிக்கின்றது.

* * *

ஸஹோதரத்வம் இருந்தால்தான் ஸமத்வம் பாராட்டி நாட்டினரை நடத்திவர முடியும். ஸ்வதந்திரமடைய தேசத்தவர்களுள் ஸமத்வம் வேண்டும். ஸமத்வம் என்றால் ஸம உணர்ச்சி என்பது பொருள். அதாவது தன்னுடைய சொந்த நன்மைக்காக ஒருவன் எப்படி நடப்பானோ, அப்படியே எல்லா இடங்களிலும் தானும் நடந்துகொள்வதுதான். அயலார் தன்னிடத்தில் எப்படி நடந்து கொள்ளவேண்டுமென்று விரும்புகிறானோ, அவ்விதமே தானும்

முதலில் இந்தியனாக இரு, உன்னைப்பற்றி எப்பொழுது நினைத்தாலும் நீ "இந்தியன்" என்றே உன்னைக் கருதுவாயாக. நீ ஒரு மதராஸி, வங்காளி என்ற சிறிய எண்ணத்தை அறவே மறந்துவிடு.

அவர்களிடம் நடந்துகொள்வதுதான் ஸமத்வம் என்பது. ஸமத்வம் இயற்கையிலேயே கடவுளால் மனித ஸமூகத்திற்குப் பிரசாதிக்கப் பட்டிருக்கும் திவ்ய கட்டளை. பரம கருணாநிதியான பகவான் மனிதர்மேல் திருவுள்ளமுவந்து தந்தருளி யிருக்கும் ஸ்வதந்திரமென்னும் திவ்ய தீபத்திற்கு ஸமத்வமே தைலமாகும். ஸ்வதந்திரமடைவதற்கு வழியும், அடைந்தபின் அதைக்காப்பாற்றவும், ஒருவனுக்கோ ஒரு ஜாதிக்கோ ஆவசியகமாய் வேண்டியது ஸமத்வமே. ஸமத்வந்தான் ஒரு சுத்த ஜாதீய நிலையின் இரண்டாவது தத்துவம். ஸமத்வமே ஜீவகாருண்யத்தின் அஸ்திவாரம். ஸமத்வமே பரோபகாரத்தின் ஸாரம்.

இந்த ஸமத்வத்தை இயற்கையான கடவுள் சிருஷ்டியிலேயே காணலாம். உலகத்திலுள்ள எதையும் "நம்மைப்போலவே தான் அதுவும்" என்று எண்ணி நடத்தினால், அதற்கும் ஒரு ஸந்தோஷம்; நமக்கும் ஓர் மனமகிழ்ச்சி. ஓர் புஷ்பச் செடி யிருக்கிறது. அதை நல்ல இடத்தில் வைத்து எருவிட்டுத் தண்ணீர் பாய்ச்சினால்தான் அது நாம் விரும்பும் புஷ்பத்தைக் கொடுக்கும். நாம் அவ்வாறு அச்செடிக்கு எந்த உணர்ச்சி கொண்டு செய்கிறோம்? மனிதன் உண்ணாவிடில் உயிர் பிழைத்திரான்; அவ்விதமே செடிக்கும் நீர் இறைக்காவிடில் செடி பட்டுப்போய்விடுமென்ற உணர்ச்சியால்தான். கிளி முதலிய பக்ஷிகள், நாய் குதிரை முதலியவைகளிடத்திலேயும் இந்த உணர்ச்சியினால்தான் பக்ஷமாய்ப் போஷித்து நடத்திவருகிறோம். அசேதனங்கள் விஷயத்திலேயே இப்படியென்றால், பகுத்தறிவுள்ள சேதனர்களான மனிதர்கள் விஷயத்தில் இந்த ஸமத்வ உணர்ச்சி எவ்வளவு உண்மையா யிருக்கவேண்டும்? அதிலும் ஒரே தேசத்தில் பிறந்து வளர்ந்தவரும் ஒரு ஜாதியார்கள் விஷயத்தில் இந்த ஸமத்வ உணர்ச்சி எவ்வளவு பொருத்தமானதாய் விளங்குகிறது? அதிலும் அநேக மஹான்களும் கருணையங்கடலான கடவுளும் அவதரித்து இந்த ஸமத்வத்தை அனுஷ்டித்து, மற்ற தேசத்தவர்களுக்கு இதை ஓர் சிறந்த உதாரணமாய்க் காட்டி நடத்திவந்த நமது பாரத நாட்டிற்கு இந்த ஸமத்வ உணர்ச்சி எவ்வளவு ஆவசியகமானது?

ஸமத்வம் என்பது ஒரு ஜாதிக்கு வெளியிலிருந்து கிடைக்க வேண்டியதன்று. ஒவ்வொரு மனிதனும் தனது மனோபாவத்தினாலேயேதான் இந்த ஸமத்வ உணர்ச்சியை விருத்தி செய்து, அயலாரிடத்திலும் இந்த உணர்ச்சியை ஜ்வலிப்பிக்கச் செய்யவேண்

இந்தியாவுக்கென்று எப்படியாவது ஒரு சேவகம் செய். கோழை மனதின்னவனாயிராமல் மனிதனாக இரு. அப்பொழுது மனித குணங்கள் உன்னிடம் வரும். பிறரையும் மனிதராக்கச் செய்ய முயல்.

டும். ஸமத்வம் என்பது ஸாமான்யத்தில் பழக்கத்திற்கு வந்து விடாது. அந்த உணர்ச்சியை நன்கு திடப்படுத்தி அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரும்போது பல தடைகள் ஸஹஜமாய் உண்டாகும். உலகத்தில் புத்திமான் மூடனின் பிசகைக் கண்டு மனமிரங்கி அந்தத் தப்பைத் திருத்திவைக்க முயல்வான். அதுபோல், அந்த ஸமத்வத்தைப் பழக்கி வரும்போது உண்டாகும் கஷ்டங்களை அறிஞர்கள் சுலபமாய் நிவர்த்தித்து விடுவார்கள்.

மனித இயற்கையில் ஒருவன் பணக்காரன், மற்றொருவன் ஏழை என்றிருந்தாலும் சரி,—ஒருவன் மூடன், மற்றொருவன் புத்திமான் என்றிருந்தாலும் சரி—பசிப்பிணி எல்லாருக்கும் உண்டு. சுகமாய் வாழவேண்டுமென்ற எண்ணம் எல்லாருக்கும் உண்டு. இது ஸ்வயமாய் ஒவ்வொருவர் மனதிலும் உண்டாகக்கூடியதே. இதற்கு மாறாக ஒருவன் எப்பொழுதும் பணக்காரனாகவே இருந்துகொண்டு கடவுளின் கட்டளையான ஸமத்வத்தை, தனது பணச்செருக்கிலும், அதிகார அகந்தையிலும் மறந்து, தன் இச்சைப்படி மற்ற ஏழைகளைக் கொடுமையாய் நடத்த ஆரம்பித்தானேயானால், அவன் செய்யும் பாதகத்திற்கு அளவேயில்லை. அவன் தனக்கே பெரிய ஆபத்துக்களை விளைவித்துக்கொள்ளுகிறான். ஏனென்றால் ஸமத்வத்தைப் பழித்து நடப்பதால் அவன் ஸ்வதந்திரத்துக்கு விரோதியாகிறான்.

ஸமத்வமானது நான்கு வடிவமாய் இருக்கின்றது. அதாவது: **அன்பு, அருள், இரக்கம், அபிமானம்** என்பவைகளேயாம். இந்நான்கினுள் (1) அன்பானது தனக்குத் தெரிந்தவர்களிடத்தில் பிரீதி ரூபமாய்க் காட்டப்படும் ஸமத்வம். (2) அருளானது முகமறியாத ஒருவனிடத்தில் யாதொரு பிரதிப்பிரயோஜனமுமின்றி உள்ளமுவந்து காட்டப்படும் ஸமத்வம். (3) இரக்கமாவது தன்னிலும் கீழ்ப்பட்டோரிடத்தில் உள்ளமுருகி உண்டாகும் பச்சாத்தாபத்தால் காட்டப்படும் ஸமத்வம். (4) அபிமானமாவது தன்னவர்களிடத்தில் ஒருவன் கட்டாயமாய்க் காட்டி நடக்கக் கடமைப்பட்டிருக்கும் ஸமத்வம்.

ஸமத்வம் எப்பொழுதும் மனித இயற்கையைச் சேர்ந்ததே தவிர, ஜனஸமூகத்துச் செல்வம் முதலியவற்றாலுள்ள உயர்வு—தாழ்வு என்னும் வித்தியாஸத்தைச் சேர்ந்ததல்ல. அந்த வித்தியாஸமும் ஸமமாய் நிரவப்பட்டு அதிலும் ஸமத்வம் பாராட்டி வந்தால் மெத்த மேலானதே. அதுதான் ஸ்வர்க்க பதவி. ஆனால், அத்த

சாஸ்திரத்தை சாஸ்திரத்திற்காகவே பயிலவேண்டும். பணத்தை எதிர்பாராமல் ஒரு உபகாரம் செய்ய முதன் முதலில் நீ கற்றுக்கொள்,

கைய ஸமத்வம் அடைந்தபிறகு அதைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டியதும் பெரிய கடமையேயாம்.

ஸமத்வத்தைக் கையாடி வரும்போது அதன் பரிசுத்த நோக்கத்தைக் கொஞ்சமேனும் கெடுத்துவிடக்கூடாது. மற்றொருவனுக்கு எவ்வித துன்பமும் விளைவிக்கக்கூடாது. உலக நீதிக்குத் தகாத காரியங்களில்கூட ஸம்மதமான மார்க்கங்களில் ஸமத்வத்தை அநுஷ்டிப்பதுதான் தர்மம்.

உலகத்தில் எந்த நாட்டில் ஸமத்வம் அநுஷ்டிக்கப்பட்டு வருகிறதோ அந்த நாடுதான் ஸ்வர்க்கம். அந்த நாட்டினர்கள் தான் உண்மையில் ஸந்தோஷமாய் மனமகிழ்ச்சியுடன் வாழ்வார்கள். நாடெங்கும் செழித்து நன்மை தழைத்தோங்கும். கல்விப்பொருளிலும் செல்வப் பொருளிலும் குறைவில்லாத பாக்கியவான்களுக்கும் புண்ணிய புருஷர்களுக்கும் அந்நாடு உறைவிடமாய் இருக்கும். மேதாவிகளான தேசாபிமானிகள் அறிவின் பெருக்கால் உண்டாகும் நன்மைகளை அந்த ஸமத்வ பூமியில் நன்கு பயன்படுத்திக்கொள்ளலாம். ஸமத்வம் ஓர் அரிய சக்தியாகும். ஸமத்வம் ஓர் அரிய தவமாகும். ஸமத்வம் உலகையே ஒரு புது ஒளி கொள்ளவைக்கும்.

* * *

ஸஹோதரத்வ ஞானமும் ஸமத்வ சிந்தையும் எங்கு ஒன்று கூடிவிடுகின்றனவோ அங்கு ஸ்வதந்திர சக்தியும் தன்னில் தானே தோன்றிக்கொள்ளும். உலகத்தில் ஸ்வதந்திரமே ஒரு ஆநந்தம். **ஸ்வதந்திரமில்லாமல் அயலாரின் கீழ் இருக்கும் அடிமைத்தனமே துக்கம்.** பிரதி மனுஷ்யன் விஷயத்திலும் இது எப்படி உண்மையோ, அப்படியே ஒவ்வொரு தேச ஜனங்களின் விஷயத்திலும் உண்மையாகவே இருக்கின்றது. ஸ்வதந்திரமடைய விரும்புகிறவன் தன்னினத்திலாவது அயலினத்திலாவது நிர்த்தோஷியா இருக்கும் ஒருவனுக்கு வேணுமென்றே மனஸ்பூர்வகமாய் எவ்வித தீங்கும் இழைக்கக்கூடாது. அப்படிச் செய்வதால் மஹா பரிசுத்தமான ஸ்வதந்திரத்தை அவன் அபரிசுத்தப்படுத்துகிறான்; அவமதிக்கிறான். ஏனைய ஸ்வதந்திர ஸ்தாபகர்களின் முயற்சிக்குத் தடையாய் விடுகிறான். அவனை உலகம் பழிக்கும். ஒருவன் உண்மையான பக்தி சிரத்தையுடன் ஸ்வதந்திரமடைய அதற்கு வேண்டிய முயற்சிகளை, பலவிதமான ஆபத்துக்கள் வந்தபோதிலும், மனந்தளராமல் திடசித்தத்துடன் கடவுள் கட்டளையென நம்பிச் செய்துவரவேண்டும். அப்ப

சுதந்திரத்தினால் வரும் ஆநந்தத்தையும், அதன் மூலமாய்ப் பெருக்கடைந்த வல்லமையையும் ஒரு நாடு இழக்குமாயின் அது எங்ஙனம் பின்பு வாழும்?

டிப்பட்டவன் தற்காப்புக்காக நல்ல ஆபத்துக்காலத்தில் ஏதாவது மிதமிஞ்சிச் செய்துவிட்டாலும் அது ஒரு பிழையன்று.

ஒருவன் தன்னுடைய நியாயமான ஸ்வதந்திர ஸம்ரக்ஷணைக்காகத் தனக்குத் திங்கிழைக்கவரும் அயலான்மீது செய்யும் எந்த பலாத்காரமான காரியமும் உலக தர்மத்தை யொட்டி சரியானதே. ஆனால், ஸ்வதந்திரப்பிரியன் மானுஷீக இயற்கை யுரிமையின் எல்லைகளைத் தாண்டக்கூடாது. அதாவது நிர்த்தோஷியான இதரன் எவனுக்கும் ஒரு தீங்கும் நேரிடாமலிருக்கும் பக்ஷத்தில், ஒவ்வொரு மனிதனும் தன்னிச்சைப்படி ஸ்வதந்திரமாய்க் காரியங்களைச் செய்து கொள்ளலாம். ஸன்மார்க்கத்தில் உலகம் நடக்குமாறு உலகத்திற்கு ஒரு நிரந்தரமான உதாரணமாய் இருப்பதே மனித ஜென்மமெடுத்ததற்குப் பயன் தருவதாகும்.

இந்த ஸ்வதந்திரமென்னும் ஆநந்தமானது பலஹீனன், பயங்காளி, தன்னலப் பேராசைக்காரன், கபடி, காட்டிக்கொடுத்து காசு வாங்கி வயிறு பிழைப்பவன், பயந்தவன், துக்கிதன் இப்படிப்பட்டவர்களால் ஒருக்காலும் அடையமுடியாது. கர்மபாசங்களினின்றும் நீங்கி ஆத்மா ஸ்வதந்திர மடையவேண்டுமென்பது உள்முகமான ஸ்வதந்திர விருப்பம். இதற்கும் வெளிப்படையான சரீர ஸ்வதந்திரம் முதலில் ஆவசியகம்.

ஸ்வதந்திரம் என்றால் தன்னிச்சை என்பது பொருள். மற்றெதையும் ஸஹாயமாகக் கொண்டு, அதன்மேல் சார்ந்து, பிறர் இஷ்டத்தின்படி நடவாமல், ஸ்வயேச்சையாய் இருக்கும் ஓர் பரமோத்தமமான நிலைமை. ஸ்வதந்திரம் என்பது மெத்தவும் பரிசுத்தமான விஷயம். கடவுளின் கருணையால் இது ஜீவகோடிகளுக்குப் பிரஸாதிக்கப்பட்டிருக்கிறது. இதை ஒவ்வொரு மனிதனும் கைக்கொள்ளவேண்டும். ஒவ்வொரு ஜாதியும் ஸ்வதந்திரமாய் வாழவேண்டியது இயற்கையே.

இதற்கு ஓர் பெரிய உதாரணம் சிருஷ்டியிலேயே பார்க்கலாம். மிருகங்கள், பக்ஷிகள் முதலான ஜந்துக்கள் காட்டில் யதேச்சையாய் வசித்தால் எவ்வளவோ ஸுகமாய் வாழ்கின்றன. எவ்வளவோ பலமுள்ளவைகளாயும் இருக்கின்றன. அவைகளை நாட்டிலே கொணர்ந்து வைத்து மனிதன் எவ்வளவுதான் போஷித்தாலும் காட்டில் உள்ளவைகள்போல் அவ்வளவு நேர்த்தியாய் இவைகள் வளருவதில்லை. காட்டில் மல்லிகைக்கொடிகள் யதேச்சையாய் வளர்ந்து எவ்வளவு

பயத்தைப் போக்கி வல்லமையை வளர்க்கவென்றே கவி பிறக்கிறான். கவிகளும், காதலர்களும், பைத்தியக்காரர்களும்—இம்மூவரும் ஒரே நிலையில் பூண்டவர் என்று ஒரு உத்தம கவி வர்ணித்திருக்கிறார்.

அழகாயும், வாஸனையாயும், மனோரம்மியமாயும் இருக்கின்றன! இதே மல்லிகைச் செடிகளை நாட்டிற்குள் கொணர்ந்து தொட்டிகளில் வைத்து, நல்ல எருவிட்டு, தண்ணீர்கொட்டி, வெகு ஜாக்கிரதையாய் வளர்த்தாலும், இவைகள் காட்டுச்செடிகளைப்போல் அவ்வளவு மனோக்யமாய் இருப்பதில்லை. ஸ்ரீ கண்வ மஹா முனிவரின் ஆச்ரமத்தில் முதல் முதல் துஷ்யந்த மஹாராஜன் சகுந்தலையை உற்று நோக்கியபோது ஸர்வஸ்வதந்திரத்தோடும் இலங்கிய இந்த இயற்கையையே—இயற்கையின் வனப்பையே அவன் மனதில் எண்ணினான்.

இதே மாதிரிதான் கூண்டிலடைக்கப்பட்டிருக்கும் கிளிக்கும், யதேச்சையாய் ஸஞ்சரிக்கும் கிளிக்கும் வித்தியாஸம். இதற்கெல்லாம் காரணம் என்ன? நாம் வீட்டில் கொணர்ந்து வைத்து வளர்த்து வரும் செடியும், கூண்டில் அடைக்கப்பட்ட கிளியும் தமது ஸ்வதந்திரங்களை இழந்து கெட்டுப் பிறருக்கு அடிமையாய்ப் போய்விட்டன. தனது ஜீவனத்திற்குக்கூட அயலாருடைய கையை எதிர்பார்க்கும் படி பலாத்காரம் செய்யப்படுகின்றன. அவைகள் தங்கள் இஷ்டப்படி நடக்க சக்தியற்றவைகளா யிருக்கின்றன. ஆனபடியால் தான் ஸ்வயேச்சையாய் இருந்து நன்கு வளர்ந்து வருபவைகள்போல் வளருவதில்லை. யதேச்சையாய் வளருபவைகளுக்கு ஒரு நிர்ப்பந்தமில்லை. ஆகையால் நன்றாய் வளர்ந்து வருகின்றன. தாயின் கையில் வளரும் குழந்தை ஸ்வதந்திரமுடையது. மாற்றாந்தாயின் கையில் சிக்கிய குழந்தையோ தன் ஸ்வயேச்சையை இழந்ததாகும்.

ஒருவன் ஸ்வதந்திரமுடையவனாய் இருந்தால் அவன் பலவானாய் இருப்பான். தன் இஷ்டப்படி நன்மைகளை விருத்தி செய்து கொள்வான். தைரியவானாய் இருப்பான். அதேமாதிரியாக ஒரு ஜாதி ஸ்வததிந்திரமுடையதாய் இருந்தால், அந்த ஜாதி வசிக்கும் தேசம் தான் ஸ்வர்க்கம். அந்த தேசம் தான் மோக்ஷ உலகம். அந்த தேசத்தில்தான் ஜனங்கள் ஸந்தோஷமான மனத்தோடு வாழ்வார்கள். ஜனங்கள் சூரர்களாயும், வீரர்களாயும், தீரர்களாயும், பலிஷ்டர்களாயும், தர்மகுண ஸம்பன்னர்களாயும் இருப்பார்கள். நிம்மதியான மனச்சமாதானத்துடன்வாழ்வார்கள். அன்னோர்எவ்விதமனக்கவலையுமின்றி கடவுளை ஆநந்தமாய்த் தொழுதேத்தலாம். தம் நாட்டினர்களுக்கும் எண்ணிறந்த நன்மைகள் புரியலாம்.

நீ ஸஹோதரத்வ ஞானம் பெற்றிருக்கின்றனையா? ஸமத்வ சிந்தனையில் உன் கருத்து பாய்கின்றதா? ஸ்வதந்திர விருப்பம் உனக்கு உண்டா? உண்டாயின் உடனே எழுந்திரு, விழித்துக் கொள், சிரேஷ்டமானவைகளை அறிந்துக்கொள் ஆண்மையுடனும் முன்னோக்கிச் சென்று உன் காரியம் பூர்த்தியாய் ஆகும் வரையிலும் உழைக்கக்கடவாய். அது உன் கடனம்.



பணிவதில் ஆண்மை.

(124-ம் பக்கத் தொடர்ச்சி.)

தலைமையே கொண்டு தலைநிமிர்ந் திருக்கத்
தற்பரன் எனைப்படைத் திருக்க
தலைதனைத் தொங்க விட்டய லாரைத்
தாங்குபுன் றொழிற்கிசை வேனோ ?
உலைவுரு தொன்று கேட்பதை மறுக்கும்
உலுத்தரை யொதுக்குவ தல்லால்
நிலைபெற மீண்டுந் தருகவென் றெதிர்போய்
நிர்ப்பந்தஞ் செயநினைப் பேனோ ? (5)

பட்டமே கருதிப் பலரிடந் திரியேன்
பாக்கிய வந்தரை மதியேன்
கஷ்டமே வரினும் உடலுழைத் தல்லால்
கனவிலும் பிறருண வருந்தேன்
கொட்டமே புரியுஞ் செருக்கரை மதியேன்
கொடுமனக் கடினரை யணுகேன்
நஷ்டமே வரினும் சுதந்திர நினைவை
நான்மற வேன்மற வேனே. (6)

ஆழிசூ முலகி லகிம்சையே விரத
மாகவே கொள்பவ னெனினும் ;
ஊழிபோல் என்னை எதிர்ப்பவர் தம்மை
உடனெதிர்ப் பேன்தடியடி ; மேல்
வீழினும் திருப்பி யடித்தென தாண்மை
விளங்கிடக் கொள்ளுவேன் வெற்றி ;
பாழினி லென்னைக் கெடுத்திட நினைக்கும்
பதகரை லகுவில்வி டேனே. (7)

சுதந்திர முடைய கடவுள்தம் படைப்பு
சுதந்திர முடையதே யல்லால்
இதந்தரும் பிறப்பி னுரிமையை மறுக்க
எவர்தமக் குண்டதி காரம்?
அதந்தருஞ் சாதி பேதமே யின்றி
யாவரு மோன்றுசேர்ந் துறையில்
பதந்தரும் அந்த சுதந்தர பீடம்
பலித்திடக் கிடைக்குமிக் கணமே. (8)

வாடகைக்கு வீடு கிடைக்குமா?

மிக்க வேண்டியவர்களும் பந்துக்களுமாயிருப்போர் ஒரு வீட்டில் தங்கிக்கொள்ள முதலில் கேட்கும் கேள்வியிது. வீட்டுக்காரன் இங்கேயே முதலில் தங்கி பிறகு வேறு வீடு பார்த்துக்கொள்ளலாம் என்கிறுன். ஆனுல் அவர்களுக்கோ இங்கேய தங்கிவிட உத்தேசம். அப்படியே ஆகட்டுமென்று அவர்கள் போன பிறகு வீட்டுகாரனுக்குப் பலபல யோசனைகள் தோன்றுகின்றன. வருபவர்கள் ஒருமாதிரி மனுஷ்யர்கள். நெருங்கியிருந்து சந்தோஷப்படுவோம் என்று நல்ல எண்ணமே நினைத்தாலும், அவர்கள் ஏதாவது தப்பிதம் கண்டுபிடிக்கக்கூடும். ஏதாவது புகார் சொல்லக் கூடும். நெருங்கிநிற்பதில் ஏதாவது வருத்தம் வரக் கூடும். ஏதாவது அவர்கள் கடன்கேட்டு அது கொடுக்காமற்போனுல் அதற்காக மனஸ்தாபங்கள் உண்டாகக்கூடும். பிறகு மனஸ்தாபப்பட்டுக்கோண்டு அவர்கள் புறப்படுவதைவிட மனஸ்தாபமின்றி தூர இருந்து வாசனையாகப் போவதே மேல். எப்போதும் அதிக நெருக்கம் வருத்தத்திற்கே இடனுகிறது. அந்த வருத்தமும் வேண்டாம், அதிக உறவும் பிறகு பகையும் வேண்டாம். நல்ல மனம் உடையவர்களா யிருந்தால் கவலையில்லை. இவர்களோ அப்படியல்ல—என்று கவலை மனத்தினனுய் வரவேண்டாமென்று அவர்களுக்கு மனுஷ்யர்கள் மூலமாகச்சொல்லி யனுப்பிவிடுகிறுன். வருபவர்கள் உண்மை யன்பினர்களா யிருந்தால் இவ்வளவு யோசனைகள் புறப்படுமோ? அன்பினர் வருவதே பெரிய பாக்கியமா யிருக்குமல்லவோ?

பழமொழிக் குறிப்புகள்

2. அற்ப குணம்.

(165-ம் பக்கத் தொடர்ச்சி.)

102 கிட்ட வா நாயே யென்றால் மூஞ்சியை நக்குகிறது.

இது அல்ப சகவாசத்தின் தன்மையை எடுத்துக்காட்டும் பழமொழி. நாய் நன்றியுள்ள பிராணியானாலும் ஆசாரமான வகையில் அதைத் தொடக் கூடாத ஜந்துவாய் விலக்கப்பட்டிருக்கிறது. சுத்தம் அசுத்தம் என்கிற ஞானம் அதற்கு இல்லை. எச்சிலுக்கும் மலம் தின்பதற்கும் அது தயாராய் விடும். அதன் விசுவாச குணம் மேன்பட்டதாயினும் எதிலும் அது வாய் வைத்துவிடக்கூடிய ஒரு அசுத்த பிராணி. அத்தகைய வாயைக் கொண்டு நக்கவும் வருவதானால் எத்தனை அசிங்கிதம்? இவ்விதம் நக்க வரும் அல்பத் தன்மை அதனிடம் அதிகம். கிட்ட வா யென்று தடவிக் கொடுத்தால், உடனே அந்த ஆதரிப்பில் அது அளவுக்கு மீறிப்போய் முகத்தை நக்கவும் புறப்பட்டுக்கொள்ளும். அதை விரும்புகிறவர் யார்? எனவே எவ்வளவு மட்டுக்கும் அதனுடன் பழகவேண்டுமோ அவ்வளவுக்கு மட்டும் வைத்துக் கொண்டு, அது நக்க வருகிறவரைக்கும் இடம் தாராமல் தூர ஒதுங்கியபடி இருக்கவேண்டும். நமது சொந்தத் தம்பியாகவோ, மாமன் மைத்துனன் முதலிய எந்த உறவாகவோ ஒருவன் இருந்தபோதிலும், அவன் வாய்த்துடுக்கும், மரியாதையற்ற தன்மையும், எவரையும் எடுத்தெறிந்து பேசுகிற குணமும் கொண்ட துஷ்டனாயிருப்பின், அத்தகையோன் நமது வீடு தேடிவந்தால்—"வா அப்பா"—என்று புன்னகை முகம் காண்பித்து அழைத்துவிட்டு அவ்வளவுடன் நாம் விலகிக்கொள்ள வேண்டும். அதற்குப் பிறகு அவன் பேச்சு வார்த்தைகள் எல்லாம் வீட்டில் இருக்கிற மற்றவர்களிடம் கொள்ளும்படி விட்டுவிட்டு, அவன் புறப்பட்டு போகிறவரைக்கும் அவனுக்கு வேண்டிய உபசரிப்பில் மட்டும் கவனத்தைச் செலுத்தியிருந்து, அவன் போவதற்கு நம்மிடம் வந்து சொல்லிக்கொள்ளும்போது, மறுபடியும் ஒரு புன்னகை முகம் காண்பித்து—"போய் வா அப்பா" என்று பிரியமாய்ச் சொல்லி வழியனுப்பி விடவேண்டும். அவன் வந்ததற்கு ஒரு வார்த்தையும், அவன் புறப்பட்டுப் போகும்போது ஒரு வார்த்தையுமாகப் பேசிவிட்டு அவ்வளவில் நாம் ஒதுங்கி நமது மரியாதையை நாம் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். இந்த இரு வார்த்தைகளுக்கும் மிஞ்சி அவனிடம் அதிக வார்த்தை வைத்துக் கொள்ளக் கூடாது. அவனிடம் அதிக சகவாசமும் உறவும் கொள்ளக் கூடாது. அம்மட்டில் விலகி ஜாக்கிரதையோடும் பழகினால் தான் வம்புக்கு வாராத நமது தன்மையையும் அவன் தெரிந்துகொண்டு நம்மிடம் தனது வாய்த்துடுக்கையும் அல்ப புத்தியையும் காட்டாமல் மரியாதையாய்

விவேகம் நிறைந்த மனித உள்ளத்தில் விதைத்த விதை ஒருநாளும் வீண்போகாது.

நடந்துகொண்டு போய்விடுவான். நமது மானமும் நமது கௌரவமும் நமக்கு நிலைக்கும். நாமும் நாலுபேர் முன்னிலையில் அவனால் அவமதிப்பறா மல் காத்துக்கொள்ளவும் கூடும். இதில் நாம் சற்று எல்லை கடந்து உள்ளே அடக்கிவைக்க வேண்டிய பிரியத்தை மீறவிட்டுக் காண்பித்து அவனுடன் பழகினாலோ மூஞ்சியை நக்கவரும் நாயினது அல்பத்தன்மைபோல் அவனும் தனது அல்ப குணத்தைக் காட்டத் தொடங்கிவிடுவான். அவன் வாயில் வருகிற வா—போ—என்கிற ஏகவசனங்களை யெல்லாம் கேட்கவேண்டிய தாய் வரும். வாருங்கள்—போங்கள் என்கிற மரியாதையான வசனங்கள் தான் அவனுக்குத் தெரியாதே. இனி இந்த ஜென்மத்தில் அவன் மரியா தையைக் கற்றுக்கொள்ளப் போகிறது மில்லை. அத்துடன் துஷ்ட சுபாவ மும் மதுபானக் குடியின் வெறியும் கூடிக்கொண்டால் இன்னும் ஆபாஸமான மரியாதைக் கிரமமற்ற முறையில் அவன் காணப்படுவான். இத்துடன் கையில் நாலுகாசும் ஏறியிருந்து அந்தக் கர்வமும் மிஞ்சித் துள்ளித் தலை தடுமாறுகிற மனிதனாகவும் இருந்துவிட்டாலோ அத்தகையோனின் வாய் எவ்வளவு கசுமாலங்களையுங் குப்பைகளையும் கக்குவதாய் இருக்கும்? எந்த வார்த்தைக்கும் அவன் எடுத்தெரிந்து பேசக்கூடும். வீட்டில் வழக்கமாய் வைக்கிறதைவிட விசேஷமாகவே குழம்பு வைத்திருந்தாலும், அதிலும் அவன் ஒரு சொட்டுச் சொல்லுவான். தனக்கென்று தனிக்குழம்பு வைக்க வில்லை யென்பான். இலையையும் சாதத்தையும் எடுத்தெறிவான். வெடு வெடு சிடு சிடு என்பான். அத்துடன் அப்பொழுது சாராய வெறியும் அவனுக்கு ஏறியிருக்கலாம். அவன் புசிக்கவேண்டியவற்றை யெல்லாம் சாராயக் கடையிலேயே அந்தச் சரக்கை வாயிற் கொட்டிக்கொண்டவுடன் நடந்துபோயிருக்கும். வீட்டிற்கு வந்து இலையில் உட்கார்ந்தது ஏதோ ஒரு ஒப்புக்காகத்தான். அந்த நிலையில் சாராய ஏப்பதுடன் அவன் எதைப் புசிக்கப் போகிறான்? இலையில் இருப்பதெதுவுமே அவனுக்குப் பிடிக்காது. அவற்றை எடுத்துண்ணவும் புத்திபோகாது எனவே, தனது குடிவெறியில் அவற்றை யெல்லாம் வீசி எறிந்து ஆரவாரம் செய்வான். அந்த சமயத்துக்கு நாம் சமையல் அறையின் பக்கமே போகக்கூடாது. அங்கு நடக்கிற தாறு மாறுகளை யெல்லாம் தெரிந்துகொண்டிருந்தாலும், நாம் அதை அறியாத விதமாகவே காண்பித்துக்கொண்டு மவுனமாய் இருந்துவிட வேண்டும். அந்த எல்லை கடந்து, அவனை நெருங்கி ஏனப்பா இலையை அப்படி வீசி எறிந்தாய் என்று கேட்டுவிட்டாலோ, உடனே தனது வாயிலிருந்து அகம் பாவச் சொற்களை யெல்லாம் வீசிக்கொட்டி அதிகப்பிரஸங்கித்தனத்துக்குப் புறப்பட்டுவிடுவான். அவ்வளவு நெருக்கத்துக்கு நாம் போய்விடாமல் மானத் துக்கு அஞ்சித் தூர ஒதுங்கிக்கொண்டு விடுவதுதான் நமக்கு அழகு. பின் னும் அந்த அல்பனிடம் நமது வார்த்தைகளைக்கூட வெளியிடாமல், சிறிது பற்களைத் திறந்து காண்பித்து, ஒரு சிரிப்பு முகத்தையும் அத்துடன் சேர்த்து ஜோடித்து அவனுக்குத் தெரிவித்துவிட்டு, வாய்பேசாமல் மௌன மாய் இருந்துவிடுவது இன்னும் மேலான காரியம். அவன் பணத்திமிரில் அவன்வரையில் அவன் குதித்துக்கொள்ளட்டும். நமதுவரைக்கும் அவன்

உத்தியோகம் செய்து பிழைக்கிறவன் தான் கற்றவன், ஏர் உழுது சாகு படி செய்து ஜீவனம் பண்ணுகிறவன் கல்லாதவன் என்பதல்ல,

மரியாதையாய் நடந்துகொண்டு போய்விடட்டும். அவ்வளவுதான் நாம் அவனிடம் கோரவேண்டியது. அவன் மனைவி மக்களை அடிப்பவனுயிருந்து நம் முன்பாகவே ஒரு அல்ப சங்கதிக்கு ஓங்கி அவர்களைப் புடைக்கலாம். அதில் நாம் தலையிட்டுக் கொள்ளாமல் மவுனமாகப் போய்விடவேண்டும். அவன் குடித்து வெறித்து வலுவில் நம்மிடம் சண்டைக்கும் வரலாம். நாய் கடித்தால் திரும்பக் கடிப்பதுண்டாவென்று பதிலுக்குப் பதில் அவனிடம் வார்த்தை வைத்துக் கொள்ளாமல் நயமாகவே பேசி அவனை அப்பால் போகச் செய்துவிடவேண்டும். நம்மிடம் பேசவோ, நமது சங்கதியில் குறுக்கிடவோ அவனுக்கு சந்தர்ப்பமில்லாதபடி, எதிலும் அவனுக்கு இடம் தராமல் ஒதுங்கி விலகிப்போய்விடவேண்டும். அப்போதுதான் நம் மானம் கெடாதிருக்க முடியும். மேலும் அந்த அற்பனிடம் எந்த ஒரு திட்டும் கேட்காமல் இருக்க ஹேதுவாகும். மரியாதை ஒழுங்கு உணராதவனிடம் வார்த்தை வைத்துக்கொள்வதே தப்பு. உறவுக்கும், நட்புக்குமாகச் சற்று நெருங்க இடம்தந்து ஒரு எல்லைக்குள் அவனைத் தூர வைத்துவிடவேண்டும்.

இன்னும் அவன் தன்னை ஒரு பெரிய மனிதத்தன்மை காண்பித்துக் கொள்பவனுகவும் இருந்தால், நமது வீட்டில் இருப்பவர்கள் அவனை ஒரு முக்கியஸ்தனுக நடுவில் வைத்துக்கொண்டு, நாம் அப்படிச் செய்கிறோம், இப்படிச் செய்கிறோமென்று நம்மைப் பற்றிப் பல புகார்களும் கோள் குண்டுணிகளும் சொல்லுவார்கள். அவனும் அவர்களுடன் சேர்ந்துகொண்டு தனக்கு மஹாபுத்தி யிருப்பதான கர்வத்துடன் நமக்கு புத்தியில்லை யென்று கண்டபடி தூற்றுவான். அதை நாம் கேட்காதவர்கள் போல் போய்விட வேண்டும். நம்மீது சுமத்தப்பட்ட புகார்களுக்கு அந்த அல்பனிடம் அவனை மதித்து நாம் பதில் தெரிவித்துக்கொண்டிருப்பது பிசகு. அவனை லக்ஷியம் செய்யாதபடி நாம் போய்விடவேண்டும். தம்பியாகட்டும், அண்ணனுகட்டும், மாமன், மைத்துனன் மற்றும் எந்த உறவாகட்டும். அல்பதன்மை மிஞ்சியவர்களிடம் நாம் ஜாக்கிரதையாகப் பழகவேண்டும். இல்லாவிடில் மூஞ்சியை நக்க வந்துவிடுவார்கள்.

இவ்வித அற்பர்களிடம் கூட்டு வியாபாரம் போன்ற நெருக்கமான எதையும் வைத்துக்கொள்ளக்கூடாது. அது நமது க்ஷேமத்துக்குரியதல்ல. அந்த அல்பனுக்கு உட்பட்டுக் கடைக்கணக்குகளை அவனுக்கு விவரம் சொல்லிக் காண்பிக்கும்படியும், அவன் இறக்கிப் பேசுகிற வார்த்தைகளைக் கேட்கும்படியும் வந்து நமது மானம் சந்திசிரிக்கும். இவ்விதமே இந்த அல்பர்களைக் கொண்டு அவர்கள் மூலமாக ஒரு பெண் சம்பந்தம் எதுவும் செய்துகொள்ளக்கூடாது. அது மிக்க ஆபத்து. நாளைக்கு இந்த அல்ப மிருகமே பெண்வீட்டுக்காரரின் அதிகாரியாய்ப் புறப்பட்டுக்கொண்டு, அந்த நகை எங்கே, இந்த நகை எங்கேயென்று நம்மை அதிகாரம் செய்யவும், மூஞ்சியை நக்குவதற்கு வரவும் புறப்பட்டுக்கொண்டுவிடும். எவ்வளவுக்குத் தூர ஒதுங்கி, பட்டும் படாமலும் நிற்கிறோமோ அவ்வளவுக்கும் நமது மானம் நமக்கு நிலைக்கும். நமக்கும் அது க்ஷேமகாலம்.

மனிதன் ஏக்கத்தினுல் சாகிறான். மனிதன் நோயால் சாவது வெகு கொஞ்சம். மனிதன் கிலிபிடித்துத் திகிலடைந்து சாவதே அதிகம்,

ஒருசமயம் ஒரு அவசிய காரணம் ஏற்பட்டுக்கொண்டு இந்த அல்பர்க ளுடன் பழகும்படி நேர்ந்தால், அதிகமாய் அவர்களிடம் நெருங்காதபடியும் அதிக சகவாசம் அவர்களிடம் கொள்ளாதபடியும் ஜாக்கிரதையாய் முன் யோசனையுடன் கவனித்து நடந்துகொள்ளவேண்டும். இல்லையாகில் நமது மதிப்பும் மானமும் தொலைந்து கேவலப்படும்படியாகிவிடும். நாய்க்குச் சிறிது இடம் கொடுத்து "வா" என்று நெருங்க வைத்துக்கொண்டதினால் தானே அது மூஞ்சியை நக்க வந்தது! அவ்வளவு தூரத்துக்குச் செல்லாமல் அது இருக்கவேண்டிய எல்லையிலேயே அதை விட்டு நாம் ஒதுங்கிக்கொண் டிருப்போமானால் அது நக்க வருவதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டிராது. **அல்பர் களுக்கு சற்று இடம் தந்தால் நம்மீதே குதிரை ஏற வந்துவிடுவார்கள். நமது வீட்டில் அவர்களுக்கு எந்தவித அதிகாரமும் இல்லாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும்.** நாம் சற்று நெருங்கிப்போவதில், அவர்கள் அதிகமான பாத்தியதை தங்களுக்கு இருப்பதாகக் காட்டிக்கொண்டு நமது நல்ல பெயருக் குப் பொல்லாப்பு தேடிவிடுவார்கள். அல்பர்களுக்கு என்றைக்கும் அல்ப குணம்தான். அவர்கள் நம்மிடம் மிதம்மீறிக் காண்பிக்க வருகிற அன்பும் கூட அடுத்த நிமிஷத்தில் அவர்களின் அல்ப குணத்தால் தவறிப்போய் நம்மை எதிர்க்கவும், விரோதிக்கவும், கண்டபடி பேசவும் தலைப்பட்டுக் கொள்வார்கள். அவர்கள் உறவும் வேண்டாம், பகையும் வேண்டாம், அவர்க ளிடம் அதிக சகவாசமும் வேண்டாம் என்று நாம் எச்சரிக்கையுடன் நடந்து கொள்வதே உத்தமம். அவ்விதமில்லாமல் அவர்களை ஒரு மனுஷ்யராக மதித்து நெருங்கப்போனால், **"கிட்டவா நாயே என்றால் மூஞ்சியை நக்க வருகிறது"** போல் நடந்துக்கொண்டுவிடுவார்கள் என்பதை இப்பழமொழி எடுத்துக்காட்டுகிறது. (தொடரும்.)

எஜமானன் எஜமானி.

எஜமான் தனது வேலைக்காரனால் தனக்கு ஆகவேண் டிய வேலைகளில் மட்டுமே கருத்தாக நிற்பான். அவன் பசியுடன் இருக்கிறானே என்பதைக் கருதான். அவன் வீட்டு அசௌகரியங்கள் எதையும் விசாரியான். தன் காரி யம் மட்டும் தனக்கு. எஜமானியோ வேலைக்காரனின் பசியையுங் கவனிப்பாள். அவன் வீட்டுக் குறைகளையும் விசாரித்து உதவி செய்வாள். வேலையாளும் எஜமானியிடம் தான் அதிகம் சொல்வான். ஆனால், எஜமானி செய்கிற உதவிகளைத் தடுக்காத பெரிய மனிதத்தன்மை எஜமான னுக்கு உண்டு என்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டியதே. வேலையாளனைவிட வேலைக்காரி மீது எஜமானிக்கு இன் னும் பதின்மடங்கு அதிகப் பிரியமிருப்பது இயற்கை.



பெரியாரின் மொழிகள்



(128-ம் பக்கத் தொடர்ச்சி.)

263. Charity itself fulfils the law; And who can sever love from charity? SHAKESPEARE.

சட்டமென்பது இரக்கம் என்பதோடு கூடியிருந்தால்தான் பூர்த்தியாகிறது. இரக்கம் என்பதிலிருந்து அன்பு என்பதை யாரால் பிரிக்க முடியும்? ஷேக்ஸ்பியர்.

264. No man who is truly ready to take part in a noble quarrel will ever stand long in doubt by whom, or in what cause, his aid is needed.

RUSKIN.

எவனொருவன் மேன்மையான சண்டையில் சண்டையிட உண்மையில் எப்பொழுதும் தயாராயிருக்கிறானோ அவன் விஷயம் என்னவென்று யோசித்துக்கொண்டு தயங்கி நிற்கமாட்டான். ரஸ்கின்.

265. Grow stronger, and not
harder, in the strife
Silling each moment
with a noble act.

J. R. LOWELL.

ஒவ்வொரு நிமிஷமும் நல்ல காரியங்களைச் செய்துகொண்டு வருவதற்காக தேகவலிமையை அடை. ஆனால் கடின ஹிருதயத்தை யடையாதே.

ஜெ. ஆர். லவல்.

266. No one is useless in this world who lightens the burden of it for any one else.

DICKENS.

எவனொருவன் மற்றொருவனுக்கு பூபாரத்தைக் குறைக்கிறானோ அப்படிப்பட்டவன் இந்த உலகத்தில் உபயோகமுள்ளவனாகவே யிருக்கிறான்.

டிக்கன்ஸ்.

267. Where'er thou art,
Blessings be shed upon
thine inmost heart!

FELICIA HEMANS.

நீ எந்த இடத்திலிருந்தாலும் பெரியோர்கள் ஆசீர்வாதங்கள் உன் உள்ளிருக்கும் ஹிருதயத்தின் மேல் வர்ஷிக்கின்றன.

பெலிஷியா ஹேமன்ஸ்.

268. As the sun breaks through
the darkest cloud,
So honour peereth in the
meanest habit.

SHAKESPEARE.

சூரியன் மிகவும் இருண்ட மேகத்தைப் பிளந்துகொண்டு பிரகாசிப்பது போல, கீர்த்தியானது மிகவும் அல்பமான உடையிலிருந்தும் பிரகாசிக்கிறது. ஷேக்ஸ்பியர்.

269. The shortness of life should not be to any rational person a conclusive reason for wasting the space of it which may be granted him. RUSKIN.

ஒருவனுக்கு விதிக்கப்பட்டிருக்கும் ஆயுள்காலமானது எவ்வளவு அல்பமா யிருந்தாலும் ஒரு பகுத்தறியும் விவேகி அதை வீணாக்கிக்

சாதம் சமைக்கும் வேளைக்கு சங்கீதம் பாடப் போய்விட்டால் பசியெடுக்கிற வேளைக்குச் சோறு கிடைக்குமா ?

கொள் அதை ஒரு காரணமாக வைத்துக்கொள்ளக் கூடாது.

ரஸ்கின்.

270. The tidal wave of deeper souls
Into our inmost being rolls,
And lifts us unawares
Out of all meaner cares.
LONGFELLOW.

ஆழ்ந்த ஆத்மாக்களின் உயர்ந்து வரும் மூலையானது, நம்முடைய உள் ஹிருதயத்தில் பொங்கி, அல்பமான கவலைகளினின்றும் நம்மை நமக்குத் தெரியாமலே உயர்த்துகிறது.

லாங்பெல்லோ.

271. Nature gives to every time and season some beauty of its own. DICKENS.

இயற்கையானது ஒவ்வொரு காலத்திற்கும், பருவத்திற்கும் அதற்குத் தகுந்தாற்போல அழகைக் கொடுக்கிறது. டிக்கன்ஸ்.

272. All literature, art, and science are vain, and worse, if they do not enable you to be glad and glad, justly. RUSKIN.

கிரந்தங்களும், கலைகளும் சாஸ்திரங்களும் உன்னைச் சந்தோஷப்படச் செய்யாவிட்டால் வீண். ரஸ்கின்

273. One doubts are traitors,
And make us lose the good we oft might win,
By fearing to attempt.
SHAKESPEARE.

நம்முடைய சந்தேகங்களெல்லாம் நம்முடைய துரோகிகள். ஏனென்றால் எந்தக் காரியத்தையும் செய்ய முயலுவதால் நமக்குக் கிடைக்கக் கூடிய அநேகநன்மைகளை பயம் என்கிற சந்தேகமானது செய்யவொட்டாமல் நாம் அவைகளை இழக்கும்படி செய்கிறது. ஷேக்ஸ்பியர்.

274. It is pleasant to find real merit appreciated, whatever its particular walk in life may be. DICKENS.

உண்மையான யோக்யதை எந்த வழியில் செல்லத்தக்கதா யிருந்தாலும் அது எல்லாராலும் நன்கு மதிக்கப்பட்டால் அது ஆனந்தத்தைக் கொடுக்கிறது. டிக்கன்ஸ்.

275. Errors, like straws, upon the surface blow,
He who would search for pearls, must dive below.
DRYDEN.

குற்றங்கள் வைக்கோல் துரும்புகளைப்போல் மேலே மிதக்கின்றன. முத்தை நாடிச் செல்பவன் ஆழத்தில் மூழ்கிச் செல்லவேண்டும். டிரைடன்.

276. Oh, wad some power the giftie gie us
To see oursel's as others see us!
It wad frac monic a blunder free us
And foolish nation.
BURNS.

மற்றவர்கள் நம்மை எவ்விதம் காண்கிறார்களோ அதேமாதிரியாக நாம் நம்மைப் பார்த்துக்கொள்ளும் படியான சக்தியை நமக்குக் கடவுள் கொடுப்பாராக. அது நம்மை அநேக குற்றங்களினின்றும் மூட அபிப்பிராயங்களினின்றும் விடுவிக்கும்.

பர்ன்ஸ்.

P. E. பாஷியம் நாயுடு.
"மனோகா விலாஸ்" ஸ்ரீரங்கம்.

இறந்தவர் வாழ்ந்தகாலை யீந்த முத்தங்களின் இனிமை மறந்தனவாயினும், நினைக்குந்தோறும் அவை புதிதே.

பிரபஞ்சதரிசனம்

சுமார் 109-வ்ருஷங்களுக்கு முன்புபிரிடிஷாருடைய ஆட்சி இந்தியாவில் பலப்படாதிருந்த காலத்தில் அவ்வப்போது ஏற்படும் அபாயக் குறிகளுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் தக்கபடி சில கடுமையான சட்டங்களை யுண்டு பண்ணி அமுல்படுத்தலாமென்ற அதிகாரம் கவர்னர்ஜெனராலுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. லார்ட் மாய்ரா என்பவர் கவர்னர் ஜெனரலாய் (இராஜப் பிரதிநிதியாய்) இருந்தகாலத்தில் மகாராஷ்டிரர்களுடன் மூன்றாம் முறை யுத்தம் நேரிட்டுப் புனைவைப் பிரிடிஷார் கைப்பற்றி வெற்றிகொண்டபோது, தேசத்தில் அமரிக்கையையும் சமாதானத்தையும் பரப்பி அக்கிரமஞ் செய்வோர்களை உடனுக்குடன் கண்டித்தடக்குவதில் பிரிடிஷார் அதிக கவனம் வைத்து சென்ற 1818-ம் வருஷத்து வங்காளத்து மூன்றாவது ரெகுலேஷன் என்ற சட்டத்தை யுண்டுபண்ணினார்கள். ஒரு ராஜீய அவசர நிமித்தம் ஏற்பட்ட இந்த சட்டம் இடையில் (1874-ல்) ஒன்றிரண்டு நிபந்தனைகளைச் சற்று மாற்றப்பட்டதைத் தவிர்த்துப் பிறகு இது ரத்து செய்யப்படவேயில்லை. 1872-ம் வருஷத்தில் **பாய் ராம்ஸிங்** என்ற சீக்கிய மதத்தலைவர் இந்த சட்டத்தின்படி பிடிக்கப்பட்டுப் பர்மாவுக்கு அனுப்பப்பட்டார். பிறகு முப்பத்தாறு வருஷங்கள் வரையில் இந்த சட்டம் முற்றிலும் மறக்கப்பட்டுப்போய் செத்துக்கிடந்த நிலையிலிருந்தது. 1907-ம் வருஷத்தில் இதற்கு மறுபடியும் உயிர் உண்டாகி, அந்த வருஷம் மே மாதத்தில் ஸ்ரீ லாலா லஜபதிராய் இந்த சட்டத்தின்படி பிடிக்கப்பட்டு, பர்மாவில் மாண்டலேயில் ஆறுமாதம் வைக்கப்பட்டார். "ஸிவில் அண்டு மிலிடரி கெஜட்" என்ற ஆங்கிலப் பத்திரிகையானது 1857-ம் வருஷத்திய சிப்பாய் கலகத்தின் ஐம்பதாவது வருடத்தை ஸ்ரீ லாலா லஜபதிராய் மிக்க ஆரவாரத்துடன் கொண்டாடப் போவதாக ஒரு பொய் வதந்தியை எழுப்பிவிட, அதன் காரணமாகவே இந்தச் சட்டம் ஸ்ரீ லஜபதியின்மீது பிரயோகிக்கப்பட்டது. பிறகு அவர் நிரபராதியென்று விடுவிக்கப்பட்டார். அதற்குப் பிறகு இந்த சட்டமோ அடிக்கடி பிரயோகிக்கப்பட்டு பயங்கரமான கருவியாகிவிட்டது. ஏதோ ஒரு காலத்தில் அவசர நிமித்தம் ஏற்பட்ட இந்த சட்டம் பிறகு ரத்து செய்யப்படாமல் நாளதுவரையிலும் சிரஞ்சீவியாய் இருந்து வருகிறது.

சடுகோப முழுமூடர் நட்பும், வேலைக் கிசைந்தபடி பேச்சுப் பேசி மென்ன மென்ன எத்திடுவோர் பழக்கமும் வேண்டேன்.

இதைப்போலவே 'வருமான வரி'யும் ஒருகாலத்தில் அரசாங்கச் செலவுக்குப் பணக்குறைவாக இருந்ததின் நிமித்தம் ஒரு வருஷ காலத்துக்கென்று ஏற்படப்போக, பிறகு அதுவும் சிரஞ்சீவி பட்டம் கொண்டு நீண்ட வாழ்வு வாழத்தொடங்கி விட்டது! இன்றைக்கும் வாழ்கிறது!!

***

சாமான்யமாய் ஒரு தேசத்தில் ஒரு பொருள் உயர்ந்த விலைக்கு விற்ருல், அந்தப் பொருள் வேறு எந்தத் தேசத்தில் மலிவா யிருக்கின்றதோ அந்தத் தேசத்திலிருந்து அந்தப் பொருளை வியாபாரிகள் கொண்டு வந்து விற்பார்கள். ரூபாய்க்கு மூன்று படி அரிசி நமது பக்கத்தில் விற்கும்போது, ரூபாய்க்கு ஐந்துபடி விற்கும் தேசத்திலிருந்து வியாபாரிகள் அதைக் கொண்டுவந்து விற்று லாபம் பெறலாமல்லவா? இங்கிலாந்தில் கோதுமை விளைகிறதில்லை. ஆனுல் அந்தத் தேசத்து ஜனங்களுககு வேண்டிய கோதுமையை அமெரிக்கா, இந்தியா முதலான இடங்களிலிருந்து வியாபாரிகள் கொண்டுபோய் விற்கிருர்கள். அதுபோல இந்தியா ஜனங்களுக்கு வேண்டிய அரிசியை சீனு, ஜப்பான் போன்ற அன்னிய தேசங்களிலிருந்து வியாபாரிகள் கொண்டுவந்து விற்கலாமே? அப்படி விற்பதில்லை. நமது முப்பதுகோடி ஜனங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் நமது தேசத்திலேயே விளைந்தால்தான் உண்டு. பர்மாவிலிருந்து இந்தியாவுக்கு வருகிற அரிசியைத் தவிர வேறு அன்னிய தேசங்களிலிருந்து அரிசி, கோதுமை முதலிய பொருள்கள் கப்பலில் இங்கு வருவதில்லை. **இந்தியர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் இந்தியாவிலேயே உண்டானலொழிய அன்னிய தேசங்களிலிருந்து கிடைக்காதிருக்கும்போது** இத்தேசத்திலிருந்து வெளித் தேசங்களுக்கு மட்டும் நம் தேசத்தில் விளையும் பொருள்கள் வருஷா வருஷம் போய்க்கொண்டிருக்கின்றன. விலைகள் உயர்ந்து விளைவுமில்லாதிருக்கும்போதுகூட நமது அரிசியும் கோதுமையும் வெளிப்போதல் நிற்பதில்லை. இப்படிப் போவதை நிறுத்தி, நமது தேசத்திலேயே நமது ஆகார வஸ்துக்கள் தங்கியிருந்து ஜனங்களுக்கு நயமாய்க் கிடைக்கும்படி செய்வதற்கு, கவர்ன்மெண்டார் இங்கிலாந்துபோன்ற வெளிநாடுகளின் க்ஷேமசௌகரியங்களையும் கருத

"பிரபஞ்ச தரிசனம்"—161-ம் பக்கத் தொடர்ச்சி.

நேருக்கு நேர்ப் பழகும்போது யாரிடமெல்லாம் யோக்கியதையும் தகுதியும் காணபடுகின்றனவோ அவர்களை யெல்லாம் பெருந்தன்மையாகவும் சரிசமமாகவும் நடத்திவந்தால் இரண்டுபக்கத்திலும் மனநெகிழ்வும் வாஞ்சையும் ஏற்பட்டு நாம் எதிர்பாராத நன்மைகள் பல உண்டாகும். இதில் ஆங்கிலேயர்களும் அதிக இணக்கம் காட்டுவது அதற்கு அனுசரணையாக விரும்பத்தக்கது. ஸைமன் கமிஷனில் இந்தியர்களை ஆங்கிலேயர்களோடு சம அந்தஸ்துடன் சேர்க்க மறுத்துவிட்டிருக்கும் விஷயத்தை இங்கு ஞாபகப்படுத்திக்கொண்டால், மேல் குறிப்பிட்டிருக்கும் பேதமான உயர்வு—தாழ்வுச் சிந்தனைகட்கு அது ஒரு சமீப கால உதாரணமாக இருக்கும்.

உலகத்தில் கலைகள் தோன்றினது மனிதனுடைய உள்ளத்தை ஒரு நிலையில் வைத்து ஒழுங்குபடுத்தும் பொருட்டே.

வேண்டியவர்களாய் இருப்பதால் கூடாமையாகின்றது. உணவுப் பொருள்களின் விலையேற்றத்துக் குரிய காரணங்களில் இதுவும் ஒன்றும்.

***

மனிதர்களுக்குள் இருந்துவரும் பரஸ்பர சம்பந்தம் வெகு விசித்திரமானது. இவ்வுலகத்தில் ஏறக்குறைய எல்லாத் தேசக்களிலும் நாகரீகம் சிலவற்றில் அதிகமாகவும், சிலவற்றில் உபாயமாகவும் பரவியிருக்கிறது. இப்படிப்பட்ட தேசங்களில் ஜனங்கள் அவரவர் வீட்டில் வைத்துக்கொண்டிருக்கும் பொருள்களையும் சாமான்களையும் பார்த்தால் அந்தப் பொருள்களையும் சாமான்களையும் செய்துகொடுக்க இத்தனை வேலைக்காரர்கள் வேண்டியிருக்கும் என்று கணக்கிட்டுச் சொல்லுவது முடியாது. மிக்க ஐஸ்வரியம் பெற்று சகலவித போகங்களையும் அனுபவிக்கிற பணக்காரன் வீட்டிலுள்ள பதார்த்தங்களைப் பார்க்கவேண்டுமென்பதில்லை; ஒன்றுமில்லை ஒன்றுமில்லையென்று அன்றுடம் வேலை செய்து ஜீவனம் பண்ணுகிற அற்ப குடியானவன் வீட்டைப் பார்த்தால் போதும். மற்றொன்றும் வேண்டாம், அவன் மேலே போட்டுக்கொண்டிருக்கிற ஒரு துணியைப் பார்ப்போம்; அது எத்தனை வேலைக்காரர் சேர்ந்து துணியாயிற்று? பருத்திச் செடி வைத்து வளர்ப்பவன், பஞ்சு எடுப்பவன், நூல் நூற்கிறவன், நெய்கிறவன் முதலான வேலைக்காரர்கள் வேண்டியிருப்பதுக் தவிர, இவர்களுள் ஒருவரிடத்திலுள்ள சாமானை மற்றொருவரிடத்திற்குக் கொண்டு போய்ச் சேர்க்கவேண்டியதற்காக எத்தனை மூட்டைக்காரர்களும் வர்த்தகர்களும் வேண்டும்? அன்றியும் அநேக சாமான்கள் ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்திற்கு வெகுதூரம் போகவேண்டியிருப்பதால், எத்தனை கப்பல் வேலைக்காரர்களும் புகைவண்டி வேலைக்காரர்களும் வேண்டும்? இது மாத்திரமோ! இந்த வேலைக்காரர்களுடைய ஆயுதங்கள் ஒவ்வொன்றையும் செய்து கொடுக்க இதரமான வேலைக்காரர்கள் கணக்கில்லாமல் வேண்டியிருக்குமே! விசித்திரமான யந்திரங்கள் எத்தனையோ இருக்கின்றன; அவைகளெல்லாம் இருக்கட்டும்; மிகவும் அற்பமான சிறு கத்தியைச் செய்ய எத்தனைபேர் தேவையாயிருக்கிறது? இரும்பு வெட்டி எடுக்கிறவன்முதல் கன்னான் வரையுள்ள பல வேலைக்காரர்களுடைய கூட்டுத் தொழிலினால் கத்தி என்பது செய்யப்படுகிறது. ஒரு கத்திக்கு இத்தனைபேர் வேண்டியதென்றால், பெரிய ஆயுதங்களுக்கு எத்தனை பேர் வேண்டும்? இப்படி ஒவ்வொன்றையும் பார்க்கப் போனாலோ, சமுத்திரத்தில் இறங்குகிறதுபோ லிருக்கும். நுட்பமாய் விசாரிக்கிறதென்றால் கேட்கவேண்டியதில்லை. இப்படி ஒரு அற்பத் துணியைப் பிடித்துப் பார்க்குங்கால், இவ்வளவு தூரம் இழுத்துக்கொண்டு போனால், மற்றப் பதார்த்தங்களையும் தனித்தனியே இத்தன்மையாய் ஆராய்ந்து பார்ப்பது எப்படிப்பட்ட காரியம்? இந்த விஷயத்தை உள்ளாழ்ந்து பார்ப்போமானால், ஒருவன் தனக்கு வேண்டிய சாமக்கிரிகைகளையெல்லாம் தானே செய்துக்

உலகத்தில் பெரிய மனிதர்களின் கீர்த்தியால் சிறிய மனிதர்களின் தொண்டு மறைபட்டுப் போவது வழக்கம்.

கொள்வது கூடாத காரியம் என்பது விளங்கும். அநேகாயிரம் பேர்கள் சேர்ந்து ஒருவருக்கொருவர் ஒத்தாசையாக நின்று வேலை செய்யாவிடின், ஒன்றுமில்லாத ஏழைக்குக்கூட அவனுக்கு வேண்டிய அற்ப பதார்த்தங்கள் தானும் கிடைக்கமாட்டா. மனிதர்கள் ஒவ்வொருவரும் தம்மால் கூடிய வேலையைச் செய்து, மற்றவர்கள் செய்யும் வேலைகளின் பிரயோஜனத்தையும் பெற்று, இவ்வாறாக பரஸ்பர ஒற்றுமையாக வாழ்கிறார்கள் என்கிற பெரிய விசித்திரம் இதிலிருந்தும் நமக்கு நன்றாய் விளங்கும். இந்தப் பரஸ்பர ஒற்றுமை ஆச்சரியமல்லவா?

ஐயாயிரம் ரூபாய்க்குப் பிதிரார்ஜிதம் இருக்கிறதென்றால், உட்கார்ந்தபடியே தின்று கழித்துத் தூங்கிச் செலவிடும் நோக்கமுள்ளவனுக்கு அது எம்மாத்திரம்? அத்தொகை அவனுடன் எத்தனை நாள் கூடி வாழப் போகிறது? இன்னும் பிராந்தி ஷாப் பிரதர்களும் தாசிகளும் செலவுகளும் கூடிக் கொண்டாலோ—இந்த அல்பமான ஐயாயிரம் போதுமா?

உன் முடிவு உன் கையிலே!

அதிர்ஷ்டத்தின் சங்கதி அப்பால் இருக்கட்டும். நீ உழைப்பதைப் பொறுத்து உன் முடிவு இருக்கிறது. உழைக்காமலே உயர்தரமான எண்ணங்கள் கொண்டு பயனில்லை. முதலிலேயே டிப்டிகலெக்டர் வேலை வந்துவிடாது. எங்கேயாவது ஒன்றில் தொட்டுக்கொண்டு நெடுக உழைத்துக் கொண்டு போ. மேல் பதவி கிடைக்கும்போது கிடைக்கட்டும். ஒன்றுக்குள் இருக்கையிலேயே நான்கு இடத்து விசாரிப்புகளும் செய்துகொண்டு வா. ஒரே இடமே கதியென்று இருந்தால் உயிர் முடியாது. நீ சோம்பேறியாவதும், நல்ல உழைப்புக்காரனாவதும், யோக்கியனோ—அயோக்கியனோ ஆவதும் எல்லா முடிவும் உன் கையிலே இருக்கிறது. பிறரை ஏமாற்றிப் பிழைக்க நினைத்தாலும், கூலியைக் குறைத்து லாபமடையப் பார்த்தாலும் நீ கடைசியில் ஏமாறித்தான் போவாய். எதிலும் நீ நடந்துகொள்ளுகிற விதத்தைப் பொறுத்ததாய் உன் முடிவு. அந்த முடிவு உன் கையிலே!



பிரபஞ்ச நவீனங்கள்

1. இயர்ட்லி நார்ட்டன் என்னும் பிரக்கியாதி பெற்ற பாரிஸ்டர் ஒருதடவை ஒரு வழக்கில் மணிக்கு ஒன்பதினாயிரம் வார்த்தைகள் விகிதம் இடைவிடாமல் பதின்மூன்று மணிநேரம் பேசினாராம்.

2. ஐந்து தலைநாகம் என்று நாம் புராணக்கதைகளில் வாசித்திருக்கிறோமே யொழிய பிரத்தியக்ஷமாய்ப் பார்த்ததில்லை.



இந்தப் படத்தில் உள்ள இருதலை நாகம் மத்திய ஆப்பிரிக்காவில் ஸர்வ சாதாரணமாய்க் காணப்படுமாம்.

3. நியூஜிலாண்டு தேசத்திற்குள் பெரிய சிகரம் மவுண்டு கூக், ஜப்பான் தேசத்திற்குள் பெரியமலை ப்யூஜியாமா. இங்கிலாந்தில் பெரியது பேன்னேவிஸ். இம்மூன்று மலைச் சிகரங்களையும் ஒன்றின்மேலொன்றாக நிறுத்திவைத்தால் எவ்வளவு உயரமோ அதைவிட உயரமும் உலகத்திற்குள் உன்னத சிகரமானதும் இந்தியாவிலுள்ளதுமான மவுண்ட் எவாஸ்ட் என்று ஆங்கிலத்தில் விளங்கும் கௌரீசங்கர் என்னும் ஹிமோத்கிரி.

4. அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களில் ‘ மயாமி ’ என்னும் இடத்தில் அறுநூற்று நாற்பது ஏகா விஸ்தீரணமுள்ள நிலத்தில் ஒரு ஆகாய விமானத்தின் உதவியைக்கொண்டு இருபது நிமிஷத்தில் விதை தெளிக்கப்பட்டதாம். சாதாரணமாக இதை செய்துமுடிக்க இரண்டு மனிதர்களை வேலை செய்யச் சொன்னால் குறைந்தது முப்பது நாள் பிடிக்கும்.

5. ஸமுத்திரக் கரையிலுள்ள நண்டுகள் மிகவும் நரம்புதளர்ந்த ஜெந்துக்கள். ஆகாயத்தில் ஒரு பெரிய இடி இடித்தால் அந்த சப்தத்தின் அதிர்ச்சி தாங்கமுடியாமல் நூற்றுக்கணக்காய் உயிர்விடுமாம்.

6. ஊசியால் தையல் முதலிய வேலைகள் செய்வதில் இவ்வுலகத்திற்குள் கெட்டிக்காரர்கள் ஜப்பான் தேசத்துப் புருஷர்களாம். அவர்களுக்கு அடுத்தாற்போல் ருஷியா தேசத்து ஸ்திரீகளைச் சொல்லலாமாம்.

நாடகக் கம்பெனியில் சேருகிறவர்கள் உருப்படுவதில்லை. துன்மார்க்கத்துக்கு அங்கு வேண்டிய இடமிருக்கிறது. சேர்தனைக்குத் தம்பி யோக்கியராயிருப்போர் வெகு கொஞ்சம். வந்ததெல்லாம் பலவகைச் செலவே.

7. ஆஸ்திரேலியா கண்டத்திலுள்ள கங்காரு (Kangaroo) என்னும் மிருகம் சாதாரணமாக அறுபது அடியிலிருந்து எழுபதடி தாவுமாம். முப்பத்தேழு அடிககு மேல் குதிரை தாவினதாக கணக்கு இதுவரையில் எங்கும் ஏற்படவில்லையாம்.

8. சாதாரண கடிகாரத்தின் மயிர்விசை (Hair Spring) என்னும் கம்பி மிகவும் இலேசானதாம். ஒரு மைல் நீளமுள்ள கம்பியை நிறுத்தால் அரை பவுண்டு கனம்கூட ஆகாதாம்.

S. A. ஸ்ரீநிவாஸ சர்மா.

கொடுக்கவே மாட்டேனென்று ஒருவர் எவ்வளவு சொல்லினும், பிறகு தானே போய் வலியக் கொடுப்பதற்கு —பழகிப் போன அன்பு மனமே காரணம். எவ்வளவு கோபத்துட னிருந்தாலும் ஒரு பக்கம் அன்பு மனம் அவன் ..யோடிருக்கிறுனே என்று பதைக்கிறது. உண்மையன்பு எவ்வளவு வருத்தத்தையும் அலக்ஷியம் செய்துவிட்டு மறுபடி முன்போல் ஒன்று பட்டு சமாதான போய் விடும்.

வார்த்தைகளுக்குள்ள சக்தி.

சில வார்த்தைகளுக்கு சக்தியுண்டு. கவிகளின் வாக்குக்கும் பிரஸித்த தேசபக்தர்களின் வாக்கும் சக்தியுண்டு. இதன்றிக் குறித்த நிலைமையிலிருந்து சில மந்திரங்களை யுச்சரிப்பவர்கள் செய்தற்கரிய காரியங்களைச் செய்கின்றனர். பாம்பு தீண்டியவர்களையும், தேள் கொட்டியவர்களையும் மந்திரோச்சாடனத்தால் விஷநிவர்த்தி செய்திருக்கிறார்கள். சில மந்திரங்களைச் சொல்வதால் நல்ல பாம்புகள் அங்குமிங்குமோடாமல் படமெடுத்தாடிக்கொண் டிருக்கின்றன. வனத்திலுள்ள வேடர்களிற் சிலர் புலிகளின்வாயைக் கட்டிவிடுகின்றனர். எந்த இங்கிலீஷ் டாக்டராலும் தெளியாத மூர்ச்சையை மந்திரவாதிகள் தங்கள்மந்திரஉச்சாடனத்தால் தெளிவித்து எழுப்பிவிடுகின்றனர். இவற்றை யோசிக்கும்போது மந்திரத்தாலும் வித்திகளுண்டாமென்பது தெற்றென விளங்குகிறது. எதிலும் சற்று உண்மையுண்டு.

விவேகம் விநோதம் விசித்திரம் விகடம்	விகடப்பிரதாபன் REGISTERED TRADE MARK	அநுபவம் அற்புதம் ஆச்சரியம் ஆநந்தம்

தாறுமாறு தக்கடா புக்கடா !



ஆமப்பா ! விகடன் வருகிறுரப்பா ! நெடுக நீண்ட சங்கதியப்பா ! "ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டோன்றதும்" என்பதுதான் உண்மையப்பா ! எங்கு நோக்கினும் தாறுமாறுதானப்பா ! தக்கடா புக்கடா தானப்பா ! ஏனப்பா அப்படி ? அது வேளை செய்யும் 'கூறு' அப்பா ! காலம் செய்யும் கோலம் அப்பா ! உண்மையான உழைப்புக்கு விசுவாசத்தைக் காணுமைப்பா ! உழைப்பின் அருமை யறிந்து சம்பளம் கூலி உயர்த்துவதில்லையப்பா ! உள்ளதையும் குறைக்கப் பார்ப்பதப்பா ! இன்னும் அதிலே அது சொத்தை, இது புளியங்காய், அது 'பொத்தல்' என்று இல்லாத நோட்டம் கோளாறுகள் எல்லாம் சொல்லுகிறதப்பா' இவ்வளவையும் கேட்கிற பார்க்கிற உழைக்குங் கட்டையினுடைய உத்தம நெஞ்சு என்ன பாடு படுமப்பா ! அது அங்கே தாறுமாறு தக்கடா புக்கடா ஆகி, ஒரு கலக்கு கலக்கி விடுகிறதப்பா ! நல்ல வேலைக்கு நாலு சொட்டு சொன்னல் நல்ல மனது அதை எப்படிப் பொறுப்பதப்பா ! உள்ளம் வெந்து உடைந்துபோகிறதப்பா ! மேற்கொண்டு வேலை எதுவும் செய்யப் புத்தி போகாமல் விசாரத்திலே வீழ்த்தி விடுகிறதப்பா ! இது ஒரு தாறுமாறு அப்பா ! இதுபோல ஆயிரம் தாறுமாறு நேர்ந்துகொண்டு தக்கடா புக்கடா ஆகிறதப்பா ! விகடன் அவற்றை யெல்லாம் ஒரு கோர்வைப்படுத்திக் கொட்டுகிறேன் கேளுங்களப்பா !

"இதுவோ விதி ஐய்யனே !" என்ருள் சந்திரமதி அந்த நாளிலே ! அவளது தர்மமான குடும்பம் தாறுமாறு கண்டது ஏனப்பா ? ஒரு குட்டிச்சுவர் முனியன் குறுக்கே புகுந்து செய்யத கோரணிகளல்லவா இது ? கடைசியிலே யார் வாழ்ந்தார், யார் கெட்டாரென்பது என் நஞ்சான் குஞ்சான்கள் அறிந்துவைத்த சங்கதியே ! "தவவேடமிது தகுமா— அந்த சக்ரவர்த்திக்குமிது சம்மதமா சாமி" என்ருள் சடைமுடி மரவுரி ராமனை நோக்கிச் சீதா. அங்கே தாறுமாறு தக்கடா புக்கடா ஆக்க ஒரு கைகேசி முளைத்தாள் ! கருத்த

அச்சம் இருக்கிறவரை நீ அறிவாளியாகமாட்டாய். ஆண்மையும் இல்லை.

உருவுடனே இளைத்துத் தோன்றிய நளனைக் கண்டு—"புதிய வருவேர டும்மைப் போற்றவே நேரிட்ட பொல்லாத வினைக்கழவனே" என்று துடிதுடித்தாள் தமயந்தி! அவள் வாழ்வில் தாறுமாறு காட்ட ஒரு சாக்கடை சனீஸ்வரன் தோன்றினான்! "நாடாண்டதும் பாண்டவர்கள் என்கிறர்கள், காடாண்டதும் பாண்டவர்கள் என்கிறர்கள், சகுனி மாமா! நாம் என்னத்தை யாண்டோம்?" என்று முடிவிலே துரியோதனன் அலறித் தவித்தான். அவன் குடிகெடுக்க ஐயோ! ஒரு அவதிச் சகுனி வந்து அமைந்தான்! இப்படியே இராவணன் வாழ்வு தாறுமாருக ஒரு சூர்ப்பநகி வந்தாள். அந்தக்காலத்தில் குந்திதேவி 'கர்னன் எனக்குப் பிறந்தவன், அப்பா தர்மா, அவன் உனக்கு மூத்த அண்ணன், சண்டை வேண்டாமடா' என்று தர்மருக்குத் தெரிவித்திருந்தால் பாரத யுத்தமே நேரிட்டிராது! பாண்டவர்கள் கர்னனின் தம்பிகளென்று துரியோதனன் தெரிந்து கொண்டால், அப்பொழுதே எல்லாப் பொறுமைகளையும் விட்டுவிட்டு கேட்ட நாடு சீமைகளெல்லாம் தந்து ஒன்ருகிப்போவான். இதைச் சொல்ல வொட்டாதபடி குந்தி தேவியைத் தடுத்து, போர் தோன்றவைத்துத் தாறுமாறு புரிந்தவர் அந்தக் கிருஷ்ண மூர்த்தி! புராண கதைகள் இப்படி இருக்கட்டும். இனி விகடன் ஊர் கதைகளை என் பொக்கை வாயைக் கொண்டு மெல்லுகிறேன். மெதுவாகச் செவி சாய்த்திடுங்கள்.

***

ஊரிலே அச்சுக்கூடங்கள் பெருத்துப்போனதால் உதவாக்கறையான நூல்களெல்லாம் தாறுமாருய் வெளிவரத் தொடங்கிக்கொண்டன. காலணு 'அரையணு கூவரமெல்லாம் கால் ரூபா அரை ரூபாயில் தாறுமாறு செய்கின்றன! ஆசாரத்தைக் காத்து வந்த அரிவையரெல்லாம் ஐரோப்பிய துரைசானிகளாகித் தாறுமாருன உடை | நடை பாவனைகளில் தாண்டவம் புரிகிருர்கள்! தண்ணீர்ப்பந்தல்களெல்லாம் தலை கவிழ்ந்து கள்ளு—காபிக்—கடைகள் பெருத்துத் தாறுமாருயின! சிறியவர் பெரியவர் என்ற மரியாதைகளெல்லாம் சிதறித் தாறுமாருய் மண்ணுயின! அன்ன சத்திரங்களெல்லாம் அடியோடு இடிந்து அநியாயங் கொண்டன. பாட்டி, கொள்ளுப்பாட்டி தரித்த நகைகள் எல்லாம்போய் கோணல் சாணலான புதிய நகைகள் வந்து நட்டுக்கொள்ளலாயின! நாகரீகம் முத்தமுத்த வீட்டுச்செலவுகள் விழி பிதுங்கலாயின! கன்ணு பின்ணு செலவுகளெல்லாம் கண்டபடி பெருகிவிட்டன. இவையும் இவை போன்றவைகளும் ஒவ்வொருவிதமான தாறுமாறுகளல்லவா? இது போக, வேறுவிதமான தாறுமாறுகளைக் கேட்கிறீர்களா?

***

தன் தந்தை பாட்டன் இருந்த அந்தஸ்துக்குத் தான் கால்பண சம்பளத்துக்கு உழைக்கப் போவதாவென்று உறுமிக்கொண்டு வேலை வெட்டி எதையும் நாடாமல் வீட்டிலேயே பெரிய மனிதனுய்க் குந்திக் கொள்வதில், அந்தக் குடும்பம் உள்ளதையெல்லாம் விற்றுத்தின்று பின்பு செலவுக்கின்றித் தத்தளித்து நடுத் தெருவுக்கு வந்து தாறுமாருகி விடுகின்றது! நெருங்கிய பாத்திய

எவ்வளவு துன்பமானுலும் பட்டுக்கொண்டு உலக ஆசையை விடாமல் இன்னும் நெடுநாள் வாழவே பார்க்கிருர்கள்.

முன்னவர்களுக்குக் கடைசிவரையில் அன்னம் தண்ணீர் கொடாதிருந்து விட்டு, அவர்களும் தங்களுக்குப் பிராணுதாரமான மகன், பேரன் வீட்டில் காலத்தைக் கடத்திவிட்டுச் சாகும் சமயத்தில், ஓ! நானே கொள்ளிவைக்கப் பாத்தியஸ்தன், அந்த சவம் எனக்குச் சொந்தம், என் வீட்டிலே கொண்டுவந்து போட்டுக்கொள்ளுகிறேன் என்று எதுவும் உதவாத இந்தப் பாத்தியஸ்தர்கள் துள்ளிக் கொக்கரிக்க, அங்கே பாத்தியதை இல்லாத மகளும் பேரன் பேர்த்திகளும் ஐயோ! இதுவரை எங்களுக்குச் சொந்தமாயிருந்த தாச்சே, இதோ அதோ என்று இருக்கையில் நோக நோகத் தூக்கிக் கொண்டு போகலாமா, கொண்டு போய் என்ன பண்ணுவார்களோ என்று கதறியழ, இதன் நடுவிலே போகிற உயிரும் போகாமல் பிழைத்துக்கொள்ள, அப்பால் இத்தனை தாறுமாறு செய்த ,தறுதலைகளும் ஒரு பக்கம் அடங்குகிறார்களானாலும், அவர்கள் மற்றவர்களைக் கதறியழவைத்த தாறுமாறுகளுக்குத் தெய்வம் அவர்கள் குடும்பத்தையே தாறுமாறு தக்கடா புக்கடா ஆக்கிச் சிதறுண்டு போக வைத்துவிடுகிறது! அதோ ஒரு தந்தி! வாழ்ந்து கொண்டிருந்த அவன் மகள் விதவையானாள்! இதோ ஒரு தந்தி! மற்றொரு மகன் போய்விட்டான்! இன்னும் எட்டுகிறது ஒரு தந்தி! பிரசவத்துக்குப் போன மனைவி கண்மூடிவிட்டாள்! கடைசியில் இந்தத் தாறுமாறுக்காரனே காலைக் கிளப்பிக்கொண்டு திரும்பிவாராத பச்சைப் பல்லாக்கு ஏறிவிடுகிறான்! ஆ! பிறருக்குத் தாறுமாறு செய்ததில் குடும்பம் போன தாறுமாறு பார்த்தீர்களா! பழைய நாளிலே ஒரு பொல்லாப்பு செய்ததற்கு மறு ஜன்மத்திலே கூலி கிடைக்கும் என்பார்கள். இந்த நாளிலோ உடனுக்குடனே சட்புட்டென்று பட்டாசு வெடித்ததுபோல அப்போதைக்கப்போதே பதிலுக்குப் பதில் கிடைத்துவிடுகிறது!

***

இன்னொரு வேடிக்கையான தாறுமாறைக் கேளுங்கள். ஒருவனுக்கு ஐம்பது ஐம்பத்தைந்து வயதுக்குமேல் என்னவோ ஒருநோக்கம் குதித்தெழுகிறது. ஒரு கலியாணம் வேண்டுமென்கிறான். இவனிடம் சக்திதத்துவம் உண்டோ என்னவோ! எப்படியோ ஒரு குழந்தை பெற்றுவிடலாம், பிள்ளை யில்லாதவன் என்ற பேரைப் பொசுக்கிவிடலாம் என்று எண்ணுகிறான். அதற்கு ஜதை கூட்டிவைக்க இரண்டொருவர் ஏற்பட்டு ஒரு மூலை முடுக்குச் சந்தில் உள்ள பெண்ணை இழுத்து வந்து தாலிகட்டி கல்யாணத் தரகு வாங்கிக் கொள்கிறார்கள். கடைசியிலே விவாகம் ஆன நாலாம் மாசத்திலே நமனுக்கு இரையாகிவிடுகிறான். புறப்படுகிறானப்பா தம்பிக்காரன்! ஓ! எல்லாம் என் சொத்து, போடி வெளியிலே என்கிறான் அண்ணன் மனைவியை! அவளுக்கும் நாலு பேர் முளைக்கிறார்கள்! எதிர்த்துப் பேசி, ஓ! எல்லாம் எங்கள் பெண்ணுக்கே பாத்தியதை என்கிறார்கள்! கடைசியில் கோர்ட்டுக்குப் போய் தாலியறுத்துக் கொள்கிறார்கள். வக்கில்களுக்கு நல்ல வேட்டை! இது சாகிற காலத்தில் தனக்குத் தானே உண்டாக்கிக்கொண்ட தாறுமாறல்லவா! இதில் யார் வாழ்ந்தது யார் உருப்பட்டது? எல்லாம் தக்கடா கேள்வி புக்கடாவாகிறது! இதிலே

இன்னொரு குறிப்பும் விகடன் காட்டுறேன். அண்ணன்தான் கட்டையேறினான்; தம்பிக்காரன் பொறுமைப்படக்கூடாதா? சமயன் செத்த மறுநாளே அவன் மனைவிக்கு அன்னம் கிடையாதென்று தூத்தி எனடா அப்பா தாறுமாறு செய்ய வேண்டும்? இதிலே ரோஷம் பிறந்து அண்ணன் மனைவி கோர்ட்டு ஏறி பாகப்பத்திரப்படி தன் கணவன் சொத்துகளைத் தானே அடைய, இங்கே தம்பிக்காரன் வாயில் விரலை வைத்து விழித்து எல்லாம் வழக்குக்குத் தோற்று ஓட்டாண்டியாகிறான்! இது தம்பி தன் தலைக்கே செய்து கொண்ட தாறுமாறுதானே! ஒத்துப்போயிருந்தால் ஒத்தைக்காசாவது மிச்சம்படுமே ராகவா!

***

விகடன் வேறொரு தாறுமாறைச் சொல்லுகிறேன். ஒன்றாய் ஒரு ஜனமாய் ஒருமித்திருந்த குடும்பத்திற்கு ஒரு சனீஸ்வரன் பிறக்கிறது. வீட்டுத் தலைவன் இரண்டாந்தாரமாக ஒரு பெண்ணைக் கட்டிக் கொண்டு வருகிறான். அந்த சீமாட்டி விகடனுக்கு மேலே அதனப் பிரஸங்கி! விகடனைப்போல அவளும் அகன்ற வாய் கொண்டவள். விகடனுக்குத் தங்கச்சி என்று வைத்துக் கொள்ளுங்களேன்! வந்த புதிய அம்மா தன் வாயைத் திறக்கிறாள்! எல்லாமே ராமபாணமாய்க் குத்துச் சொல்லாய்ப் புறப்படுகிறது. நேற்று வந்தவளுக்கு இவ்வளவு திமிரா என்று வீட்டிலுள்ள ஜனங்களும் எதிர்க்கிறார்கள்! வீட்டுத் தலைவனோ தன் ஆசைக்கண்ணாட்டியின் பக்கம் சேர்ந்துகொள்கிறான். இது வீட்டிலிருப்பவர்களுக்கு சகிக்கிறதில்லை. கடைசியில் ஒன்றாயிருந்த குடும்பம் பத்தெட்டுச் சில்லுகளாகப் பிரிந்து தனித்தனியாகித் தாறுமாறாய் முடிகிறது! தன் பெண்ணுக்குத் துணையாக ஒருத்தியைச் சேர்த்துப் புருஷன் வீட்டுக்கு அனுப்பப் போக, அந்த ஒருத்தியோ அந்தப் புருஷனை மயக்கித் தன் ஆசைக்கண்ணாளன் ஆக்கிக்கொண்டு அவன் மனைவிக்கே உலைவைத்துத் தாறுமாறு செய்பவளாகிவிடுகிறாள்! இருகூட்டான வியாபாரத்துக்கு நடுவில் தனக்கு உதவியாக ஒருவனைச் சேர்த்துக் கொள்ளப்போக, அவனோ இன்னொரு கூட்டாளியுடன் சேர்ந்துகொண்டு இவன் தலைக்குக் கொள்ளிவைக்கத் தொடங்கிவிடுகிறான்! இது ஒரு தாறுமாறு! ஒண்டியிருக்க இடம் கொடுத்ததற்கு அவனே வீட்டுக்குத் தலைவனாகித் தன்னைச் சேர்த்துவைத்தவனை வெளியே தூத்தித் தாறுமாறுகள் செய்யத் தொடங்கி விடுகிறான்.

***

நன்றாகப் படித்தவன் நாஜூக்காக நாலு பணம் சம்பாதிப்பான், நாற்காலி மேஜையோடு இருக்கிறான் என்று பெண்ணைத் தரப்போக, அவனோ தன் மாமி வீட்டுச் செல்வ ராசிகளைக் கண்டுவிட்டு இனி ஏன் நமக்கு உழைப்பு உத்தியோகமென்று உதறிவிட்டு, தன் மாமி வீட்டிலேயே செல்வ மருமகப்பிள்ளையாய்க் குந்திக் கொண்டு நாலைந்து குட்டிகளும் போட்டுவிடுகிறான்! ஐயோ! மருமகப்பிள்ளை சம்பாதித்து வருவாரென்றிருந்தேனே! இப்படிக் குந்திக்கொண்டுவிட்டாரேயென்று மாமி வயிறு வேகிறாள்! இருந்ததெல்லாம் செலவிட்டு, கொடுத்த குடும்பமும் கொண்ட குடும்பமும் தாறுமாறு

உலகமானது எல்லையற்றதாயினும் நமது கண்ணுக்கும் புத்திக்கும் தெரியக்கூடிய அநேக பொருள்களும் கொள்கைகளும் அதிலிருக்கின்றன.

கின்றது! இதன் நடுவிலே பல மனஸ் தாபங்கள், சச்சரவுகள், பேச்சுக் குத்தல்கள், தக்கடாபுக்கடாக்கள்! முதல் பெண்ணைக் கொடுத்தபோது அவள் அதிர்ஷ்டத்துக்கு அவன் குச்சு வீட்டிலிருந்து உயர்ந்து எழடுக்குமளை மெத்தை உப்பரிக்கை கட்டினான். அவள் கண்மூடுண்டு போக, அவ்வளவு செல்வமும் எட்டாமற்போகிறதேயென்று இரண்டாம் பெண்ணை அவனுக்குத் தரப்போக, இங்கே இந்த சின்னவளின் அதிர்ஷ்டமோ அவனுடைய எழடுக்கு மாளிகையும் விற்றுத்தீர்ந்து நொந்து நஷ்டப்பட்டுப் பழைய குச்சு வீட்டுக்கே கால் வைக்கும்படி காலகதி வாய்த்துவிடுகிறது! இது ஒரு துரதிர்ஷ்டத் தாறுமாறு அல்லவா!

*_**

எல்லாம் பெண்களாகவே பெற்றுப் போட்டுவிட்டுப்போன சிமோட்டியின் வீட்டிலே எப்போதும் அடுப்பில் நெருப்பு இருந்து வந்தது. நாலு பேர் வரப்போக, வந்த விருந்து வரிசைகளையும் தாங்கச் சக்தி இருந்துகொண்டிருந்தது. ஆனலோ இவ்வளவு சொத்துக்களுக்கு எல்லாம் பெண்குட்டிகளாகவே பிறந்துவிட்டதே, இவற்றையெல்லாம் ஆண்டு சமாளித்துக் குடும்பப் பேர் சொல்ல ஒரு ஆண்குழந்தை பிறக்காமற் போயிற்றே என்ற அங்கலாய்ப்பின் பெருமூச்சுமட்டும் அடிக்கடி தோன்றிக் கொண்டிருந்தது. ஆனலோ, அவளுக்குப் பின் வந்தவளோ ஒவ்வொரு பேற்றுக்கும் ஆண் குட்டிகளையே போட்டுவந்து வீடுமுழுதும் நிறைத்துவிடுகிறாள். சரிதான்! சந்தோஷம் தான்! நடக்கிற சங்கதி யென்ன என்பீர்களோ? பெண்மக்கள் பிறந்துகொண்டிருந்தபோது வியாபார உத்தியோகங்கள் விர்த்தியாகி வெகு வெகுவான சொத்துகள் சேர்ந்துகொண்டிருந்தது. அது ஒருகாலம்! ஆண் குட்டிகள் அடுக்கடுக்காகப் பிறந்து மிகுந்துவிட்ட இப்போதோ இருந்தவர்த்தகம் உத்தியோகம்யாவும் தொலைந்து அன்னமோ ராமச்சந்திரா என்று எங்கும்படியான வேளையாகிவிட்டது! “போன மாசத்து சம்பளம் பொட்டியிலிருக்குது, இந்த மாசத்து சம்பளம் ஜேபியிலிருக்குது, நத்துபண்ணி போட்டுக்கோ—புலாக்கு பண்ணிப் போட்டுக்கோ, மீந்த பணத்துக்கு தங்கமே மிஞ்சிபண்ணி போட்டுக்கோ” என்று தங்கம்பாட்டு பாடித் தாண்டவராயப் பிள்ளையாயிருந்த காலமெல்லாம் தாண்டிப் போய் தவிக்கும் காலமாய்விடுகிறது! சொத்து ஐசுவரியங்கள் இருந்த வேளையிலே ஆண் குழந்தைகள் இல்லை. ஆண்குழந்தைகள் அருமையாய்ப் பிறந்துவிட்ட பொழுதிலே அரைக்காசுதானும் வீட்டில் இல்லாமல் துடைத்துக் கொண்டுபோய்விட்டது! இதை விகடன் என்னென்று சொல்லட்டும்? இவைக ளெல்லாம் ஏறுமாறான தாறுமாறு தக்கடா புக்கடாக்கள்தானே! விகடனின் அதனப் பேச்சு இந்த முறைக்கு இவ்வளவு போதும். மற்ற சரக்குகளுக்கு மறு மாதம் வந்து வாயைத் திறக்கிறேன். ராம்! ராம்! சுபம்! சூ! சுவாஹா!!

அகட விகடம்.

ஐசுவரியம் சொத்துக்கள் விருத்தியடைவதற்கு உள்ள நிலபலங்களையெல்லாம் விற்று நாலைந்து மோட்டார்கள் வாங்கிவிட்டால் போதுமானதென்று தற்காலப் புது நாகரீகங்கள் இரைச்ச விடுகின்றனவாம்!

வரும் சம்பளத்தை மிச்சப் படுத்திப் பாங்கியில் போடுவதற்கு, இன்னும் நாலைந்து காபி ஹோட்டல்களும்; வீட்டுக்குச் சில விருந்தினர்களும் வேண்டியிருக்கிறதாம்!

எவ்வளவு வந்தாலும் கிடைத்தாலும் அந்தப் பழய எச்சில் புத்தி நாற்றம் என்றைக்குமே வீசிக் கொண்டுதான் இருக்குமாம்.

அண்ணன் உழைக்காமல் சொத்து சேர்ப்பதற்குத் தன் தங்கைக்கு நல்ல பணக்கார கிழமாப்பிள்ளையைத் தேடவேண்டுமென்று பேராசைப் புராணம் செல்லெரித்த படலத்தில் கூறுகின்றதாம்.

எவரேவரோ வந்து தின்று தொலைகிறார்கள். வீட்டுக்காரனுக்கு அவர்களை முன் பின் தெரியாது. வீட்டுக்காரிக்கு அவர்கள் உறவாம்! செலவுமட்டும் வீட்டுக்காரனுடையதே. இவ்வளவு செலவுசெய்தும் வீட்டுக்காரனுக்கு அத்தனை உப்புமா சாபி கிடைக்குமோ என்பது சந்தேகம்! ஒன்றும் மிஞ்சக் காணேமே என்கிறாள் மனைவி! அப்படியா, சரி யென்கிறான் வெடுவெடுப்புடன் இவன்!!

அதிகமான களைப்பு.

வரக்கூடாத விசேஷ விருந்தினர் சிலர் வந்துவிட்டால் சக்திக்கு மீறிய பிரயாசையில் அன்று முற்றும் சரியாகி விடுகிறதாம். அந்த நல்ல சமயத்துக்குத் தக்கபடி வீட்டுப் பெண்கள் மாதவிலக்காகிவிட இன்னும் அதிக திகைப்பாம்! பக்கத்து வீட்டினர் எதிர் வீட்டினரைக்கொண்டு சகலமும் நடத்தி உபசரிக்கிறதில் மற்றவர்களும் கூட இருந்து உழைத்தாலும், விசேஷக் கவலையும் முழுப் பொறுப்பும் வீட்டுத் தலைவனையே சேருவதால், அவன் அதிகவேலை செய்யாதிருந்தாலுங்கூட, அவனுக்குத்தான் மற்ற யாவரையும்விட அதிக களைப்பும் ஆயாசமும் உண்டாகின்றதாம். விசேஷ விருந்தினரை மனஸ்பூர்வமாக உபசரிப்பினுங்கூட, அவர்கள் புறப்பட்டுச் செல்லும்போது இவனுக்குத் தன் தலைமீதிருந்த பெரிய பாரம் தன்னை விட்டுக் கீழே இறங்குவதுபோல் இருக்குமாம். இது உண்மைதானு?



பாரத ரமணிகளின் வித்வத்துவம்.

(107-ம் பக்கத் தொடர்ச்சி.)



மஹா பாரதத்தில் உத்தியோக பருவம் 197-வது அத்தியாயத்தில் அம்பா என்பவள் யமுனை தீரத்தில் கடூரதவம் செய்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. தாரிணியும், அவள் சகோதரியும் பிரம்மவாதினிகளாய் கர்மானுஷ்டானத்திலும் ஞானானுஷ்டானத்திலும் நன்னிலைமை பெற்றவர்கள்.

மலயவதி என்பவள் சாலிவாகனனுடைய மனைவி. அவள் சப்த சாஸ்திரத்தில் மகா பண்டிதை.

தேவதத்தன் பார்யை கமலா தேவி விச்வத்தில் மிகவும் மேன்மை பெற்றவள்.

மிருகவதி உதயனசாரியின் தாயார். குமாரனுடைய வித்யா வைபவதத்துக்கு இவளுடைய சிக்ஷையே காரணம்.

ஸங்கிருத்யினி மகா பண்டிதையா யிருந்ததுடன் கடூரமான தவமும் புரிந்தாள்.

அகா என்பவள் ராமதாஸ் ஸ்வாமியின் சிஷ்யை. ஆத்ம விசாரணையில் அதிக ஆசையுள்ளவள்.

பங்கா என்பவள் குயவன் மகள். அநேக சாஸ்திரங்களை கற்றிருந்தாள். அத்வைத வேதாந்தத்தை மிகவும் அப்யாஸித்தவள்.

ராஜா அநந்த தேவன் பத்தினி ஸ்ரீயவதி, பண்டிதமணி யென்று பெயர் பெற்றிருந்தாள்.

முக்தாபாய், மோகனாங்கி, பிரேமா பாய், கிரிஜாபாய், ஜானபாய் முதலிய பெண்கள் சிறுபோது முதல் அநேக சாஸ்திரங்களை அப்யாஸித்து மகா பண்டிதைகளா யிருந்தனர். இவர்கள் ராஜநீதி, ஜோதிஷம், ரஸாயன சாஸ்திரம், பூகோளம் முதலியவற்றில் மகா ஸமர்த்தர்கள். இவர்களிற் சிலர் ராஜ சபையில் பிரம்மவாதம் செய்வார்கள். பக்தவிஜயம், கவிசரித்திரம், கோஸலேஸ்வர விஜயம் இந்த நூல்களில் இவர்களைப் பற்றி அறியலாம்.

"மாலதி மாதவம்" ஆறாவது அங்கத்தில் மாலதி மகா பண்டிதையாய் ஶ்ரீசத்வத்திற்கும் நிர்வாணத்

ஏமாந்தபடி நிதம் காமந்தகாரம் மிகும் ஈனர்முன் பேசவேண்டேன்.

துக்கும் இருக்கும் பிரபேதத்தைப் பற்றி ஆலோசனை செய்து சர்ச்சித்த தாகக் கூறப்பட்டிருக்கிறது.

காமந்தகி என்பவள் பௌத்த சாஸ்திரத்துடன் ஹிந்து தர்ம சாஸ் திரங்களையும் படித்திருந்தாள்.

கௌசிகி வித்யா பாண்டித்யத் தால் பண்டிதை யென்று பெயர் பெற்றிருந்தாள்.

சுசீலா என்பவள் கபிலவஸ்து நகரத்திலிருந்த ஒரு பிரபுவின் புத் திரி. இவளது சௌந்தர்யத்துக்காக அநேக ராஜ குமாரர்கள் மோகங் கொண்டு அவளை மணந்து கொள்ளப் பிரயாஸைப்பட்டனர். அவள் தன் தந்தையின் ஐசுவரியத்தை வெறுத்து விட்டு இவ்வுலக சுகத்தை அற்பமாய் மதித்து பாரமார்த்திக சுகத்தை அடையத் தவம் செய்தாள். இதைக் கண்ட ராஜகுமாரர்களெல்லாம் வை ராக்கிய மடைந்தனர்.

ஸோமா என்பவள் பிராமணப் பெண். அவள் ஞாபகசக்தி அத்யாச் சர்யமானது. ஒரு முறை படித்த தை என்றைக்கும் மறவாள். ஏக ஸந்தக்கிராகியாய் ஸகல சாஸ்திரங் களையும் அத்யயனம் செய்து தபஸ்வி விருந்துவிட்டாள்.

(தொடரும்.)

மனம் அங்கு அதிகம் போகிறது.

தன் தந்தையையே ஒரு குழந்தை அதிகமாகச் சுற்றிக்கொண்டு நின்றால், தாயார்மீது அக்குழந்தைக்குப் பிரியமில்லை என்று சொல்லலாமா? தாயையே சுற்றி நிற்கும் குழந்தைக்குத் தந்தைமீது பிரியமில்லை யென்று சொல்லிவிடுவதா? ஸ்வாமியின்மீது அவ்வளவு பக்தி செய்யாமல் அம்மன்மீதே அதிகமான பக்திப்பெருக்கு சிலருக்கு உண்டாவதனால் ஸ்வாமியை லக்ஷ்யம் செய்யவில்லை யென்று பொருள்படுமோ? அதிகமாக அங்கு மனம்போகிற ஒரு தன்மையைப் பொருத்துக் களங்கமற்றதாய் இந்த நிகழ்ச்சி ஏற்படுகிறதேயன்றி, ஒருவரைத் தாழ்த்தி மற்றவரை உயர்த்துவதென்பதில் இது சம்பந்தப்பட்டதல்ல. கைக்குழந்தையின்மீது அதிக பிரியம் கொண்டால் அதனால் முன்பு பால் கொடுத்து வளர்த்த மற்றக் குழந்தைகளின்மீது அவ்வளவு அன்பில்லை யென்று சொல்லி விடுகிறதா?

வேலையில் என்னவோ கெட்டிக்காரனே. ஆனால் தான் வேலைக்குப் போன இடத்தில் எல்லாம் எஜமானனுக்குக் குல்லா போடுபவனானலோ எங்கும் பிழைப்பு கிடைக்காது.



Letter XIV.

The Son's Answer.

Honoured Sir,

It was one of the first lessons you taught me, that gratitude is the noblest principle that can actuate the heart of man; but what must it be, when connected with filial duty, incumbent on a son to the most indulgent parent! I am left in a situation that may be felt, but not described. That my worthy and hurried away to distant country, almost fills me with horrer; especially, when I consider, that I may never have an opprtunity of seeing you any more. I am convinced that your friendly advice to me is such, as if strictly followed, must be attended with the most beneficial consequeuces to myself; my honour and happiness will equally depend on adhering to it, and I shall always consider it as my second

14-ம் கடிதம்.

அந்தக் குமாரனின் உத்தரம்.

கனம் பொருந்திய ஐயனே,

நன்றி மனதிலிருந்தால் இன்னொன்று செய்யத் தூண்டுதற்கு மஹா நல்ல வழியென்று முதற்பாடமாக நீங்கள் எனக்கு கற்பித்திருக்கிறீர்களே. அந்த நன்றி மஹா அன்புள்ள தந்தையின்மட்டில் பிள்ளைக்கு இருக்கவேண்டிய கடமையுடன் சேர்ந்தால் எப்படி யிராது? என்னை விட்டிருக்கும் இடத்தின் சௌக்கியத்தை நீங்கள் மனதினால் அறிந்து கொள்ளத் தகுமே யொழிய என்னால் எழுத முடியாது. ஆனால் கனமும் பெருந்தன்மையுமுடைய என் பிதாவாகிய நீங்கள் இத்தனை தீவிரத்துடன் தூர தேசம் போய்விடுதலும், இனி உங்களைக் காண எனக்குச் சமயம் கிடையாதே யென்பதை யோசித்தலும் எனக்குப் பெரிய வருத்தமா யிருக்கின்றது. நீங்கள் எனக்கு எழுதிய அன்பான புத்திக்குச் சரியாக நடந்தால் எனக்கு அது மஹா நன்மையாய் இருக்குமென்பது நிச்சயமே. நான் அதற்கு ஒத்து நடப்பதற்குத் தகுவதாய் எனக்குக் கீர்த்தியும் செல்வமும் சமமாய் உண்டாகும். அன்றியும் மேன்பாடுடைய என் தந்தையாகிய உங்கள் கட்டளைக்குக் கீழ்ப்படிதல் என்றைக்கும் எனக்கு மஹா பெரிய கடனாகவும் எண்ணுவேன். (என்னை இங்கே

ராஜீகப் பக்ஷவாத நோய்க்கு ஸ்வராஜ்யமே திவ்ய ஔஷதம். ஆனால் ஒற்றுமை கெட்டால் ஸ்வராஜ்யம் சொற்பன வுலகத்திலிருக்கிறது!

greatest duty, to obey the precepts of my worthy father. I have gone already so far as to be able to read Xenophone, and next week I enter upon Homer. I have some thoughts, if agreeable to you, to take chambers in one of the inns of court, in order to study the law; my inclination runs that way, but I submit it wholly to your approbation. Let me beg to hear from you as often as possible, as it will be the greatest pleasure I can enjoy during such a separation.

I am honoured sir,

Your most affectionate son

John.

விட்ட) இத்தனை நாளைக்குள்ளே 'செனோபான்' என்பவாது நூல் வரைக்கும் வாசிக்க எனக்குத் திறமையுண்டானது மல்லாமல் வருகிற வாரம் 'ஹோமர்' என்பவாது நூலும் ஆரம்பிக்கப் போகிறேன். உங்களுக்கு இஷ்டமா யிருந்தால், நீதி சாஸதிரங் கற்கும்படி அந்த சாஸ்திர சங்கத்தில் பிரவேசிக்க எனக்கு யோசனையும் இருக்கின்றது. ஏனெனில் என் மனம் அப்படிச் செல்லுகின்றது. ஆகிலும் அதை முழுதும் உங்கள் இஷ்டத்தில் வைத்திருக்கிறேன். கூடியமட்டும் அடிக்கடி உங்கள் சமாசாரங்களை எனக்கு எழுதப் பிரார்த்திக்கிறேன். அது உங்களை விட்டு இப்படிப் பிரிந்திருக்கும் வேளையில் எனக்கு மஹா பெரிய சந்தோஷமாக இருக்கும்.

இப்படிக்கு,

கனம் பொருந்திய பிதாவே.

மிகவும் அன்புள்ள உங்கள் தனயனாகிய

ஜான்,

திட்டமானஎண்ணம்உன் வாழ்க்கையின் நோக்கமாக இருக்க வேண்டும். அதே நோக்கம் கைகூடும் வரையில் சோம்பலின்றி ஊக்கத்துடன் நீ உழைக்கவேண்டும். செய்துமுடித்தே தீர வேண்டுமென்கிற தீர்மானமும் விவேகமும் உனக்கு இருக்குமேயாகில், அசாத்தியமான காரியம் உலகத்தில் எதுவுமே யில்லை. விவேகம் என்பது என்ன? சரியானமுன்யோசனையுடன் சலிப்பில்லாமல் ஊக்கத்துடன் உழைப்பதே விவேகம்.

நண்பர்களா யிருப்போரின் குற்றங்களைக் காலமுழுதும் மன்னித்துச்செல். அவர்களின் தவறு, மோசம் எதையும் மனதில் வைக்காமல் நேசித்தும் உபகரித்தும் வா. ஏனெனில் துன்பமயமான இவ்வுலகில் தம் முகத்தை உனக்குக் காண்பித்து உன்னைப் பூரித்து உல்லாஸப்படும்படி செய்யும் ஒரு சக்தி அவர்களிடம் இருப்பதால், அந்தப் பெரிய பாக்கியத்துக்கு எதையும் விட்டுக் கொடுத்து சந்தோஷப்படப் பார்.

குழந்தைகள் பக்கம்

திரவியம் என்பது என்ன?

திரவியம் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகிறதென்பதும், உற்பத்தி செய்தவர்களுக்குள் அது எவ்வாறு பங்கிடப்படுகிறதென்பதும் விசாரிக்கிற நூல் அர்த்த சாஸ்திரம் எனப்படும். திரவியம் என்பது விற்கப்படும் பொருள். விற்கப்படும் பொருள் எல்லாம் உபயோகமுடையவைகளாய் இருக்கும். ஏனெனில், உபயோகமற்றதை ஒருவரும் விலைக்கு வாங்கமாட்டார்கள். நிலம், வீடு, தானியம், வஸ்திரம், தட்டுமுட்டுகள் முதலாகிய பொருள்களெல்லாம் உபயோகமுடையவைகளாதலால் விற்கப்படுகின்றன. விற்கப்படுவதால் திரவியம் என்று சொல்லப்படும். விற்கப்படும் பொருளெல்லாம் உபயோகமுடையவைகளென்று சொன்னோம். ஒரு பொருள் சிலவுக்கு உபயோகமாயிராது. வாசிக்காதவர்களுக்குப் புஸ்தகங்களால் யாதொரு பிரயோஜனமும் இல்லை. ஐரோப்பியர்களும் இஸ்லாமியர்களும் தலையிற்போடுகிற தொப்பியை இந்துக்களில் ஒருவரும் வாங்கமாட்டார்கள். சன்னியாசிகளுக்கு இரத்தினங்களாலும், கண்ணிழந்தவர்களுக்கு வர்ணப்படங்களாலும் உபயோகமில்லை. ஆயினும் புஸ்தகம், தொப்பி, இரத்தினங்கள் முதலிய பொருள்களைத் திரவியமல்லவென்று சொல்வது பிசகு. சில ஜனங்களுக்குப் பிரயோஜனமில்லாவிடினும் வேறு சில ஜனங்கள் அவைகளை வாங்குவார்கள். உபயோகப்படுந்தன்மை அவைகளிடத்திலிருக்கின்றது. ஆதலால் ஓரிடத்திலில்லாவிடினும் வேறோரிடத்திலாவது அவைகள் விலைபோகும். விலைப்பண்டங்களெல்லாம் திரவியமென்பது சித்தாந்தம்.

ஆயினும் உபயோகமான எல்லாப் பொருளும் விலைபோகமாட்டாது. காற்றும் வெளிச்சமும் யாவருக்கும் உபயோகமாகயிருந்தபோதிலும் அவைகளை விலைக்கு விற்பதில்லை. யாவருக்

விரோதப் புண்களெல்லாம் தீர்ந்து தேசமக்களின் க்ஷேமலாபங்கள் பெருகி ஒன்றுவது எப்போது? எந்தத் தலைமுறையிலோ?

கும் பொதுவாயும், வருத்தமின்றி அகப்படக் கூடியதாயும் இருப்பதால் காற்றையும் வெளிச்சத்தையும் திரவியம் என்று சொல்வதில்லை. தண்ணீரும் அப்படியே. சில இடங்களில் மாத்திரம் தண்ணீருக்கு விலையுண்டு. சில ஊர்களில் நல்ல ஜலம் அகப்படாது. அதைத் தூரத்திலிருந்து கொண்டுவந்து கொடுத்துக் கூலிபெறுவார்கள். இப்பேர்ப்பட்ட விஷயங்களைத் தவிரத் தண்ணீர் பொதுவாய் விலைப் பண்டமாகமாட்டாது.

நூறு ரூபாய் கொடுத்து மேஜை நாற்காலிகளும், சரிகை சோமனும் வாங்கினால் அந்த நூறு ரூபாயை இழந்து போனதாகவே நினைக்கிறார்கள். பணத்திற்குப் பதிலாய் மேசை நாற்காலியும் சரிகை சோமனும் நமது வீட்டில் இருப்பதைச் சற்றேனும் யோசிப்பதில்லை. பணத்தை வீட்டுக்குக் கொண்டுவருகிற வியாபாரமெல்லாம் நல்லதென்றும், பணத்தைக் கொடுத்துச் சாமானைக் கொள்ளுகிறதெல்லாம் நஷ்டமென்றும் பலர் எண்ணுகிறார்கள், இவர்கள் பணத்தின் உபயோகத்தை நன்றாய்க் கண்டறிந்தவர்களல்ல.

நமக்கு வேண்டிய பொருளை வாங்குவதற்கு ஒரு ஏதுவாயிருப்பதினாலேதான் பணத்தை நாம் யாவரும் விரும்புகிறோம். அந்தப் பணம், பொன் அல்லது வெள்ளியாயிருந்தாலும், நோட்டு அல்லது செக்கு ஆகிய காகிதத்துண்டாயிருந்தாலும் பிரயோஜனம் ஒன்றே. கடலைவியாபாரி கடலையைவிற்றுத் தனக்கு வேண்டிய அரிசியும் நெய்யும் வாங்குவான். சிலர் நெய்யை விற்று வரகும் மிளகும் வாங்குவார்கள். பிராஞ்சுதேசத்தார்கள் சாராயத்தையும் பழத்தையும் கொடுத்துச்சக்கரை, காபி, தேயிலை, புகையிலை, பஞ்சு முதலான பதார்த்தங்களை வாங்குகிறார்கள். இந்த வியாபாரங்களில் பணமின்றி ஒரு பொருளை மற்றொரு பொருள் கொடுத்து வாங்குகிறார்கள். பணத்தின் பிரயோஜனமும் இதுதான். ஆகையால் பணத்தை மாத்திரம் திரவியம் என்று சொல்வது பிசகு.

> புதிய கடைக்காரன் தன் கடையில் அலங்கரித்து வைத்திருக்கும் அழகு சீர் முதலியவற்றை நோக்கிப் பழைய கடைக்காரன் வயிறு எரிந்து தானும் அப்படியே அலங்கரிக்கப் பார்க்கிறான். ஆனால் புதிய கடைக்காரனிடமுள்ள சாமர்த்தியம் முதலியன பழைய கடைக்காரனுக்கு வரக் காணோம்! அலங்கரிக்க மட்டும் தெரிகிறதே தவிர, உள்நுழைந்தாலோ பழய கடைக்காரன் என்று உடனே தெரிந்துவிடும்.

சாஸ்திர நுட்பங்கள்

(126-ம் பக்கத் தொடர்ச்சி.)

49. நனைந்த சீலையையும் சட்டையையும் உடுத்தி யிருக்கையில் அவைகளின் ஈரம் ஆவியாகப் போய், தேகத்தில் தாங்கி சரீரத்தின் காங்கையைக் குறைத்துவிடுவதால் வியாதிக்கிடமாகிறது.

50. பிரபையுள்ள பொருளிலிருந்து மெத்த நுண்ணிய அணுக்கள் நமது கண்ணுக்கு எட்டுவதாலேயே வெளிச்சம் உண்டாகிறது.

51. பார்வைக்கும் மணத்துக்கும் அதிக ஒற்றுமை யிருக்கின்றது. ஏதாவது ஒரு பொருளிலிருந்து வாசனை அணுக்கள் மூக்கில் பட்டு மணமுண்டாகும். அதேவிதமாக பிரகாசமான பொருளிலிருந்து வெளிச்ச அணுக்கள் கண்ணிற்பட்டுப் பார்வையுண்டாகும்.

52. முக்கியமான வெளிச்ச ஊற்றுகள் வானசோதிகளே. அவற்றிலிருந்தும் சூடேறும்பொழுது எப்பொருளும் ஒளி வீசும்.

53. செயற்கையான வெளிச்சங்களுள் மின்சார வெளிச்சமே அதிக பிரபையுள்ளது.

54. மின்மினிப் பூச்சிகளும், ஈக்களுக்குள்ளும் வண்டுகளுக்குள்ளும் பலவும் இருட்டில் பிரபையான வெளிச்சத்தைக் கொடுக்கின்றன. இரவிலே கடலில் மினுமினுப்பு விஸ்தாரமா யுண்டாகும். இத்தோற்றம் தண்ணீரில் நீந்தும் கோடானு கோடியான மிக நுண்ணிய ஜெர்துக்களின் மினுமினுப்பே.

55. கடல் மீன்களுள் மிகுதியானவைகள் செத்தபின் இப்படிப் பிரகாசிக்கின்றன. அவைகள் அழுகத் துவங்கியதும் அந்தப் பிரகாசம் அற்றுப் போகும்.

56. துப்பாக்கி அல்லது அம்பைப்பிடித்து யாதொரு பொருளுக்கு இலக்கு பார்க்கும்பொழுது வெளிச்சம் நேர்வழியில் சொல்லுகிறதென்றே வைத்துக்கொண்டு, அப்பொருளிலிருந்து நமது கண்ணுக்கு வெளிச்சம் வந்தவழியே குண்டு அல்லது அம்பை செலுத்திவிடப் பார்க்கிறோம்.

57. பிரபையுள்ள பொருளிலிருந்தும் புறப்படும் வெளிச்ச கிரணங்கள் நாலுதிசையும் சிதறிச் செல்லும். இப்படிச் செல்லும் ஒளியின் பிரகாசம் தூரத்துக்குத் தக்கதாயல்ல, சதுரத்துக்குத் தக்கதாய்க் குறையும்.

58. வெளிச்சம் மின்னலிலும் வேகமாய்ச் சென்றாலும் அது ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்வதற்குக் கொஞ்சம் நேரமாவது பிடிக்கும். வெளிச்சத்தின் வேகம் ஒரு நொடிப்பொழுதுக்கு ஒருகோடியே தொண்ணூற்றீராயிரம் மைல் வீதமாகும். சூரியனிலிருந்து வெளிச்சம் பூமிக்கு வருவதற்கு எட்டு மினிட்டு (Minute) செல்லும்.

59. வெளிச்சம் ஓர் பொருளில் விழும்போது அது மூன்று வகையாய் செலவாகும். (1) அது மடங்கித் திரும்பக்கூடும். (2) அது பொருளில்

நன்றியுணராதவனிடத்து பிறர்க்கு சம்சயம் தீவிரமாகச் செல்லுகிறது.

அடங்கி மறையக்கூடும். (3) அது பொருளுக்கூடே உருவிச் செல்லக் கூடும்.

60. தம் சொந்த வெளிச்சத்தால் பிரகாசிக்கும் பொருள்களாவன :— சூரியன், சுவாலே, தழல், சிவக்கக் காய்ச்சின இரும்பு முதலியன.

61. வெளிச்சம் என்பது தோற்றக்கூடிய காங்கையாகும். காங்கையென்பது தோற்ருத வெளிச்சமெனலாம். வெந்நீர் காங்கையாய் இருந்தாலும், அந்தக் காங்கை வெளிச்சத்தைத் தோற்ருமலும் நமது கண்ணுக்குப் புலப்படாமலும் இருக்கிறது.

62. பகற்காலத்தில் வெயிலினுல் வாடி நிற்கும் மாறுதல்கள் இரவில் திருந்திவிடும். பிராணி, தாவரம் என்ற எவ்வகைப் பொருள்களின் சுகநிலேமைக்கும் வெளிச்சம் மாத்திரமல்ல, இருளும் தேவையென்று அறிந்திருக்க வேண்டியது.

63. சூரியப் பிரபையின் நயத்தினுல் பயிர்கள் வளர்ந்து நிறங்கொள்ளும். காங்கையினுல் அவைகள் காய்க்கும், விளேயும்.

64. மின்சாரம் என்பது பளுவாவது வடிவமாவது இல்லாததாய், பிரபஞ்சம் முழுதுக்கும் நிறைந்து, பொருள்களின் கனத்தையும் காங்கையையும் வற்ருமலும் இருக்கிற சூக்கும சத்தேயாகும். மின்சாரத்துக்கும் ரஸாயன சாஸ்திரத்துக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு.

65. மின்சாரத்தை எப்பொருளிலும் உண்டாக்கலாம். இதற்கு விலக்கில்லே யென்ருலும் சிலபொருள்களில் அதைப் பிறப்பிப்பது அதிக இலேசு. சிலவற்றில் அதிக பிரயாசம்.

66. உரைஞ்சுதலால் பிறக்கும் மின்சாரம் வெளிச்சத்திலும் அதிக வேகமாய் செம்புக்கம்பி வழியாய் ஒரு நொடிப் பொழுதில் 288,000-மைல் ஓடுமென்று கணித்திருக்கிருர்கள்.

67. **மரங்களேயும் பிராணிகளேயும் தாக்கி அடிக்கிற இடியிலுள்ள மின்சாரமானது மெத்த விசையுள்ளதானுலும், ஓர் செப்பூசிக்குத்தானும் போய்பூச்சு இடப்போதுமானதல்ல.**

68. ரஸாயன அறிவு ஏறியேறிவர, புதுப்புது ரஸாயன பதார்த்தங்களும் கண்டுபிடிக்கப்பட்டபடியால், இவைகளே ஒரு ஒழுங்காக வகுத்துப் பேரிட்டாலன்றி மெத்த சிக்கலான மலேப்பு உண்டாகுமென்று 1787-ம் வருஷம் பிராஞ்சு தேசக் கல்லூரியார் கண்டு, இவை ஒவ்வொன்றையும் விகற்பித்துக் காட்டக்கூடியவும், இவைகளில் சேர்ந்த கூறுகளேயும் சேரும் பிரமாணத்தையும் விளக்கக்கூடியவும் ஆன ஒரு பெயரட்டவணேயை இயற்றினுர்கள். இது இந்நாள் வரைக்கும் காத்திரமான மாறுதலின்றி வலங்கப்பட்டு வருகிறது.

69. இவ்விதம் வைத்த ரஸாயனப் பெயர்கள் அந்தந்த பொருளேக் குறித்துக் காட்டுவது மாத்திரமல்ல, அதில் சேர்ந்த கூறுகளேயும் குறிக்க வேணும் என்பதான நோக்கத்துடன் அதற்குத் தகுந்தவாறு பிரஞ்சுக் கல்லூரியார் இயற்றினர்.

எப்போதும் கக்ஷி இரண்டே. ஒன்று அடக்கும் கக்ஷி. மற்ருென்று அடங்கும் கக்ஷி. ஆனுல் நம் நாட்டிலோ வேடிக்கை பார்க்க ஒரு மூன்றங் கக்ஷியும் இருக்கிறது!

குடும்பச் செலவுக்குப் பணம் போதாமல் எண்ணி எண்ணி வைக்கிறான் வீட்டுக்காரன். வெகு செட்டாகச் செலவிடும்போது தான் விசேஷ விருந்தினர் வந்துவிட, ஒருமிக்க 3-4 ரூபாய் ஆகிவிடுகிறது. வருகிறவர்கள் ஒருவராக இல்லாமல் கூட்டமாக வருகிறார்கள். செய்வதற்கு என்னவோ ஆசைதான், கடவுள் அதற்குத் தாராளமாய்க் கொடுத்திருக்கவில்லையே.

70. பூர்வகாலந் தொட்டு மனுஷர் அறிந்திருக்கிற இரும்பு, பொன் செம்பு, இரசம், வெள்ளி, ஈயம், தகரம் முதலியவைகளுக்கு அவைகளுக்குள்ள பழய பெயர்களையே இட்டனர். தற்காலத்தில் அறிந்த நூதனமானவைகளுக்கு அதற்குரிய பிரதான லட்சணத்தைக் கொண்டு அதைக் குறிப்பிடும் பெயர்களாய் இட்டனர். இவைகளின் பெயர்கள் பெரும்பாலும் 'அம்' என்ற ஈற்றசையில் முடியும். உதாரணம் :—பிலாடினம், பதாசியம், அலுமினம் என்பது போலவாம்.


(தொடரும்.)

விலாஸப் பக்கத்தில் தொடங்குக.

கடிதமோ கார்டோ கடைசி பாகத்தில் தான் எழுதப் புகுந்த முக்கிய சங்கதி இருப்பது வழக்கம். கார்டில் எழுதுகையில் முக்கியக் கடைசி பாகம் கார்டின் மறுபக்கப் பாதியில் வருகிறது. அங்கு தபாலாபீஸார் தங்கள் முத்திரையைப் போட்டுவிடுவது அடிக்கடி கண்ட சங்கதி. அதனால் அதில் எழுதிய எழுத்துகள் மறைவுபட்டு வாசிக்க முடியாமல் தடுமாறுவது சாதாரணம். ஆதலின், அதிக சங்கதியுள்ளவர்கள் கார்டின் விலாஸமெழுதும் பாதி பக்கத்திலேயே முதலில் தொடங்கிக்கொள்வது மேல். அப்போழுது நாம் எழுதும் முக்கிய விஷயம் கார்டின் பின்பக்கம் பத்திரமாக இருக்கும்.

பேசுவது அனர்த்தமற்ற வேடிக்கைப் பரிகாசச் சொல்தான். ஆனால் அது இன்னொருவர் மனத்தைப் புண்ணாக்கிவிடுகிறது.

அந்தக் கற்பாசி அழகுக்கு அணிகலம்; பொறுமைக்குப் பொக்கிஷம்; நாணிய நடையாள்; கன்னனிற் கொடையாள்."



பெண் பாடசாலைகள் சிலவற்றின் நிலைமை.

சென்ற மாசிமாதத்திய "ஆநந்த குணபோதினி" ப்பத்திரிகையில் "சிறுமியர் வதுப்பு" என்ற தலைப்பின்கீழ் எழுதப்பட்டிருந்த வியாசத்தைக் கவனித்தேன். அதிற் கண்ட விஷயங்கள் என் அநுபவத்திற்கு முற்றிலும் சரியாயிருக்கின்றன. ஸ்திரீ வித்யாப்பியாசத்தின் நிமித்தம் மிக்க சிரத்தை கொண்டிருக்கும் இந் நாளில், அதற்கு ஆதாரவாய் நடைபெறும் பெண் பாடசாலைகளின் விஷயத்தைப்பற்றியும் கவனிப்பது அவசியமாகிறது. சில பாடசாலைகளில் சிறுமிகளுக்குப் பாடங்களே சரிவரப் போதிக்கப்படுவதில்லை. இது சம்பந்தமாக சமீப உதாரணமொன்றைக் கீழே தருகிறேன்.

1-ம் கடிதம்.

தலைமை உபாத்யாயனி அவர்களுக்கு
முனிசிபல் பெண் பாடசாலை,
தெற்குச் சித்திரை வீதி, ஸ்ரீரங்கம்.

தங்கள் பள்ளிக்கூடத்தில் சரியான பாடங்கள் போதிப்பதில்லை. சிரத்தையுடன் பாடங்களைக் கேட்பதுமில்லை. குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்கு வருவதும் போவதுமே தவிர, ஒருபாடமும் அவர்கள் கற்றுக்கொள்வதாகத் தெரியவில்லை. எங்கள் குழந்தை *******யைத் தங்கள் பாடசாலைக்கு அனுப்பி வருவதில் ஒரு பயனையும் காணோம். ஒரு பாடமோ படிப்போ எதுவும் வந்தபாடில்லை. பள்ளிக்கூடமும் காலங்களில் குறித்தபடி நடப்பதாயில்லை. இதைக் குறித்து கல்வி இலாகா அதிகாரிகளுக்கும், பத்திரிகைகளுக்கும் தெரிவித்து இந்த விஷயத்துக்கு நிவர்த்தி தேடுவதைவிடத் தங்களுக்கே எழுதித் தெரிவித்துக்கொள்வது உத்தமமென்று இது எழுதலானேன். தயவுசெய்து கவனியுங்கள்.

P. E. பாவிஷம். 26-6-28.

அதற்குப் பதில்.

2-ம் கடிதம்.

தங்களுடைய பெண் ***** இந்த ஸ்கூலில் சேர்ந்த நாள் முதல் தங்களிடமிருந்துவந்த கடிதங்களுக்கு

ஸ்கூல்களில் பாடம் நடத்த வேண்டியது உபாத்தினிமார்களுடைய கடமையென்பதை யறிந்து நாங்கள் மேலதிகாரிகளால் நியமிக்கப்பட்டு (உங்களுடைய கடிதங்களுக்கல்ல) அவர்கள் பரிட்சைக்கு வருங்காலத்தில் ஸ்கூலுக்கு நல்ல ரிமார்க்கு கொடுக்கவேண்டுமென்று பலவிதத்திலும் நாங்கள் முயற்சித்து வருகிறோம். போதிக்கும் திறமை உபாத்தினிக்கும், கற்றுக்கொள்ளும் திறமை பிள்ளைகளுக்கும் அமைந்திருக்க வேண்டியிருக்க, சிறிதும் கவனமில்லாத இச்சிறுமி ஸ்கூலுக்கு வருவதும்

சாசுவதச் சிறுமையில் பிணிப்புண்ட மனத்தினருக்கு முடிவின்றி சேரும் துன்பங்களுக்கு யாரை நோவ? விதிவசத்தை நோவதா?

மிக ஒழுங்கீனம்.

அப்படியிருக்க வயதிலும் அறிவிலும் முதிர்ந்த தாங்கள் இப்படி அடிக்கடி உபாத்தினிகளைக் குறித்து கேவலமாய் எழுதி யனுப்புவதும், சொல்லியனுப்புவதும் தங்களுடைய பெருந்தன்மைக்கு சிறிதும் அழகல்ல. எங்களுக்கு மார்ச் 15-ம் தேதிமுதல் ஜுலை 15-ம் தேதிவரையில் வெயில் காலமானதால் பிள்ளைகளின் நன்மையைக் கருதி ஸ்கூல் வைக்கும்படி கனம் சேர்மன் அவர்களே உத்திரவு கொடுத்திருந்தும், தாங்கள் 12-மணிக்கும், 3-மணிக்கும் ஸ்கூல் முடித்துவிடுவதாகப் பல தடவைகளிலும் சொல்லியனுப்புவதும் எழுதியனுப்புவதும் சரியல்ல. ஆபீஸ் கட்டளையை யனுசரித்து நடக்க நாங்கள் கடமைப்பட்டவர்களே யன்றி மற்றவர்களுடைய வார்த்தைகளுக்கும் கடிதங்களுக்கும் இடங்கொடுக்க எங்களுக்கு அதிகாரமில்லை.

திற்சமயம் 1-ம் 2-ம் வகுப்புகளுக்கு உபாத்தினிகள் இல்லாததைப் பற்றி எங்களுக்கல்லவோ கஷ்டமாக இருக்கிறது. ரிபோர்ட் வருகிற வீட்டுக் குழந்துதகளை மட்டுமல்ல, எல்லா பிள்ளைகளையும் ஒரே மாதிரி நடத்தவேண்டியதே எங்களுடைய கடமை. அப்படி யிருக்க, மேலதிகாரிகள்கூட சொல்லத்தகாதவைகளை தாங்கள் பலதடவைகளிலும் சொல்லி யனுப்புவதும் எழுதியனுப்புவதும் சிறிதும் சரியல்ல.

எங்களுடையநேரத்தை வீணாக்கி இவைகளைத் தங்களுக்குத் தெரிவித்தது ஏனெனில் இனி உங்களுடைய வீணான ரிப்போர்ட் எங்களுக்கு வராமலிருப்பதை யுத்தேசித்தே,

தலைமை உபாத்யாயனி 26-6-28.

(அதற்குப் பதில்)

3-ம் கடிதம்.

* * * * * * எனும் பெண்ணைக் குறித்துப் போதனுமுறை சரியில்லை யென்றும் தெரிவித்தவன் நானே. * * * * * *

நியமிக்கப்படாமல் ஒரு "நியமனம்" இல்லையாகையால், எந்த நியமனமும் அதற்கு மேலுள்ளவர்களால் தான் "நியமிக்க"ப்படுகின்றது. இவ்விதம் நியமிக்கப்படுவது ஒரு சாதாரண விஷயமே. அதில் ஒரு புதுமையேனும் உயர்வேனும் இல்லை. நியமிக்கப்பட்டுவிட்டதினுல் மட்டும் தவறுகள் செய்துவிடாதிருந்து விடுவார்களென்பதில்லை. தவறு இருந்து தான் குறை சொல்ல நேர்ந்தது. பாலபாடம் வாசிக்கும் சிறுமி கவனமில்லாத சிறுமியாகத்தான் இருக்க (வேண்டும்.)க்கூடும். உபாத்தியாயராயுள்ளவரும் தமது குழந்தையை மற்ெருருவரிடம் வாசிக்க அனுப்புவது, தமக்குப் போதிக்கும் திறமையில்லை யென்பதல்ல. மற்றவர்கள் கவனித்துப் படிக்கும்படி வற்புறுத்தி, அதனுல் அக்குழந்தை வித்தையில் தேறும் என்று எண்ணியே அப்படிச் செய்கிறார்கள். கவனிக்கும்படி செய்யவே பிறரிடம் அனுப்புவது. கவனமில்லாதவர்களாகவே குழந்தைகளிருப்பார்கள். கவனித்து வாசிக்கும்படி செய்யவேண்டியது அதற்கென்றே மேலதிகாரிகளால் "நியமிக்கப்பட்ட" உபாத்தியாயர்களின் முக்கியகடமை.

இரண்டு வருஷகாலம் உங்கள் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பப்பட்டிருப்பதில், வந்தநாள் வரைக்காவது பாடங்கள் அச்சிறுமிக்குப் பயன்படும்படி வந்ததாய்த் தெரியவில்லை.

உழைத்துச் சம்பளம் பெறும் இடமே என்றைக்கும் நிச்சயம் தரும் சும்மா உட்கார்ந்து சம்பளம் வாங்கும் இடம் அதிக நாள் நீடிக்காது.

வந்திருக்கிற சொற்பமும் வீட்டில் கற்றுக்கொடுத்ததுதான்.

அதன் சம்பந்தமான அடிக்கடி விசாரிப்புகள் எழுதியனுப்பப்பட வில்லை. 26-6-28ல் எழுதப்பட்டதே வெகுநாள் பொறுமைப்பட்டிருந்து எழுதிய முதற்கடிதமாகும். ஸ்ரீரங்கம் முனிசிபல் பெண்பாடசாலை பொது ஜனங்களின் சொத்து. பொதுஜனங்க ளின் குழந்தைகள் படிக்கும் இடம். பள்ளிக்கூடத்துக்கு அனுப்பப்பட்ட தங்கள் குழந்தைகளின் கல்வியைப் பற்றி விசாரிக்க, அக்குழந்தைகளுக் குச் சொந்தமானவர்கள் கேட்க உரி மையுண்டு. அந்த "உரிமை" யை 'பெருந்தன்மைக்கழகல்ல,' என்று தள்கள் கடிதத்தில் காட்டியிருப்ப தானது, தமது கடமையை யுணர்ந்து நன்கு படித்துத் தேறிய ஒரு ஆசிரிய ருக்குப் பெருந்தன்மை யாகமாட் டாது.

கோடை காலத்தின்போது பாட சாலை மூடப்படுதலும் குறித்த சில நேரங்களில் மட்டும் நடைபெறுவதும் சாதாரணம். அதைக் குறித்து எதும் எழுதப்படாமல் பாடசாலையிலுள்ள காலங்களிலேயே அடிக்கடி சரிவரத் தொடங்கப்படாததும், முடிக்கப்படா ததுமே குறிப்பிடப்பட்டது. பத்து மணிக்கு மேலும்கூடப் பாடங்கள் நடவாமல் குழந்தைகள் வெறுமனே யுட்கார்ந்திருப்பதைப் பார்த்த சமயங் கள் எத்தனையோ உண்டு. அதைக் குறித்து ஒரு பொதுப்பள்ளிக்கூடத் தின் சம்பந்தமாய் பொதுநல உரிமை யுடன் எடுத்துப் பேச எவருக்கும் உரிமையுண்டு. 1-2-ம் வகுப்புக்கு உபாத்தியாயர் இருந்தபோதும் கூட சரிவரக் கவனிக்கப்படவில்லையென்று பொதுநல உரிமையுடன் எடுத்துக் காட்டுகிறோம். கவனித்துத் தங்கள் கடமையை சீர்பெறச் செய்தலானது தங்களின் முக்கிய கடமையாகும்.

ஏதும் சொல்லப்படாமலும் எழு தப்படாமலும் இருக்கையிலேயே மேலதிகாரிகள் சொல்லத்தகாதவை களைச் சொல்லியதாய் எழுதப்படுவது ஒரு சிறிதும் சரியல்ல. நன்றாகக் கவனித்து கற்பியுங்கள் என்றால் அது பிசகா? அப்படிக் கேட்பது உலக வழக்கம். அது பொது உரிமை யாகும்.

ஸ்ரீரங்கம் முனிசிபல் பள்ளிக்கூ டம் ஒருவரே நடத்தும் சொந்தப் பள்ளிக்கூடமா யில்லாமல் பொதுப் பள்ளிக்கூடமானதால் தங்கள் குழந் தைகளின் நன்மையை உத்தேசித்து அக்குழந்தையின் சொந்தமானவர்கள் விசாரித்தால் அதை '-வீணை ரிப்போர்ட்'' என்பது பொறுப்பு வகித்த ஒரு பாடசாலையின் தலைவர் சொல்லக் கூடியதல்ல. **எங்களின் விசாரிப்பில் உங்களின் காலம் வீணாகிற தென்றால் அதைவிடக் குழந்தைகளின் அருமையான காலம் நீங்கள் சரிவரக் கவனிக்கப்படாமை யால் வீணாகிறதென்பதையும் நீங்கள் கவனிக்கக் கடமைப் பட்டிருக்கிறீர் கள்.** மேல்குறித்த விஷயங்கள் பொது ஜனங்களுக்குச் சொந்தமான ஒரு பாடசாலையின் பொது நன்மை யைக் கருதியே பொதுநல உரிமையு டன் இது எழுதப்பட்டதாகும்.

P. E. பாஷியம் 27-6-28

[இக்கடிதத்தின் கடைசி பகுதி யைப் பத்திரிகையில் இடமில்லாத தால் பிரசுரிக்கக் கூடவில்லை, ப-ர்]

மற்ற தேசங்களிலும் மதக்கலகங்கள் உள்ளன. அவை லௌகிகப் போட் டியாலும் விரோதத்தாலும் ஏற்படுபவை. நமது தேசத்திலே தான் கேவலம் மதத்துக்கே சண்டை!

(அதற்கு பதில்.)

4-ம் கடிதம்.

ஐயா, 26-6-28-ல் தங்களிடமிருந்து வந்த கடிதத்திற்கு நான் தவறுதலாய் * * * * * கார்டிலுள்ள விலாசத்தை எழுதியது உண்மைதான்.

நான் தங்களையாவது * * * * * * கேவலப்படுத்த எண்ணம் கொண்டு அவ்விதமாய் பதிலெழுதவில்லை,

நீங்கள் பல தடவைகளிலும் * * * * * * எங்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறீர்கள். ஆனால் அவைகள் தற்சமயம் எங்களிடம் இல்லை. இது முதற் கடிதமல்லவென்பதைத் தெரிவிக்கிறேன்.

மேலும் பெற்றோர் பிள்ளைகளின் படிப்பைப்பற்றி விசாரிக்க வேண்டியது அவசியமே. நான் அதை தடுக்கவில்லை. ஆனால் நேற்று கேவலமாய்ப் பேசியதாக கேள்விப்பட்டதாலும், பதில் வேண்டுமென்றதாலும் எழுத நேர்ந்தது. தங்களுக்கு அது பிசகென்று தோன்றும் பக்ஷத்தில் மன்னித்துக் கொள்வதுடன் நீங்கள் எழுதியிருக்கிறபடி நான் நேற்று அனுப்பிய கடிதத்தையும் எனக்கு அனுப்பிவிட கேட்டுக்கொள்கிறேன்.

தலைமை உபாத்யாயனி.

***

பெண் பாடசாலைகள் சிலவற்றின் நிலைமை இவ்வாறிருப்பது மிகவும் வருந்தத்தக்கது. உபாத்தியாயனிகளிற் சிலர் கடிகாரத்தில் மணியாய்விட்டதா என்பதைமட்டும் சிரத்தையாய்ப் பார்த்துக்கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டு விடுவதைத் தவிர, தங்களை நம்பி ஒப்புவிக்கப்பட்ட சுறுமிகளின் கல்வி விஷயத்தில் தக்கபடி கவனம் செலுத்துவதில்லை. இந்த நிலைமையில் பெண் கல்வியின் அவசியத்தைப்பற்றியும் அபிவிர்த்தியைப் பற்றியும் ஓயாமற் பேசிவருவதனால் மட்டும் யாது பயன் உண்டாகக்கூடுமென்பதும் சிந்திக்கத்தக்கதே. ப-ர்]

உலகப் போக்கு.

பணத்தைப் பார்க்கிறவன் நேசத்தைப் பார்க்கமாட்டான். விவகாரத்தை முக்கியமாய்ப் பார்ப்பவன் செலவைக் கவனியான். பிள்ளைகளை பிரதானமாய் நினைப்போர் தின்பண்டத்தின் சுவையை புணர விரும்பார். அதைக் குழந்தைகட்கே தருவார். பெண்ணைப் பெரியதாய் எண்ணுவோன் தன் உயிரையும் சொத்தையும் ஒருபொருட்டாய் எண்ணமாட்டான். பற்றுதலற்ற நெஞ்சினர் தாங்கள் வந்தவரிடம் காரியம் ஆனபிறகு எழுந்து சென்று விடுவதன்றி, அன்னருடன் நேசிக்கவேண்டுமே யென்று ஒருபோதும் நினைப்பதில்லை.

உயிரின் வேகம் நிரம்பியிருக்கு -மோரிளைஞன் வேலையற்றிருப்பதைக் காட்டிலும் சாதல் நன்றெனக் கருதுவான்.





இன்று கூடிய நமது கடையில் அல்லா பிச்சையின் கேள்விகளே அதிகமாக இருந்தன. தம் மனதில் புது எண்ணங்களைக் கஷ்டமில்லாமல் உண்டாக்கிக்கொண்டு பல வியாசங்களையும் குறிப்புகளையும் எழுதுவதற்கு சுலபமான வழி எதுவென்று அல்லாபிச்சை கேட்டார். 'தொங்குந்தாடி' அதற்குப் பதில் சொன்னார்:—

"ஒன்றை வாசிக்கும்பொழுது பல விதமான சிந்தனைகளும் கருத்துகளும் உதயமாகக்கூடும். தினப்பத்திரிகைகளைப் படிக்கும்பொழுது தம் மனத்துள் உதிக்கும் நூதன கருத்துகளைக்கொண்டுதான் வாரப் பத்திரிகைகளை அதன் ஆசிரியர்கள் நடத்துகிறார்கள். பல இடங்களிலிருந்து வர்த்தமானக் கடிதங்களும், நிருபங்களும் வாரப் பத்திராசிரியருக்கு வர, அதைப் படிக்கும்போது தங்கள் மனத்தில் தோன்றும் சிந்தனைகளைக் கொண்டும் பல குறிப்புகளை எழுதத் தொடங்குகிறார்கள். இவ்விதமே பல நூல்களையோ நாவல்களையோ படித்த அறிவிலிருந்தும் புது யுக்திகளை உண்டாக்கிக்கொண்டு ஒரு தனி நூலையோ நாவலையோ எழுத எண்ணங்கள் உதிக்கின்றன. **உன் மனதில் புதிய எண்ணங்களை உண்டாக்குவதற்குத் துணையாயிருக்கும் விதத்தில் ஒரு புது நூலை நீ படித்துக்கொண்டு போ.** அப்படிப் போகையில் அங்கு நீ வாசிப்பவைகளிலிருந்தும் உன் மனதில் உதயமாகும் வேறு எண்ணங்களை ஒரு கடிதத்தில் உன் சொந்த நடையில் உன் சொந்த கற்பனையோடு எழுதிச் செல். நீயே ஏகாந்தமாய் ஒரு விஷயத்தைப்பற்றி யோசித்து உருவாக்குவதைவிட, ஒரு நூலைப்படிக்கையில் உன் எண்ணங்களை உருவாக்கிக் கொள்ளப்பார்ப்பது கஷ்டமில்லாத சுலபமான வேலையாயிருக்கும். **உனக்குப் புதிய கருத்துகளையும், நூலில் உள்ள விஷயங்கள் அவற்றை நீ வாசிக்கும் வகையில் உனக்கு உண்டாக்கிக் கொடுக்கின்றன.** ஆனால், நூலில் உள்ள விஷயங்களை நீ எடுத்துக்கொள்ளாதே. அந்த விஷயங்களை வாசித்ததிலிருந்தும் உன் நெஞ்சில் தோன்றிய புதிய எண்ணங்களை மட்டும் எடுத்துக்கொண்டு அவற்றைத் தழுவி உன் சொந்த சரக்குடன் நீ எழுதிச்செல். புதிய நினைவுகளால் தூண்டப்பட்டு வரைவதற்கு இதுவே சுலபமான வழி. இந்தப் பயிற்சியிலிருந்து, எந்தநூலின் துணையுமில்லாமலே, அப்போதைக்கப்போது நெஞ்சிலே பலவித எண்ணங்கள் உதயமாவதும் ஒரு வழக்கமாகிவிடக்கூடும். அப்பொழுது இன்னும் சுலபமாய் எழுதலாம். மேலும் எழுதத் தொடங்கியதற்குப் பிறகுதான் அதிக எண்ணங்கள் உதயமாகி எழுத முற்பட விஷயம் ஒரு ஒழுங்கான முறையில்

நம்மிஷ்டப்படி இடறி விழுந்து எழுந்து நடந்து பழகினாலொழிய நாம் உண்மை நிலைக்கு வந்து நிலைபெற முடியாது. அதாவது சுயேச்சை வேண்டும்.

பூர்த்திபெறக்கூடும். இதில் ஆரம்பித்த விஷயத்திற்குத் தகுந்தபடி முடித்த இடத்து விஷயமும் பொருந்தி யிருக்கிறதா யென்று பார்த்துக் கொள்வதும் அவசியமாகும்" என்று நீண்ட தாடியார் கூறினர்.

***

ஒரு விஷயம் எல்லை கடந்துவிட்டால் என்ன ஆகும் என்று அல்லா பிச்சை கேட்டார். "உடனே அது வெளிக்குக் காட்டிவிடும்" என்று தாண்டவக்கோன் பதில் சொன்னர். அல்லாபிச்சை அதை விவரித்துச் சொல்லவேண்டு மென்றார். "எல்லைகடந்துவிட்ட அதிகக் கடன், அதிகக் கொடுமை, அதிக அநியாயம், அதிக பராமுகம், அதிக அதிர்ப்தி, அதிக வெயில், அதிகமழை அதிக ஆடம்பரம், மதத்தின் பெயரைச் சொல்லிக்கொண்டு ஜீவனம் செய்வதில் இன்னும் அதிகமான பேராசை கொள்ளுதல் முதலியன வெல்லாம் ரகசியத்திலிராமல் உடனே அம்பலத்திற்கு வந்துவிடும். 'எல்லை கடத்தல்' என்பதற்கு 'அவசியத்துக்கு மீறிப்போகுதல்' என்பது பொருள் என்று தாண்டவக்கோன் விடைபகர்ந்தார்.

***

தமது கொள்கைகளையும் தாம் கொண்ட அபிப்பிராயத்தையும் சிலாகிப்பவனை உயர்த்திப் பேசுவதின் காரணம் என்னவென்று அல்லா பிச்சை வினவினர். அதற்குத் தொந்தித் தம்பி—"அவ்விதம் உயர்த்திப் பேசுவது அவனை மேன்மைப்படுத்துவதற்கல்ல; தமது கொள்கையை இன்னும் உறுதிபடுத்திச் சிறப்படைய தாக்கிக் கொள்வதற்காக அந்த சிலாகித்த மூடச்சாம்பிராணியை ஒரு துணைக்கூட்டாளியாய்ச் சேர்த்துக் கொண்டுவிடுகிற ஒரு சுயநலதந்திரமாகும். அவ்வளவேயன்றி அவனை ஒரு மதிப்புடன் கொண்டாடுவதற்கல்ல. இவர்களின் கொள்கைக்கு விரோதமாக அவனே பேசத் தொடங்கிவிட்டால், முன்பு தாங்கள் மதித்தவனை அவர்கள் இப்போது எதிர்த்துக்கொண்டு மிதித்துவிடுவார்கள். ஆகவே, ஒரு சண்டையிலோ ஒரு வாக்குவாதத்திலோ தமது பக்கமாய்ப் பேசுகிறவர்களைப் பாராட்டுவதெல்லாம் தனக்கு அவர்கள் உதவியாக நிற்கிறார்களென்பதைக் கொண்டே தவிர, வேறெந்த அன்புக்காகவுமல்ல" என்று பதில் சொன்னர்.

***

சும்மா சும்மா ஆசிரியர்களைச் சிலாகித்துக் கடிதங்கள் எழுதி அவர்கள் இயற்றிய நூல்களை இலவசமாய் அழைப்பில் பெற விரும்புகிறவர்களை எப்படி ஒதுக்கிக் குப்பையில் எறியலாம் என்று அல்லாபிச்சை வினவினர். அதற்கு அஷ்டாவதானம் அதிரஸத்தேவர் பதில் சொல்ல எழுந்தார். சமீபத்தில் ஒரு நூலாசிரியரை ஒருவர் அன்பு பெருகப் புகழ்ந்து எழுதி அவரது நூலைப் பாதி விலைக்குக் கேட்டார். அதற்கு நூலாசிரியர் பத்து அணுவில் ஒரு கதர்துண்டு அனுப்பினல் தருவதாகவும் விலை வேண்டாமென்றும் எழுத, அவ்விதமே கதர் துண்டும் வர, ஐந்து ரூபாய் விலையுள்ள தமது நூலையும் பிரியமாய் அனுப்பிவைத்தார். இதன் பின் நூலாசிரியர் தமது மற்றொரு நூலை வெளியிட, அதற்கும் முன்னவர் ஒரு அன்புக் கடிதம் எழுதி வேண்ட, இம்முறை நூலாசிரியர் வி. பி. யில் தமது புதுநூலை யனுப்பி

அதிக அக்கிரமத்தில் தேடிய சொத்து அடுத்த தலைமுறைக்குள் எப்படியோ சர்வநாசமாய் விடுகிறது. பல குடும்பங்கள் இதற்கு சாக்ஷி சொல்லும்.

னர். அது உடனே திரும்பி வந்து விட்டது. தபாற்செலவு நஷ்டமானு லும் அன்பின் லக்ஷணம் தெரிந்ததே யென்று நூலாசிரியர் சந்தோஷப் பட்டுக்கொண்டாராம்'' என்ருர்.

***

ஒரே வார்த்தை எப்படி பேதப் படும் என்று அல்லாபிச்சை ஒரு கேள்வி போட்டார். அதற்கு அஷ் டாவதானி—"அவள் அழகான பெண் என்பதற்கும், அவள் அழகு 'ரம்பை' என்பதற்கும், சொல்லிலே பேதமே இருக்கிறது. முந்திய சொல் உண்மையான சிலாகிப்பு; பிந்திய வாசகமோ ஏற்றி இறக்கி, இகழும் பான்மை'' என்று உத்தரம் விளம் பினர்.

***

ஒன்றைச் செய்வதற்கு முதலில் உத்தேசித்திருந்தது பிறகு எப்படித் தடுமாறிப்போகிறது என்று அல்லா பிச்சை கேட்டார். அதற்கு சக்க ரைக்குல்லா—"உத்தேசம் உங்க ளுள்ளதாயின் செய்யும் காரியமும் அன்பு தழுவியதாயிருக்கும். ஒருவ னுக்குப் பிணி. அவனைத் தன்னிடம் தருவித்து வைத்துக்கொள்ள உத் தேசம். இந்த உருக்கத்துக்குத் தகுந்தபடியே பிந்திய நிகழ்ச்சிகளும் இருக்கும். அவ்விதமின்றி வெளிப் பேச்சுக்காக மட்டும், அந்த வியாதி யஸ்தனை அழைத்துவரத்தான் வேண்டும் என்று சொன்னால், அதற் குத் தகுந்தபடியே பிந்திய காரியங் களும் இருக்கும். அழைத்து வருவ தற்கு வீட்டில் இருப்பவர்கள் சம் மதிக்கவில்லை என்று ஏதேனும் 'சாக்குப்போக்கு' சொல்விமுடிப்ப தாய் நேரும். ஆகவே உத்தேசத்தில் ஒரு சிரத்தையும் உருக்கமும் இருந் தால்தான் அது காரியத்திற்கு வந்து பழுக்கும். இல்லையாகில் இல்லை'' என்று விடை இயம்பினர்.

***

அல்லாபிச்சை கேட்ட கேள்வி கள் போதும், நான் ஒரு கேள்வி கேட்கிறேன். சோம்பேரிகள் செத்து உழைக்கிறவர்கள் உயிருடன் இருக் கக்கூடாதா என்று அந்தோனிமுத்து வினவினர். அதற்குத் தின்ன போத்துப்பிள்ளை—"சோம்பேரி களுக்குக் கவலையில்லை, அதனால் அவர்கள் அதிக காலம் வாழ்கிருர்கள். உழைப்பவர்களோ கவலைப் பிணிக்கு ஆளாகி உலக்கை தேய்ந்து உளிப் பிடியானதுபோல் உருகி சீக்கிரமே பச்சைப்பல்லக்கு ஏறிவிடுகிருர்கள்'' என்ருர். "மலமே பலம் என்பது போல சோம்பேரிகளும் அவசா சமயங்கட்கு உதவுவார்களானதால் அவர்களைச் சாகவேண்டுமென்று சொல்வது சரியல்ல'' வென்று சாப் பாட்டு ராமர் சொன்னர். "உழைக் கிறவன் என்று ஒருவன் இருக்கும் போது, உட்கார்ந்து தின்பதற் கென்று சிலர் இருந்தால் தான் உழைக்கிறவனுக்கு உற்சாகமாயிருக் கும்'' என்று ஊறுகாய்ச் செட்டி உறக்கக் கத்தினர். "உற்சாகத்துக் காக ஊரிலுள்ள வீணர்களை எல்லாம் விருந்துக்கு வேண்டி வேண்டி அழைப்பதில்லையா'' என்று எச்சிலைக் குத்தகையார் எடுத்துக்காட்டினர்.

***

இல்லாத ஒரு குறையை இருப் பதாய்க் காட்டி நெஞ்சைப் பய முறுத்தி அடிமையாக்கி விடுவதற்கு உதாரணங்கள் விவரிக்கவேண்டும் என்று உக்கா முதலியார் உறுமினர். அதற்குக் கொள்ளிடம்பிள்ளை கூறி

பதினயிரம் ரூபாய் சொத்தும், ஒன்பதினயிரம் கடனும் இருப்பதை விட, கடனே இல்லாமல் ஒரு ஆயிரம் ரூபா இருப்பது சமாதான வாழ்வு.

யதாவது :—" ஒரு வீட்டில் பேய் பிசாசுத்தொந்தரையிருப்பதை அறியாதவன் அங்குவந்து சுகமே நித்திரை போய்விடுகிறான். மறுதினம் உன்னை எதுவுமே தொந்தரை செய்யவில்லையா வென்று அவனை விசாரிக்கும்போது, அதுமுதல் அவன் மனத்திலும் அச்சம் தோன்றிக்கொண்டு அதற்குப்பிறகு அந்த இடத்தில் அவன் சயனிக்கப் பின்வாங்குகிறான். ஒரு காரியத்திற்குத் துணியும்போது அது உன்னால் முடியுமா, யோசித்துச் செய் என்கிறார்கள். அதுவே அவனுக்குத் தளர்ச்சி யுண்டுபண்ணி விடுகிறது. ஒருவனை நோக்கி என் துணையில்லாமல் நீ எதுவும் செய்யமுடியாது என்கிறார்கள். அதைக் கேட்பவனும் நம்பிவிட, அதுமுதற் கொண்டு தானே எதையும் செய்து நடத்தி வந்த சக்தியை அவன் இழந்துபோய் மற்றொருவனைத் துணைக்குவேண்டியழைக்கிறான். ஒருவனுக்கு சாதகத்தில் குழந்தைகளே இல்லையென்று சோதிடன் சொல்ல, அதை அவன் நம்பிக்கொண்டு தன் சொத்துகளையெல்லாம் பிறருக்கு எழுதிவைத்துவிட, அப்பால் குழந்தைகள் வரிசையாய்ப் பிறக்கவும், தான் முன்பு செய்துவிட்ட பிசகுக்கு ஏங்குகிறான். இக்குழந்தைகள் பிறகு அநாதைகளாகின்றன, ஒரு ஸமூகத்தை நோக்கி அது பலஹீனப்பட்ட வகுப்பு என்று மற்றவன் கூறினால், உடனே அந்த ஸமூகம் அதை நம்பிக்கொள்வதாகில், இல்லாத ஒரு குறையை இருப்பதாய்க்கொண்டு பலஹீனப்படுகிற சங்கதிதான். எவ்வளவோ ஆபரணங்கள் தன் கணவன் தனக்கு அளித்திருக்க, ஒரு மூக்குத்தி இல்லாத குறைக்காக ஏங்கி, இருப்பதைக்கொண்டு அநுபவித்துக் சுகிப்பதற்கான பாக்கியத்தை இழந்துவிடுகிறார்கள். இவ்விதமே நெடுக விவரித்து உதாரணங்கள் தரலாம்" என்றார். இவ்வளவுடன் நமது கடையும் இன்று பூர்த்தி பெற்றது.

யோன்வண்டு சேட்டியார்.

ஒருசிட்டிகை மூக்குத்தூள் எங்கும் இனாமாகக் கிடைக்கும். அதிலிருந்தும் பழகிவிட்டவர்களுக்கே பக்கத்திலே ஒரு துண்டு! எந்தப் பொடியும் காரமாக இருப்பதில்லை. பொடியில்லாவிடில் பெரிய தவிப்பு. துர்ப்பழக்கத்தின் கொடுமைக்கு அவர்களே பாதபிக்கிறார்கள்! குடியனும் சூதிக் கள்ளனும் இப்படியே தன்னை சோகிறான்; பழக்கத்தை விடமுடியவில்லை.

விவகாரத்தில் தலையிட்டு நிற்போரிடம் சாக்கிரதையாய்ப் பழகு. எப்போதும் உன்னைப்பற்றி எந்தவித ஆதரவும் அவர்களுக்குக் கிடைக்காதிருக்கப் பார். நீ ஜீவிக்கிற மர்மமே அவர்கள் தெரிந்துகொள்ளாதபடி நட. உன்னைப்பற்றி அவர்கள் பேசவே இடமில்லாதபடி விலகித் தூர இருந்துவிடு. அவர்களும் உன் போக்கு தெரிந்து ஒதுங்கி விடுவர். சனி தொலைந்ததென்றிரு.

அப்பா, நீ வெளியன்பினன், உன் உறவு வேண்டாம் போய்வா என்று நாமே சொல்லி அனுப்பிவிடுவது அவனால் பிறகு பல தொல்லைகள் நேராதிருக்க சுலப வழி.

அநுபவித்து உணர்வதிலுள்ள சுவை நயங்கள்.

III.

(136-ம் பக்கத் தொடர்ச்சி.)

தந்தையின் அன்பு ஒரு தனி அன்பு. உள்ளுக்குள் மறைத்து வைக்கப்பட்டுப் பிற்காலத்தில் நன்மை பயக்குவிப்பதாயுள்ள சிரேஷ்டதரமான அன்பு. தாயின் அன்பு வெளியில் பிரகாசமாகத் தெரியும் அன்பு. தந்தையின் அன்போ ஒரு எல்லைக்குள் அடங்கி நின்றுப் பொங்குங்கும் அன்பு. மாதாவின் அன்பு உடலைப் போஷிப்பதாகும். தந்தையின் அன்பு அந்தப் போஷிப்புக்கான யாவற்றையும் கவலையுடன் சேகரித்துத் தருவதாகும். இந்த அன்னையும் அந்தத் தந்தையும் மக்கட் கூட்டத்துக்கு இயற்கையாய் அமைந்துள்ள சுயநலச் சிந்தையில் நன்கு பழுத்துத் தேறியவரே யாயினும், தாம் ஒரு குழந்தையை யீன்று, கடவுளைப்போல் தாமும் ஒரு சிருஷ்டித் தலைவராகுங் காலையில், அக்கடவுளினிடத்துள்ள தயை, கருணைவிலாசம் முதலிய நற்சார்புகளை யெல்லாம் தாமும் கொண்டு அவற்றைத் தமது குழந்தையிடத்துக் காட்டி, அக்குழந்தையால் தாயென்றும், தந்தை யென்றும் தாம் அழைக்கப்பெற்றுப் பெற்றோர் எனும்பெரிய நிலைக்குத் தக்கோராகிப் பின்னர் பெரியோருமாகி, ஈசுவரனது அன்பின் ஒரு பகுதியைத் தம் வழியாக உலகுக்குக் காட்டுவோரும் உணர்த்துவோருமாகின்றனர். இது இறைவன் மக்களிடத்தே தோற்றுவிக்கும் மகத்தான நன்னெறிப் பயிற்சியாகும்.

ஒரு குழந்தையைப் பெற்றளவில் தமது நலம் அனைத்தையும் மறந்து, அக்குழந்தையின் நலமே தமது நலமெனக் கொண்டு பழகும் பயிற்சி ஹா! எத்துணை உயர்நலஞ் சார்ந்தது? எத்துணைத் தெய்வ மணங் கமழ்வதாயுளது? ஒரு குழந்தையைப் பிறப்பித்த தக்ஷணமே அதற்குக் காரணமாக நின்ற் ஆணும் பெண்ணும் அந்த நிமிஷமே முதற்கொண்டு ஒரு புதிய தெய்வ வுருவினராகி உயரிய சுபாவங்களை ஏற்கின்றனர். இஃது உலகினிடை நிலவும் ஒரு ஆச்சரியகரமான நிகழ்ச்சி. இது ஈசனார் சித்தமுவந்து பாலித்த ஒரு அரிய வரன். இவற்றை யெல்லாம் நாம் ஆழ்ந்து ஆராயின் அளவிடற்கரியதோர் இன்பப் பெருக்கே.

நம் முன் எதிர்படும் தந்தை இப்பொழுது ஒரு ஒண்டியாள்; ஒரு தனித்த மனிதராவர். அவருக்குத் தற்காலம் துணையாயிருப்பது நமது அன்னை ஒருத்தியே. நம்மைப்போல் அவரும் சிறு குழந்தையாய்த் தமது பெற்றோர்களுடன் கொஞ்சிக் குலவி மகிழ்ந்து இன்பம் பூத்த காலமும் ஒன்று முன்பு இருந்தது. அன்னோரெல்லாம் ஒருவர் பின்னொருவராய் மறைந்து போயினர். எஞ்சி நிற்கும்

உள்ளத்துக்குச் சிறுமை உயிர்ச்சேதத்திலும் பெரியகேடாகும்.

சிலருடனே நமது தந்தை நம்மையே பெருந்துணையாய் நம்பி, தாம் முன்பு அன்பு வைத்தவர்களை யெல்லாம் நமனுக்குப் பலிகொடுத்த துயரப் பெருக்குகளை நம் மூலமாக ஆற்றிக் கொள்ள நினைத்து நம்மையே அவை யாவற்றிற்கும் அடைக்கலமாக அவர் கருதி நாட்கடலைப் போக்கி வருகின்றார். இத்தகைய தந்தைக்கு நாம் எத்துணை விநயமாயும் அன்பாயும் நடந்து அவரை மகிழ்விக்க வேண்டுமென்பதை நமக்குள் நாமே எண்ணிப்பார்த்துக் கொள்ளக் கடவோம். அவ்விதம் எண்ணி, இம்பொழுது நாம் நடந்துவரும் தவறுகளையும் சிந்தித்து நாம் நம்மைத் திருத்திப் புதுப்பித்துக் கொள்ளவுங் கடவோம்.

சின்னவோர் பொருடந் தோரைச்
சீவனுள் ளளவுமுள்ளத்
துன்னவே வேண்டு மென்ன
வுரைத்தனர் பெரியோர்; தேகந்
தன்னையா ருயிரைச் சீரார்
தாணியின் வாழ்வைத் தந்த
வன்னைதந் தைக்குச் செய்யு
மருங்கைம்மா றுளதோ வம்மா.

சிறிய ஒரு பொருள் கொடுத்தவரைப் பிராணனுள்ள மட்டும் மனதில் நினைக்க வேண்டு மென்று பெரியோர் சொல்லி யிருக்கிறார்கள். அப்படியிருக்க, தேகத்தையும், தேகத்திலுள்ள உயிரையும், செல்வம் பொருந்திய உலகவாழ்வையும் கொடுத்த தாய் தந்தையர்க்குச் செய்யும் அருமையாகிய பிரதியுபகார முண்டோ? இல்லையென்க. தாய் தந்தையர் செய்த பேருதவிக்கு என்ன செய்தாலும் அதற்கு ஈடாகாதென்பது மேற் சொன்ன பாடலின் பொருள்.

சகல உலகங்களையுங் காப்பாற்றும் கடவுளைப் புகழவேண்டுமானால் அப்பனே, தாயே என்று சொல்வோம். அந்தத் தந்தை தாயரையே புகழவேண்டுமானால், அதற்கு உவமான முண்டோ? ஆதலால் உலகத்தில் கண்ணுற் காணப்படும் சொல்லுதற்கரிதான தெய்வமாகிய தந்தை தாய்களின் சிறப்புப் பொருந்திய பாதாரவிந்தங்களை நெஞ்சமே நீ எப்போதும் போற்றி வரக்கடவாய்.

வைத்தவர்களுடைய மனது சந்தோஷப் படும்படி புஷ்பத்தையும் நிழலையும், பழத்தையும் கொடாத மரத்தை வெட்டி நெருப்பிற் போடுவதுபோல, பெற்றுக் கையிலேந்திப் பாதுகாத்த ஆசையுள்ள தாய் தந்தைகளை ஆதரிக்காத பைத்தியக்காரைக் கடவுளானவர் கொன்று பெரிய நரகமாகிய நெருப்பிற் போட்டு சிக்ஷிப்பாரென்பது திண்ணம்.

நம்மைப் பெற்றவர்கள் நம்மாலடைந்த எண்ணிக்கை யில்லாத துன்பங்களுக்கு விஸ்தாரமான மூன்றுலகத்தையும் கொடுத்தாலும் ஒப்பாகா. விருத்தாப்பி யத்தினாலும், இளைப்பினாலும் அவர்கள் சொன்ன கொடிய சொற்களைக் கரும்பிலிருந்து உண்டாகும் இனிமையான பாகென்று எண்ணி, அவர்கட்கு ஓர் ஊன்றுகோல்போல் நின்று அவர்களை ஆதரித்து, நெஞ்சமே அத்தாய்தந்தையர்க்கு ஊழியஞ்செய்யக் கடவாய்.

இவ்வுலகத்தில் பிரதியுபகாரத்தை இச்சிக்காமல் ஒருவரும் ஓர் உதவியும் செய்யமாட்டார்கள். அப்படியிருக்க, தங்கள் பிள்ளை உயிர்வாழுமென்றும், செத்துப் போகுமென்றும்

புண்பட்ட மனம் ஆறுகிற நாட்களுக்கு முந்தியே புண்படுத்தியவர்கள் மறுபடியும் வந்து சந்தித்தால் அப்போது பேசுவதற்கு மனமில்லாமலே இருந்துவிட, அவர்களும் வருத்தமாய் புறப்பட நேர்கிறது.

தங்களுக்குத் தேகத்தளர்ச்சி யுண்டாகும்போது தங்களை ஸம்ரக்ஷணை செய்யுமென்றும், அல்லது ஸம்ரக்ஷிக்காதென்றும், அத்தன்மைகளைக் கொஞ்சமேனும் கருதாமல், தாய் தந்தையர் தங்கள் பிள்ளைகளை உரிமையாக வளர்க்கும் பிரியமானது சொல்லுந்தன்மை யுடையதல்ல.

உலகத்தில் தாய் தந்தைகள் பாவம் செய்தாலும், புண்ணியம் செய்தாலும் விரதங்கள் அனுஷ்டித்தாலும், தேகம் வருத்தப்பட வேலை செய்தாலும், ஒரு மருந்து சாப்பிட்டாலும், சந்தோஷப்பட்டாலும், துன்பமடைந்து வருத்தப்பட்டாலும், மனதிலொன்று நினைத்தாலும், தங்கள் நிமித்தமாக வல்லாமல் தங்கட்கு இனியராகிய பிள்ளைகளின் நிமித்தமே அவைகளைச் செய்பவர்களாகிறார்கள்.

நிலையற்ற தேகத்துடனும், நிருவாணத்துடனும், அழுவதைத் தவிர ஒன்றைப் பேசவும் செய்யவு மறியாத நுட்பமாகிய சிறிய தேகத்தையுடைய குழந்தையானது பெரிதாகி, இவ்வுலகத்திற் பிழைக்கும்படியான மார்க்கங்களையெல்லாம் செய்து, தங்களுயிரை விட விசேஷமாகக் காப்பாற்றும் மெய்யான பட்சத்தையுடைய தாய் தந்தைகளைப்போ லொத்தவர்கள் நெஞ்சமே! இந்தப் பூமியிலுண்டோ? இல்லை யில்லை.

விருத்தாப்பியத்தினால் சோர்வடைந்த தாய் தந்தைகள் சில சமயத்திற் சொல்லும் கொடிய சொற்களைச் சகியாமல், அவர்கள் மீது அதிக கோபத்தைப் பாராட்டும் பாவியே நீ கேள், அத் தாய் தந்தையர் உன் நிமித்தம் உன் இளமைப் பருவத்திலடைந்த துன்பங்களுக்கு அஞ்சிக் கணப்பொழுது உன்னைப் பாதுகாக்காவிடில், நீ இவ்வளவு வளருவாயோ? இந்நாள் வரைக்கும் வாழ்வாயோ? இப்பொழுது கோபித்துக் கொள்வதுபோல்கோபிக்கவாவதுமுடியுமோ? எங்கேவாய்திறந்து சொல்?

ஒரு பெண் பஞ்சகாலத்தில் தன் தகப்பனுக்குத் தன் முலைப்பாலைக் கொடுத்துக் காப்பாற்றினாளென்றும், ஒருவன் தன் தந்தையைத் தோளில் தூக்கிவைத்துக் கொண்டோடித் தகப்பனுக்கு சத்துருக்களால் நேரிடவிருந்த துன்பத்தை நீக்கினானென்றும், ஒருவன் தன் பிதாவுக்காகத் தன் பிராணனைக் கொடுத்தானென்றும் பலவிதமாக ரோமாபுரி யென்கிற தேசத்தின் சரித்திரத்தில் சொல்லியிருப்பதை நாம் நன்கறிந்து அன்னோரை ஆதரித்து அவர்கள் ஆசி பெறுதல் நமது கடமையாம். தந்தையின் அன்பை எவ்விதம் ருசித்து அனுபவிக்வேண்டு மென்பதைப் பற்றி அடுத்த சஞ்சிகையில் பேசுவோம். (தொடரும்.)

இல்லை ! இல்லை !!

1. தடைக்கஞ்சாப் பாம்புக்கோர் ஆணையில்லை.
2. சாந்த மில்லா மூர்க்கருக்கோ புத்தியில்லை.
3. மடைக்கஞ்சா வெள்ளமதை மறிப்பாரில்லை.
4. மனம்போன போக்குக்கோர் வழியில்லை.
5. பூவை கண்ணீர் விருதாவிற் போவதில்லை.

பிரபஞ்ச விலாஸம்

1. மனதில் சிற்சில விஷயங்கள் மிக்க அபூர்வமாய் உதயமாகின்றன. ஆனால் அதை எழுதப்புகின் உள்ள தை உள்ளவாறு சொற்களில் விளக்கிக் காட்டத் தெரிவதில்லை, நினைத்த நினைவுக்குத் தக்கபடி பொருத்தமாய் எழுதவுங் கூடுவதில்லை. சிற்சிலருக்கு அதை அப்படியே வாயால் சொல்லவும் தெரிகிறதில்லை. அபூர்வமாய் இரண்டொருவருக்கே தங்களின் உள்ளெண்ணத்தை அப்படியே படம் பிடித்ததுபோன்று காட்டக்கூடிய சக்தி அருமையாய் அமைகிறது.

2. நெடுநாளாய்க் கடிதம் தமக்கு வரவில்லையென்று மிகமிக நொந்து பல பக்கங்கள் எழுதித் தபாலுக்கு அனுப்பிவிட்டு வீட்டிற்கு வந்ததும், அன்றையதினமே தான் எதிர்பார்த்தவரிடமிருந்து தனது கடிதத்திற்குப் பதில்போல் அவரது கடிதம் வந்து நிற்கிறது. அதைப் பார்த்ததும் ஏன் அவ்வளவு காரமாய் எழுதினேம் என்று மனது நோகிறார்கள்.

3. "தாய்மாமா" தான் உலகில் மிக்க சொந்தமுள்ள மாமா. தன் தாயைப்போன்ற உருவுள்ளவர். தாயினிடத்துக் காட்டக்கூடிய அதிகாரம் சிடுசிடுப்பு சேஷ்டைகள் எல்லாம் அவரிடம் செய்யலாம். அவருடைய தாய்போன்ற அன்பானது இவற்றைப் பேதமாய் எண்ணாது. அவரை அதிகாரமும் பண்ணலாம். அந்த அதிகாரத்துக்கும் அவர் அன்புடன் உட்படுவார். தாய் மாமனின் அன்பு ஒரு தனி அன்பு.

4. டாக்டருக்குத் தரவேண்டிய பணத்தை உடனே கொடுத்துவிடுகிறார்கள். அந்த எ. பி. ஸி. டி. தெரியாத நாட்டு வைத்தியனுக்கோ அவன் எவ்வளவு பாடுபட்டிருந்தாலும் அவனுக்கு அத்தனை தாராளமாகக் கொடுக்க மனம் வருகிறதில்லை.

5. ஒருவர் இருக்கும் நாள்வரையிலும் பலவாறு தூஷிப்பும் கோபித்திடலுமாம். அவர் இறந்த பின்னரோ அவரைப்போலவுண்டா என்று அவரது சீரிய குணங்களைச் சிறப்புடனே ஏற்றிப் போற்றுவர்.

6. செத்துப்போன நூலாசிரியர்களை மதிப்பார்கள். உயிருடனே இருந்து பலபாடுகள் படும் நூலாசிரியர்களைக் கண்ணெடுத்தும் பாரார்கள்.

7. சில பிரசுரகர்த்தர்கள் நூலாசிரியரின் வாயில் மண்போட்டு விட்டுத் தங்களின் விளம்பரத்தில் மட்டும் அவர்களை உயரத் தூக்கி வைத்துப்பேசி, அத்தகைய சிலாக்கியமுள்ளவர்களால் இந்த நூல் இயற்றப்பட்டது என்று வெளியிடுகிறார்கள். இது நூலாசிரியர்களிடத்து உள்ள அன்பாலல்ல. அவர்கள் எழுதித் தங்களுக்குச் சொந்தமாய்விட்ட புஸ்தகங்கள் நன்றாக விலையாவதற்காகவே இப்படி அவர்களைத் தூக்கி வைத்துப் பேசுவதாகும். இது ஒரு வியாபார ரகசியமாகும்.

8. விவாகத்தை ஒரு உருப்படுத்தித் திடப்படுத்தி இரு பக்கத்தாரையும் சம்மதிக்கவைத்து நடத்தி வைத்து விடுதலானது ஒரு தனிச் சாமர்த்தியமான குட்டிக்கரண வித்தையாகும். அதில் தேர்ச்சிபெற்ற விவாக தரகர்களுக்குத்தான் அது தெரியும்.

இகழ்ச்சியின் துன்பங்கள் நெஞ்சைத் தின்றுவிடுவதால், அதனால் ரோஷம் கொண்டு தன் வல்லமையை எதிரிக்குக் காட்டுவதற்காகச் "செயல்" செய்யப் புறப்பட்டு விடுகிறான்.

9. சந்தேகப்பட்ட மனதிற்கு சிலரையோ, அல்லது சில செய்கைகளையோ, சில வஸ்துக்களையோ கண்டாலும், அவர்களுக்குத் தங்களையும் அறியாமலே ஒரு சந்தேகம் மனதில் தோன்றிக்கொள்ள, பின்னுல் அதை ஆராயப்புகும்போது, முன்புகொண்ட சந்தேகம் சிற்சில சமயங்களில் பொய்யாகவும், சில சந்தார்ப்பங்களில் உண்மையாகவும் நேர்ந்துகொள்கிறது.

10. ஒருவன் எத்துணை விஸ்வாசகாதகனுனும், சிலரிடத்திலாவது அவன் விஸ்வாசம் கொண்டிருப்பான். இரண்டோரிடத்திலாவது அவனுக்குப் பிரியம் என்பது இருந்துகொண்டிருக்கும்.

11. கூர்மைப்புத்தி யுள்ளவர்களுக்கு இன்ன விதமாய் ஆரம்பிக்கிறதென்று கொஞ்சம் குறிப்பு காண்பித்தால் அதுவே போதுமானது. மற்றவர்களுக்கோ இடித்திடித்து இரண்டாயிரம்தரம் கூறினுலும் தெரிவது கஷ்டமே.

12. வெளித்தோற்றமான காரியங்களில் தான் பெரிய மனிதர்களிற் பலர் பெரிய மனிதத்தன்மையா யுள்ளார். உள்ளுக்கோ அழுகி நாறிக் கீழே போடும் சாக்கடையே. உத்தம சுபாவமுள்ளவர்கள் கொஞ்சமாகத்தான் இருப்பர்.

13. சாதாரண மனிதர் தமக்கு வெளிப்பகட்டில்லாவிடினும் நற்குணம், நல்லொழுக்கம், அடக்கம் முதலிய இணையற்ற ஆபரணங்களால் மேன்மை பெற்றிருக்கின்றனர்.

14. செல்வமுள்ள இடத்தில் வீண்செலவுகளும் அகம்பாவமும் அதற்குத் தகுந்த இணைதுணைகளும் கூடிக்கொள்ளுகிறது. ஏழ்மைத்தனமுள்ள இடத்தில் அடக்கமும், ஏக்கமும், செட்டும் அநியாய உழைப்பும் தொடர்கின்றன.

15. ஆணிலும்சரி, பெண்ணிலும்சரி, அழகு அதிகமாக இருந்தால் அவர்களுடைய சொல்லுக்குத்தான் ஒரு மதிப்பும் வெற்றியும் உண்டாகிறது.

சகோதரி மஹோரஞ்சினி தேவி.

தூர இருந்து எவ்வள நேசக் கடிதங்கள் எழுதிக்கொண்டாலும், சந்தித்து ஒருவர் முகம் ஒருவருக்குப் பிடித்த பிறகுதான் அந்த நேசம் உறுதிபெறும். வெகு கடிதங்கள் எழுதியவர் ஊரிலிருந்து வர, அச்சமயம் அவர் முகம் மனதிற்குப் பிடிக்காவிடில் உடனே பிரிவு தான். நேசமாய் எழுதிக்கொண்ட அத்தனை கடிதங்களும் வீணே. ஆனுல், மனைவியாய் வந்தவளின் முகம் பிடிக்காமற் போனுல் அதற்கு விடுதலை இல்லை.

ஈசன் செயல்.

"ஈசன் செயலிங் கிதுவாயின் என்செயலாம்!
ஈசன் அறியுநம தின்ப துன்பம்—ஈசன்
வரவிடுப்ப தெல்லாம் நன்மைக் கேன்றிருத்தல்
உரவர் தொழில் ஆகுமேன்றே ஓது."

"அமிர்த குணபோதினி பிரஸ்" 302, தங்கசாலைத் தெரு, சென்னை.